31-2

திருப்பரங்குன்றம் தலபுராணம்

திருப்பரங்குன்றம்

: ஸ்தல புராணம் :



மதுரை, மஞ்சனக்காரத்தெரு,
ஹரிஸமய திவாகரம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1931.

31-2

உ

ஸ்ரீ ஸத்யாசல ஸத்யகிரி க்ஷேத்ரம்

என்ற

திருப்பரங்குன்றம் ஸ்தல புராணம்.

மூலமும் உரையும்.

வித்வான்களால் மொழிபெயர்த்து
சோதனை செய்யப்பட்டு,

மதுரை ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேச்வராள்
திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் தேவஸ்தானம்
டிரஸ்டி மகா-௱-௱-ஸ்ரீ
R. துரைஸாமி நாயுடுகாரு மூலம்


மதுரையிலிருக்கும் பண்டுருட்டி
வேங்கடசாமி நாயுடு அவர்கள் குமாரத்தி
ஸ்ரீமதி கோவிந்தம்மாளின்
பொருள் உதவிகொண்டு,

மதுரையிலிருக்கும் திருவாதவூர்
ப. ராமஸ்வாமி ஐயரால்

மதுரை, மஞ்சனக்காரத்தெரு.
ஹரிஸமய திவாகரம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1931.

 [Price Rs. **1—8—0**



R. துரைஸாமி நாயுடு,

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வராள் தேவஸ்தானம் &

திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்ரஹ்மண்யஸ்வாமி தேவஸ்தானம்,

டிரஸ்டி, மதுரை.

உ

முருகன் துணை.

அறிவிப்பு.

"ஸத்யாசல"மெனப் புராணத்தில் கூறப்பட்டுள்ள "திருப்பரங்குன்றம்" க்ஷேத்ரம் மூர்த்தி தீர்த்த விசேஷங்களை வெளியிடும் இந்த ஸ்தல புராணத்தை, க்ரந்த மூலமும் தமிழ் உரையுடனும் அச்சிட்டு வெளியிட முயன்றுவந்ததில் அது சித்தமாகக் கொஞ்சம் தாமதப்பட்டது. அதனால் இது, நிர்விக்னமாய் முடிவுபெற அநுக்ரஹிக்க அனவரதமும் குஹஸ்வாமியை வேண்டிவந்தனம். அந்த ஸுப்ரஹ்மண்யரே பழனி முதலிய பல இடங்களிலும், தற்காலம் திருமங்கலத்திலும் சர்க்கார் தாசில்தார் உத்யோகம் வகித்து, உடல் பொருள் ஆவியினால் ஆண்டவனுக்கு ஈடுபட்டு, பூததயையால் பக்த கோடிகளுக்கும் பாமரர்களுக்கும் கைங்கர்ய ரூபமான பலவித தர்மங்களை நடத்திவரும் மகான் மகா-ள-ள-ஸ்ரீ R. துரைஸ்வாமி நாயுடுகோரைக் காட்டித்தந்தனர். அவர், ஈஶ்வர ஆக்ஞைப்படி இந்த விசேஷ தர்மத்திற்கும் பாத்திரரானார். உடனே கடவுள் க்ருபையால் அவர் மதுரை ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேஶ்வராள், திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் தேவஸ்தானங்கட்குப் பணிவிடை செய்யும் பொருட்டு, டிரஸ்டி ஆக நியமிக்கப்பட்டார்.

இவர் விசேஷமுள்ள இந்த ஸ்தல புராணத்தை ஏழைகளும் எளிதில் வாங்கிப் பயிலும்படி உபகாரஞ்செய்து இதின் கிரயத் தொகையை ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு விபூதி அபிஷேகத்திற்கு வினியோகப்படுத்தவும் தீர்மானித்தனர். இதற்காக இந்த பக்த சிகாமணி பலவிதங்களிலும் எடுத்துக்கொண்ட சிரமம் போற்றத்தக்கது. இவரது நன்முயற்சியின் பலனாக முருகக்கடவுள் அநுக்ரஹிக்க, இந்தப் புராணம் புஸ்தக ரூபமாக விரைவில் வெளிவந்தது. இதுவும் வியக்கத்தக்கதே. பக்தாநுக்ரஹபரரான பகவானின் லீலாவினோதங்களைப் புராண மூலமாய் யாவரும் தெரிந்து கொண்டாடத்தக்க தருணமேற்படுத்திய இந்தப் பக்தசிகாமணிக்கு

எல்லோரும் நன்றி பாராட்டுவாராக. இவருக்குத் தீர்க்காயுளும் அபீஷ்டஸித்தியும் அசஞ்சல பக்தியும் மேன்மேலும் தர்ம சிந்தையும் ப்ரஸாதித்து அருளும்படியாய் ஈசனை ப்ரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு விபூதி அபிஷேக கைங்கர்யஞ் செய்யவேண்டுமென்று கருதியிருந்த (மதுரை மேலாவணிமூலவீதி பச்சரிசிக்காரச்சந்திலிருக்கும் பண்டுருட்டி வெங்கடசாமி நாயுடவர்கள் குமாரத்தி) ஸ்ரீமதி கோவிந்தம்மாளுடைய பாக்ய விசேஷத்தை என்னென்போம். இந்தப் புராண நூலிற் கிடைக்கும் ஊதியமும் விபூதி அபிஷேகக் கைங்கர்யத்திற்காமென்பதறிந்த இந்த அம்மாள் இந்நூலிற்குரிய பொருளுதவி முழுமையுஞ்செய்தது இக்காலத்தில் அருமையாம். இந்த அம்மாள் செய்த உதவியானது, மேற்குறிப்பிட்ட கைங்கர்யபலனைத்தருவதோடு எல்லோரும் குமரக்கடவுளின் திருவிளையாடலின் பெருமையைப் பயின்றுய்யத்தக்க வித்யாதாந பலனையுந் தருகிறது. இங்ஙனம் ஒரு பேருதவியால் இருபேறெய்து மேல் இருநிலங்கொண்டாடுமன்றோ! இத்தகைய தருமத்தைச் செய்த இந்த மாது சிரோமணிக்கு முருகக்கடவுள் இம்மையில் இஷ்டஸித்திகளையும், மறுமைப்பலனையுங் கொடுத்தருள்புரிவாராக.

திருப்பரங்குன்றத்திலிருந்த காசிவாஸி ஸ்ரீலஸ்ரீ சேந்திநாதையரவர்களும் அவர் தம்பி சம்புநாதையரவர்களும் மனத்தினலும் சரீரத்தினலும் இந்நூல் விஷயத்திற்செய்த உதவி என்றும் மறக்கத்தக்கதில்லை.

இந்த ஸ்தலபுராணத்திற்கு முகவுரை எழுதி உதவிய, மதுரை திருஞானஸம்பந்தமூர்த்தி ஆதினம் தமிழ் வித்வானும், மதுரை ஸெயின்டுமேரி ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதருமான மகா-ள-ள-ஸ்ரீ கோவிந்தசாமி ஐயரவர்களுக்கு மனமார்ந்த வந்தனமுரியதாகுக.

இந்தப் புஸ்தகம் அச்சிடும் விஷயத்தில் மதுரை "ஹரிஸமய திவாகரம்" அச்சுக்கூடத்தின் அதிகாரிகளும் சிப்பந்திகளும் எடுத்துக்கொண்ட சிரத்தையையும் சிரமத்தையும் அறியும் ஸ்ரீஹரியே அவர்களுக்குக் கைமாறு சாற்கப் பிரார்த்தனை.

இந்தப் புஸ்தகம் எதிர்பாராதபடி வெகு விரைவாய் அச்சிட்டு வெளியிடப்பட்டிருப்பதால் சோதித்துப் பிழைகள் திருத்தக் கொஞ்சமும் சாவகாசம் நேராதொழிந்தது. அதற்கு வருந்துகின்றனம். இதிற்கண்ட பிழைகளைப் பெரியோர்கள் பொறுத்தருள்க. இனி மறு பதிப்பில் இதனை நன்கு சோதித்து வெளியிடலாகும்.

மதுரை.
ப்ரஜோத்பத்தி௵
சித்திரைமீ

ப. ராமஸ்வாமி ஐயர்.

உ

முருகன் துணை.

முகவுரை.

உலகத்தில் தோன்றிய மனிதர்கள் நன்மை தீமை உணர்ந்து உய்யும் பொருட்டு பரமேசுவரன் அருளிய கலைகள் பதினெட்டு எனப் பெரியோர் பகருவர். அக்கலைகளாவன:— வேதம் நான்கு, வேதாங்கம் ஆறு, உபாங்கங்கள் நான்கு, உபவேதம் நான்கு என்பனவாம். அவற்றுள் புராணமென்பது உபாங்கம் என்னும் பகுதியைச் சார்ந்ததாகும். இறைவன் அருளிய வேதங்கள் கவர் பொருள் பட்டுச் சந்தேகிக்கநின்ற இடத்துப் புராணங்களைக்கொண்டு தீர்மானிக்கவேண்டுமென்று சிவ மகா புராணத்திலுள்ள வாயு சங்கிதை பூர்வ பாகம் முதலாவது அத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ளது. இதனை யுணர்ந்த பெரியோர் வேதத்திலும் புராணம் மிகுந்த பலமுடையதென்று கூற ஒரு சிறிதும் பின்னிடார். புராணம் என்னும் சொல் பழைமையுடையது என்னும் பொருட்டு. அதனை இங்குப் பழமை சான்ற வரலாறுகளைக் கூறும் நூலுக்கேற்றி வழங்குவார்கள். அப்புராண நூல்கள் உலகத்தின் தோற்றம், ஒடுக்கம், முனிவர் அரசர்களின் வழிமுறை, அவர்கள் சரித்திரம், மந்வந்தரம் என்னும் ஐந்து விஷயங்களையும் தம்பால் விரவிக்கொண்டிருத்தலை இலக்கணமாகவுடையன என்பர் நூலுணர்ந்தோர்.

இத்தகைய இலக்கணம் அமைந்த புராணங்கள் அஷ்டாதசமெனக் கணக்கிடப் படுவனவாம். அவை யாவும் வேதவியாசரால் வடமொழியிற் செய்யப்பெற்றனவாம். அப்பதினெண் புராணங்களுள், இறைவன் திருக்கோயில் கொண்டருளும் சிற்சில தலங்களின் மான்மியம் உரைக்கப்படும் பகுதிகள் உள்ளன. அந்தந்தப் பாகங்களைத் தனித்தனியே வேறு பிரித்து அந்தந்தத் தலங்களின் பெயரோடு சார்த்திப் பிற்காலத்திய ஆன்றோர் அவற்றிற்குத் தல புராணமெனப் பெயரிடலாயினர். இப்படிப்பட்ட தல புராணங்களில் ஒன்றுகும் திருப்பரங்கிரிப் புராணம்.

இப்பரங்கிரி உலகத்திலுள்ள ஆன்மகோடிகள் உய்யும்பொருட்டு, குன்றமெறிந்த குமரவேள் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும், ஆறுபடை வீடுகளில் முதற்படை வீடாகும். என்று தொட்டு மதுரையோ அன்று தொட்டு இப்பரங்கிரியும் தமிழ் நாட்டில் தலைநின்ற புகழ்வாய்ந்ததாகும். கலியுக வரதனாய், தன்னை வழிபடுவோர்களுக்கு வேண்டிய இஷ்டஸித்திகளை யீந்தருளும் முருகப்பெருமான் எழுந்தருளும் பெருமையுடையது. மதுரையிலிருந்த கடைச்சங்கத்துத் தமிழ்ப் புலவர்களின் திலகமான நக்கீரரால் "கூடற்குடவயின்......" என்று தாம் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் புகழ்ந்துரைக்கப்பட்டது. சைவசமயாச்சாரியர்களின் பாடல் பெற்றது. தலம், தீர்த்தம், மூர்த்தி விசேடங்கள் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றது. இவ்விசேடங்களைப் புராணத்தை ஒருவர் படிக்கின் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதில் விளங்கும்.

இப்புராணம் வடமொழியிலிருந்து வந்தது. அதனை வடமொழியிற்றேர்ந்த வல்லுநரன்றி மற்றையோர் உணர்தற்கில்லாதிருந்தது. அப்பெருங்குறையை நீக்குவான் வடமொழி சுலோகமும் அதன் தமிழ் மொழிபெயர்ப்புமாகச் சேர்த்து வெளியிட வேண்டுமெனக்கருதி அப்பதியில் முருகப்பெருமான் திருவருளைப் பெறும்பொருட்டு வாசஞ்செய்துகொண்டிருந்த ப்ர்ம்மஸ்ரீ ப. ராமசாமி ஐயரவர்கள் தக்க வடமொழி விற்பன்னரைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து வெளியிட்டது நம்மவர் செய்த புண்ணியமென்றே சொல்லவேண்டும். அவர்களுக்கு மும்மைப்பயனு மளிற்றருளும் முழுமுதற் கடவுளாகிய முருகப்பெருமான் நீண்ட ஆயுளையும், திடகாத்திரத்தையும், சகல சம்பத்துக்களையும் அளித்தருள்வாராக.

சுபம்.

மு. கோவிந்தசாமி ஐயர்,

மதுரை.

உ

ஹரி: ஓம்.

ஸ்ரீ கணேசாய நம: ॥



விக்நத்வாந்த நிவாரணைகதரணிர் விக்நாடவீஹவ்யவாட்
விக்நவ்யாலகுலாபிமாநகருடோ விக்நேபபஞ்சாநந: ।
விக்நோத்துங்ககிரிப்ரபேதநபவிர் விக்நாம்புதௌ வாடவோ
விக்நாகௌககநப்ரசண்டபவநோ விக்நேஶ்வர: பாது ந: ॥



ஷண்முகம் ஷட்குணம் சைவ காரணம் காருண்யஹர்ஷணம் ।
தேவஸேநாபதிம் வந்தே ஸர்வகார்யார்த்த ஸித்தயே ॥

ஶ்ரீ மஹா கணபதயே நம: ॥

பாரிஜாதஸம வஜ்ராங்க்ரே பங்கஜப்ரதிமானந ।
வமாராதி ஸம்பதா நாய த்ராஹி மாம் ஶிகிவாஹந ॥ (1)

ப்ரஹ்மாரஜந ஸந்தோஹ மோஹாரக ஸம்ஸ்துதப்ரிய ।
மஹஸ்ரித ஸாம்போஜ த்ராஹி மாம் ஶிகிவாஹந ॥ (2)

வரதாபய ஹஸ்தாப்ஜ ஜிதமந்மத விக்ரஹ ।
ஜயஶீல ஜிதாமித்ர த்ராஹி மாம் ஶிகிவாஹந ॥ (3)

ஸதாஶிவ லலாடாக்ஷ ஜாதரத்ந களேவர ।
காருண்ய பூர்ணஹ்ருதய த்ராஹி மாம் ஶிகிவாஹந ॥ (4)

பார்ஷதகந்யாரமண பார்ஶ்வஹ்ருத நிஷேவித ।
சந்த்ரமஹீதாஸார த்ராஹி மாம் ஶிகிவாஹந ॥ (5)

ஹிமாத்ரி தநயாபுத்ர ஸர்வாஸுர நாயக ।
ஶ்ரீதபக்தயார தளஹித த்ராஹி மாம் ஶிகிவாஹந ॥ (6)

கலேநக கோடி ப்ரஹ்மாண்ட ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகாரண ।
மோதாத் கடமதேதேவ த்ராஹி மாம் ஶிகிவாஹந । (7)

ஸ்கந்தாய பந்தாய பார்வதீநந்தநாய பார்ஶ்வாரவிஜாயத மோபநாய ।
ஶிவாபமாத்ரே ஸ்மிதகேதநாய நமோ நம: ஶங்கர ஸம்பவாய ॥
(8)

ஸ்ரீ கு௨ஹாய நமஃ ॥

விக்ஞாபனம்.

"ஸ்ரீ ஸத்யாசல க்ஷேத்ரம்" என வடமொழிப் பெயர் புனைந்துள்ள திருப்பரங்குன்றத்தின்கண் இக்கலியில் ப்ரத்யக்ஷ வரதரென ஸான்னித்யமாய் விளங்கும் ஸ்ரீ ஸு௨ப்ரஹ்மண்யமூர்த்தி யின் மகிமை, அந்தக்ஷேத்திரம் அங்குள்ள தீர்த்தங்களிவைகளின் பெருமை, இத்யாதி வைபவங்களடங்கிய இச்சிறந்த புராணத்தை மொழிபெயர்த்தச்சிட்டு வெளியிட எண்ணங்கொண்டு முயன் றிருந்த மதுரை பிரஹ்மஸ்ரீ வேங்கடேஶ்வர தீக்ஷிதர் அவர்களின் மனோபீஷ்டம் காலகதியால் நிறைவேறுமற் போனபடியால், அவர் குமாரர் ப்ரஹ்மஸ்ரீ மகாதேவதீக்ஷிதரிடமிருந்து கிடைக்கப்பெற்ற (இஞ்சிக்கொல்லை ப்ரஹ்மஸ்ரீ ராமசந்திர சாஸ்த்ரிகளால் மொழி பெயர்க்கப்பட்ட) த்ராவிட வ்யாக்யான ஸஹிதமாயுள்ள அப்பிரதி யையும், ஸத்யாசல வாஸியான ப்ரஹ்மஸ்ரீ ஸு௨ப்ரஹ்மண்ய கன பாடியிடமிருந்து கிடைக்கப்பெற்ற அபூர்வமான ஓலைப்பிரதிமூலத் தையும் ஒத்துப்பார்த்து, வித்வான்களின் பேருதவியால் சோதனை செய்து இதனை அச்சிட்டு வெளியிடமுயன்றது, சதுர்வித புரு ஷார்த்தங்களையுமளிக்கும் ஸாக்ஷாத் ஸ்ரீ ஸு௨ப்ரஹ்மண்ய ஸ்வாமியி னுடைய பாதகமலங்களை அனவரதமும் த்யானஞ்செய்துகொண் டிருக்கும் பக்தகோடிகளுடன், பூவுடன்சேர்ந்த நாரும் மணம் பெற்றதென்றாற்போல் என்போன்ற பாமரர்களும், மூர்த்திவிசே ஷம் தீர்த்தவிசேஷங்களைத் தெரிந்து நீராடி பக்தானுக்ரஹபரரான ஸ்ரீ ஸ்கந்த மூர்த்தியைக் கண்ணாரத் தரிசித்து வாயாரப்போற்றி மனமார ஆனந்தக் களிப்புற்று, பக்தபரிபாலகரான ஸ்ரீகுஹ கரு

ஞாநிதியின் க்ருபா கடாக்ஷத்திற்குப் பாத்ர பூதர்களாகவேண்டு மென்ற இச்சிற்றறிவுடையோனின் பேரவா வொன்றே.

எவ்விதத்திலும் யோக்கியதையற்ற இச்சிறியேனை, முடவன் கொம்புத்தேனுக்காசைப் பட்டாற்போன்றுள்ள இப்பெருங் காரியத்தில் ப்ரவர்த்திக்கும்படி தூண்டின என் நண்பர்களுக்கும், மூல முறைகளைசோதனை செய்துதவிய வித்வான்களான [சோழவந்தான் ப்ரஹ்மஸ்ரீ சங்கரசாஸ்த்ரிகள், மதுரை ப்ரஹ்மஸ்ரீ கீழ்மங்கலம் கிருஷ்ண சாஸ்த்ரிகள், மதுரை ப்ரஹ்மஸ்ரீ மீநாக்ஷிஸுந்தர சாஸ்த்ரிகளாதி] பெரியோர்களுக்கும் ஹ்ருதய பூர்வமாய் வந்தனமளித்து, இப்புஸ்தகத்தை ஸ்ரீவல்லீதேவஸேநாஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் பாதாரவிந்தங்களில் ஸாஷ்டாங்க நமஸ்கார பூர்வமாய் ஸமர்ப்பிக்கின்றேன்.

மகான்கள் இதிலுள்ள எவ்வித குற்றங்குறைகளையுங் கொள்ளாது ஸ்ரீ குஹஸ்வாமியின் குணகணங்களென்று பாராட்டுவதுடன், இனிவரும் பதிப்பு குற்றமற்று வெளிப்படும் பொருட்டு அவைகளைக்காட்டித் திருத்திக்கொடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ப்ரமோதூதஹு
தை-மீ
மதுரை.

ப. ராமஸ்வாமி.

உ

ஶ்ரீமதே குமாரஸ்வாமினே நம: ॥

ஶ்ரீ ஸத்யாசல க்ஷேத்ர மாஹாத்ம்ய விஷய ஸூசிகா ॥

ஸத்யாசலமென்னும் திருப்பரங்குன்ற க்ஷேத்ரமாகாத்மியத்திற் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களின் குறிப்பு :—

(1) முதலாவது அத்யாயம் :—

ஸாக்ஷாத் பரமேஶ்வரர் பார்வதிதேவியாருக்கு உபதேசித்தருளிய ஆறெழுத்து மந்திரத்தின் லக்ஷணத்தை, தாயார் மடிமீதமர்ந்திருந்த பாலஸுப்ரஹ்மண்யர் க்ரஹித்துக்கொண்டு, தம் பிதாவாகிய பரமசிவனுக்கு ப்ரணவத்தின் பொருளைப் பின்னர் உபதேசித்தமையால் "குமரகுரு" என்னும் திருநாமம் பெற்ற விவரம் கூறுகின்றது.

(2) இரண்டாவது அத்யாயம் :—

க்ஷேத்ரோத்பத்தி ; தீர்த்தமகிமை; குமார ஸ்வாமி தவம்புரிதல்; பரமேஶ்வரன் "ஸத்யேஶ்வரர்" என்னும் திருநாமம் பூண்டு குமாரஸ்வாமிக்கு ப்ரஸந்நராய் அநுக்ரஹித்தல்; பிதாவுக்கு மந்த்ரோபதேசஞ் செய்ததால் குமாரஸ்வாமிக் கேற்பட்ட தோஷ நிவிர்த்தி; ப்ரஹ்மதேவரால் நடத்திவைக்கப்பட்ட புஷ்யோத்ஸவ மஹிமை, இவ்விவரங்கள் கூறப்படுகின்றன.

(3) மூன்றாவது அத்யாயம் :—

காம்பில்யதேசாதிபதியான சிபிசக்ரவர்த்தியானவர், காசி முதல் ஸேதுபர்யந்தம் தீர்த்தயாத்ரை செய்து வருங்கால் ஸத்யாசல க்ஷேத்ரத்தை யடைந்ததும் அங்கு ஏற்பட்ட ஆகாசவாணியைக்கேட்டு கௌதமமாமுனிவரால் விதிக்கப்பட்ட தர்மாநுஷ்டானஞ் செய்து, காஶ்மீரதேசத்திலிருந்து ஐந்நூறு ப்ராஹ்மணர்

களை ரதத்திலேற்றித் தருவித்து அவர்களுக்கு க்ருஹதானம் செய்யும்பொழுது ஒருவர் குறையக்கண்டு மன்னவன் மனம் வருந்துங்கால், ஸாக்ஷாத் பரமசிவன் ப்ராஹ்மண வேஷம் தரித்து "ஸத்யாசலாதீசர்" என்னும் திருநாமம் பூண்டு, மனைவி மக்களுடன் சிபிசக்ரவர்த்தி முன்தோன்றி க்ருஹதானம் பெற்று சக்ரவர்த்தியை ஆசீர்வதித்த விவரம் கூறுகின்றது.

(4) நான்காவது அத்யாயம் :—

தைவத்யுதி முனிவர் காலவமகரிஷிக்கு ஸத்யாசல க்ஷேத்ரத்தின் மாகாத்ம்யத்தை எடுத்துரைத்தல்; கல்பக விநாயகர் உற்பத்தி; ப்ரஹ்மதேவர் ஸரஸ்வதியை மணம் புரிந்து ஸ்ருஷ்டிகர்த்ருத்வ மடைதல்; அவர் கல்யாணத்திற்கு வந்த மகாவிஷ்ணு "வித்ருமாஸ்ய" ரென்னும் திருநாமத்துடன் ஈஶ்வர ஸந்நிதானத்தில் மேற்கு முகமாய் வீற்றிருத்தல்; சாமுண்டியென்னும் துர்க்காதேவி தவம் புரிந்து மஹிஷாஸுரனை வதஞ்செய்து ப்ரதான தேவதையாய் வடக்கு முகமாய் வீற்றிருத்தல்; திராவிட அரசனாகிய "கோவிதாரத்வஜ"னுக்கு அகஸ்திய மகரிஷியின் சிஷ்யரான "ப்ரஹ்மிஷ்ட" ராலேற்பட்ட சாபமாகிய வெண்குஷ்டம் நிவிர்த்தியானது, முதலிய விவரங்கள் கூறப்படுகின்றன.

(5) ஐந்தாவது அத்யாயம் :—

ஸத்யாசல க்ஷேத்ரத்தில் ஒன்பது தீர்த்தங்களுண்டான விவரமும், அவைகளின் வைபவங்களும், அதில் தபோதனர்களான அகஸ்த்யாதி முனீஶ்வரர்கள் வாஸமும், கிரிப்ரதக்ஷண (மலைப்ராகார)த்தின் மகிமையும், கார்த்திகை ஸோமவார மகிமையும் கூறப்படுகின்றன.

(6) ஆறுவது அத்யாயம் :—

வஸிஷ்டமாமுனிவரி னுத்தாவின்படி ஹரிச்சந்த்ரமகாராஜன் தீர்த்தாடனம் செய்யும்பொழுது வ்ருத்தாசலத்தில் ரோமசமுனிவரைத் தரிசித்து அவரால் ஸத்யவ்ருதம் உபதேசிக்கப்பெற்றுப் பின் ஸத்யாசலத்தில் கௌதமமுனிவரைத் தரிசித்து, அவாநுக்ர

ஹித்தபடி ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமியை அபிஷேக நிவேதநாதிகளால் பூஜை செய்து நமஸ்கரித்து, மண்டபங்கள், ப்ராகாரங்கள், திருமதில்கள், கோபுரங்கள் முதலியவற்றுடன் ஸ்வாமிக்குத் திருக்கோயில் கட்டுவித்து, மகாரதமும் நிர்மாணம் செய்வித்து, சிவத்விஜர்களால் பூஜைகள் நடப்பித்து, தைமாஸம் சுக்லபக்ஷம் உத்தரட்டாதி நக்ஷத்ரத்தன்று மஹோத்ஸவம் ஆரம்பித்து ஸகல வைபவங்களுடனும் ஸ்வாமியை எழுந்தருளச்செய்து, புனர்வஸு நக்ஷத்ரத்தன்று ரதோத்ஸவமும், புஷ்ய நக்ஷத்ரத்தில் தீர்த்தோத்ஸவமும் நடத்தி வைத்து, குஹஸ்வாமிக்கு விலையுயர்ந்த திருவாபரணங்களளித்த விவரமும், அவர் "ஸத்யதீர்த்த"த்தில் ஸ்நாநம் செய்து ஸத்யவ்ருதம் த்ருடமாகப்பெற்ற விபரமும்; மாகஸ்நாந மகிமையும்; தாரகமந்த்ரோபதேச ப்ரபாவமும்; ஸ்ரீராமபிரான் தரிசன வரலாறும்; மற்றும் க்ஷேத்ர மாகான்ம்யமும் கூறப்படுகின்றன.

(7) ஏழாவது அத்யாயம் :—

ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலிருந்த சங்கப்புலவர் தலைவரான நக்கிர கவி தினந்தோறும் திருப்பரங்குன்றத்திற்கு வந்து சரவணப்பொய்கையில் நீராடி கிரிவலம்வந்து, கல்விச்செருக்கால் முருகக்கடவுளைத் தரிசியாது மதுரைக்குத் திரும்பியதால் சிக்ஷிக்கப்பட்டு அகங்காரம் நீங்கி குஹஸ்வாமியை ப்ரார்த்திக்க, ப்ரபு ப்ரஸந்நராய் நக்கிரருக்கு அநுக்ரஹித்து, கங்காஸ்நாநம் செய்யவேண்டுமென்று அவர் பிரார்த்திக்க, குஹஸ்வாமியின் ஆஞ்ஞைப்படி மலையின் உச்சியில் பாதாளகங்கை ப்ரவஹித்த விவரங்கள் கூறப்படுகின்றன.

(8) எட்டாவது அத்யாயம் :—

அவ்விதம் மலையின் உச்சியில் ப்ரவஹித்த பாதாளகங்கையில் ஸ்கந்தமூர்த்தி ஸ்நாநம் செய்து, நக்கிரரையும் வீரபாகு முதலிய கணநாயகர்களையும், மற்ற தேவர் முனிவர்களையும் ஸ்நாநம் செய்ய விடை கொடுத்து மறைந்தது; க்ருத்திகா ஸோமவார மகிமையைக்கேட்டு, தேவர்கள் மகரிஷிகள் சக்ரவர்த்திகள் எல்லோரும் அன்று வந்து அந்த பாதாள கங்கையில் ஸ்நாநஞ்செய்து, தங்களாலியன்ற தானங்கள் கொடுத்து, முருகனைத் தரிசித்தது;

ப்ரஹ்ம தேவரிடமிருந்து க்ஷேத்ரமகிமையைக் கேட்ட நாரதமா முனிவர் ஸத்யாசல (திருப்பரங்குன்ற)த்தை யடைந்து முருக பிரானைத் தரிசித்து அக்கடவுள் கைவல்யப்பொருளை உபதேசித் தருளப்பெற்று அவர் ஸமீபத்திலேயே இருந்தது; இத்யாதி விவரங்கள் கூறப்படுகின்றன.

(9) ஒன்பதாவது அத்யாயம் :—

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யப்பெருமான் அகஸ்த்யமாமுனிவருக்கும் நாரதமாமுனிவருக்கும் அநுக்ரஹித்த ப்ரகாரம், தத்வஸ்வரூபங்களை நந்திகேச்வரர் ஸநத்குமார மகரிஷிக்கு உபதேசித்த விவரம் கூறுகின்றது.

(10) பத்தாவது அத்யாயம் :—

"விச்வாசி" என்னும் அப்ஸரஸ்த்ரீக்கேற்பட்ட நாரதமா முனிவரின் சாபவிமோசனம் கிடைத்த விவரமும்; மகாபக்திமானாகிய "ராஜசேகரன்" என்னும் காஞ்சீபுரத்தரசன் தாந்த்ரிகமதாசாரத்தைக் கைக்கொண்டதால் அவனுக்குக்கிடைத்த நரகவாதனையும் பிசாசு ஜன்மமும் தீரப்பெற்ற விவரமும் கூறப்படுகின்றன.

(11) பதினோராவது அத்யாயம் :—

தேஜோரூபியாய் நின்ற ஸாக்ஷாத் பரமசிவன் முடிதேடிப் பொய்ம்மொழி புகன்ற ப்ரஹ்மதேவருக்கேற்பட்ட சாபவிமோசனம், அவர் திருப்பரங்குன்றத்திற்கு வந்து மூன்று அச்வமேத யாகமும் கோடிலிங்க ப்ரதிஷ்டையும் செய்ததாற்பெற்று, கார்த்திகை மாஸம் க்ருத்திகா நக்ஷத்ரத்தன்று குஹஸ்வாமிக்கு ரதோத்ஸவம் நடத்திவைத்து, பசுபதியால் அநுக்ரஹிக்கப்பட்ட விவரமும், க்ஷேத்ர மகிமையும், க்ருத்திகாவ்ருத அநுஷ்டான க்ரமமும், அதன் பலனும், கூறப்படுகின்றன.

(12) பன்னிரண்டாவது அத்யாயம் :—

ஷண்முகநாதன், சூரபத்மன் முதலிய அஸுரர்களை ஸம்ஹரித்துவிட்டு வந்து திருச்செந்தூரில் தங்கிச் சற்று சிரமபரிகாரஞ்

செய்துகொண்டு, பின் திருப்பரங்குன்றத்திற் செழுந்தருளுங்கால், அரக்கர் இடுக்கண்களைந்து தங்களுக்கு க்ஷேமம் விளைவிக்கப் பெற்ற மகாவிஷ்ணுவாதிதேவர்கள், தாங்களடைந்த பரமஸுகத்திற்குக் கைம்மாறுகத் தேவேந்த்ரனுடைய கன்னிகையான தேவஸேநாம்பிகையை ஸ்ரீ பாலஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்குப் பாணிக்ரஹணம் செய்துகொடுக்க நிச்சயித்து, திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ குமார ஸ்வாமிக்கும் தேவஸேநாதேவிக்கும் திருக்கல்யாண மஹோத்ஸவம் நடத்திவைத்து, தேவர்களும் முநிவர்களும் தரிசித்தானந்தக் கடலில் மூழ்கினர். பின் எல்லோரும் அவ்விடத்திலுள்ள புண்யதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமியின் க்ருபாகடாக்ஷத்திற்குப் பாத்ரராய், பரிசு பெற்று, பக்தானுக்ரஹம் செய்யும்படி ஸ்வாமியைப் பிரார்த்தித்து, தங்கள் ஸ்வஸ்தானத்திற்கேகினரென்ற விவரம் கூறுகின்றது.

ஓம். தத். ஸத்.

ஶுபமஸ்து.

ஸ்ரீ ஶரவணபவாய நம꞉ ॥

ஸத்யாசல க்ஷேத்ரமென்ற திருப்பரங்குன்றத்திலுள்ள

விசேஷ தீர்த்தங்கள் 9.

(அத்-5. சுலோ $3\frac{1}{2}$—$20\frac{1}{2}$, 74-75)

1. "ஸ்வாமி புஷ்கரிணி"— மலைக்கு ஈசானதிக்கில் தபஸ் புரிய ஆரம்பிக்கும் காலத்தில் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியாலுண்டாக்கப்பட்டது. இந்த தீர்த்தத்திற்குச் "சரவணப்பொய்கை" எனப் பெயர் வழங்குகின்றது. இதற்கு அநேகம் திருநாமங்களுள:-

அவையாவன:—

(அத் 2—சுலோ 29-31).

1.	ஞான தீர்த்தம்	9.	குமாரஸரஸ்.
2.	ஸர்வ தீர்த்தம்	10.	பக்தி தீர்த்தம்
3.	குஹகங்கை	11.	முக்தி தீர்த்தம்
4.	ஸத்ய கங்கை	12.	பரதீர்த்தம்
5.	சிவகங்கை	13.	பராத்பர தீர்த்தம்
6.	சிவப்ரதை	14.	சத்ருக்ன தீர்த்தம்
7.	குமார பத்மினி	15.	ஸர்வரோக நிவாரண தீர்த்தம்
8.	ஸ்ரீதை	16.	ஸர்வதீர்த்தோத்தமோத்தமம்

2. "ஸத்ய தீர்த்தம்"—மலைக்கு வடக்கில் தண்டபாணிகோயிலுளுள்ளது. ஸத்யம், ஞானம், ஸுகம் இவைகளைக் கொடுக்கக்கூடியது. ஹரிச்சந்த்ர மகாராஜாவால் ஸேவிக்கப்பட்டு அவருக்கு ஸத்ய வ்ருதத்தை த்ருடம் செய்வித்தது.

3. "பாதாளகங்கை"—மலையின் உச்சியில் தென் பாகத்தில் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியால் சங்கப்புலவர் தலைவரான நக்கீர கவியின்பொருட்டு தருவிக்கப்பட்டது.

இந்த மூன்று தீர்த்தங்களும் மிகவும் உத்தமமானவை. இவைகளில் ஒருதரம் ஸ்நாநம் செய்தால் 24 க்ருச்ரபலனுண்டாகிறது.

(அத் 12—சுலோ 97-100). மற்ற தீர்த்தங்களில் ஸ்நாநம் ஒருதரம் செய்தால், 3 க்ருச்ரபலனுண்டாகிறது.

4. "புத்ர தீர்த்தம்"—மலைக்கு வாயுமூலையிலுள்ளது. இதற்கு "சோத்துக்கடைக்கிணறு" எனப்பெயர் வழங்குகின்றது.

5. "புஷ்பமார்தவ தீர்த்தம்"—மலைக்கு ஈசானதிக்கிலுள்ளது. அகல்யைக்கு நிஜ சரீரத்தைக் கொடுத்தது.

6. "வைத்ய ஸாரம்"—புஷ்பமார்தவ தீர்த்தத்திற்கு மேற்கிலுள்ளது; ஸகல ரோகங்களையும் நிவர்த்தி செய்வது; சந்த்ரனுக்கு க்ஷயரோகத்தையும் அக்னிக்கு த்வந்த்வ ரோகத்தையும் தீர்த்தது.

7. "ஹிமமார்தவ தீர்த்தம்"— மலைக்கு ஆக்நேய திக்கிலுள்ளது; ஈசன் திருவடி தேடிய திருமால் நீராடி தாப சாந்தி அடைந்தது.

3 முதல் 7 வரை உள்ள இந்த ஐந்து தீர்த்தங்களும் பர்வதத்துடன் வந்தன. மயில் வாகனனாலவைகள் பெயரிடப்பட்டன.

8. "க்ஷீரகுண்டம்"—மலைக்கு ஆக்நேயத்திலுள்ளது. காமதேனு லிங்கவடிவான மலையிற் சொரிந்த பால் நிர்மால்யம் தங்கியது.

9. "ப்ரஹ்ம தீர்த்தம்"—மலைக்கு வடக்கில் துர்க்காதேவியின் இடதுபக்கமாக வடமேற்கே நானூறு வில்லடி தூரத்தில் ப்ரஹ்மாவின் தண்டத்தினாலுண்டாக்கப்பட்டது. ஸர்வரோகங்களையும் நாசம்செய்து இஷ்டஸித்திகொடுப்பது. இதற்கு "ப்ரஹ்மகுண்ட"மென்றும், "ப்ரஹ்மகூப"மென்றும் பெயருண்டு. இப்பொழுது "சன்னசிக்கிணறு" எனப் பெயர் வழங்கி வருகின்றது. இந்தத் தீர்த்தமானது, "ஸித்ததீர்த்தம்" "ஞானதீர்த்தம்" எனவும் திருநாமம் பெற்றுள்ளது.

பின்னுமுள்ள தீர்த்தங்கள் (அத். 12, சுலோ-91-96).

10. "பாண்டவ தீர்த்தம்"— பாண்டவர்களா லுண்டாக்கப் பட்டது. மலையின் வாயு மூலையிலுள்ளது.

11. "கல்யாண தீர்த்தம்"— மலைக்கு வடக்கில், திருக்கல் யாண காலத்தில், ஸ்நானார்த்தம் குஹஸ்வாமியாலுண்டாக்கப் பட்டது.

12. "மண்டல தீாத்தம்"—மலைக்கு வடக்கே, பரமசிவனது ஜடாமண்டலத்திலிருந் துண்டானது.

13. "ஸித்த தீர்த்தம்"—மலைக்கு ஈசான திக்கிலுள்ளது.

श्री गुरुभ्यो नमः ॥

श्री सुब्रह्मण्याय परमात्मने नमः ॥

श्रीमत् पराचल (सत्यगिरि) क्षेत्र माहात्म्यम् ॥

श्री गणेशाय नमः ॥

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

कल्याणाब्धौ समरसमयेऽप्यक्षराऽह्यासकामे
शास्त्रारम्भे सत्कृतिकरणे देवताराधने च ।
गायत्र्युष्णिग्जगतिविबुधाः सर्वविघ्नोपशान्त्यै
हेरम्बत्वं भजत सततं त्वां विनायकेशेन्द्राः ॥

ऐश्वरं परमं तत्त्वमादिमध्यान्तवर्जितम् ।
स्वपारं सर्वभूतानां माययाविक्रियम् ॥

अनन्तानन्दबोधाम्बुनिधिमद्भुतविग्रहम् ।
अम्बिकापतिमीशानमनिशं प्रणमाम्यहम् ॥

दिव्यपराचलक्षेत्रं दिव्यसत्याब्जिनीमयि ।
दिव्यगौरवमन्नाम्बां च दिव्यसत्यार्थदायिनम् ॥

यश्शिवो नामरूपाभ्यां या देवी सर्वमङ्गला ।
तयोस्संस्मरणात् पुंसां सर्वतो जयमङ्गलम् ।

उमाकोमलहस्ताब्जसम्भावितललाटिकम् ।
हिरण्यकुण्डलं वन्दे कुमारं पुष्करस्रजम् ॥

𑌷𑌡𑌾𑌨𑌨𑌂 𑌕𑍁𑌂𑌕𑍁𑌮𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌂
𑌮𑌹𑌾𑌮𑌤𑌿𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌯𑍂𑌰𑌵𑌾𑌹𑌨𑌂 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑍂𑌨𑍁𑌂 𑌸𑍁𑌰𑌸𑍈𑌨𑍍𑌯𑌨𑌾𑌥𑌂
𑌗𑍁𑌹𑌂 𑌸𑌦𑌾𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

𑌸𑍂𑌤 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌮𑍁𑌨𑌯𑍋𑌸𑍍𑌮𑌿 𑌨𑍍𑌯𑍁𑌗𑌾𑌵𑌤𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋𑌵𑍍𑌯𑌾𑌸 𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑍍𑌯𑌾𑌃 𑌸𑍁𑌤𑍋𑌮𑌹𑌾𑌨𑍍 ॥ (1)

𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾𑌧𑍃𑌤𑍍𑌵𑌾 𑌲𑍋𑌕𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹 𑌹𑍇𑌤𑌵𑍇 ।
𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌚𑌤𑍁𑌰𑍋𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌯𑍁𑌗𑌾𑌦𑍀𑌨𑍍 𑌬𑌾𑌦𑌰𑌾𑌯𑌣𑌃 ॥ (2)

𑌵𑍇𑌦𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌭𑌜𑍍𑌯𑍇𑌮𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌤𑍍𑌸𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌂 ।
𑌦𑌶𑌧𑌾𑌚𑌾𑌷𑍍𑌟𑌧𑌾𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌿 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ॥ (3)

𑌮𑌹𑍍𑌯𑌂 𑌕𑌰𑍁𑌣𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌦𑌾𑌤𑍍 𑌗𑍁𑌰𑍁𑌸𑍍𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑍀𑌸𑍁𑌤𑌃 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌂 𑌪𑌾𑌦𑍍𑌮𑌂 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂𑌚 𑌶𑍈𑌵𑌂 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌤𑌥𑌾 ॥ (4)

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌂 𑌨𑌾𑌰𑌦𑍀𑌯𑌂𑌚 𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯 𑌮𑌤𑌃 𑌪𑌰𑌂 ।
𑌆𑌗𑍍𑌨𑍇𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍈𑌵𑌰𑍍𑌤𑌂 𑌲𑍈𑌙𑍍𑌗𑌂 𑌵𑌾𑌰𑌾𑌹𑌮𑍇𑌵𑌚 ॥ (5)

𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌂𑌚 𑌵𑌾𑌮𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌯𑌂 𑌕𑍌𑌰𑍍𑌮𑌂𑌚 𑌗𑌾𑌰𑍁𑌡𑌂 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌂 𑌚𑍇𑌤𑌿𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌯𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌮𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌃 ॥ (6)

𑌤𑌤𑍍𑌰 𑌶𑍈𑌵𑌾𑌨𑌿 𑌶𑍈𑌵𑌂𑌚 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌂𑌚 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ।
𑌮𑌾𑌰𑍍𑌕𑌣𑍍𑌡𑍇𑌯𑌂 𑌤𑌥𑌾𑌲𑍈𑌙𑍍𑌗𑌂 𑌵𑌾𑌰𑌾𑌹𑌂 𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑌮𑍇𑌵𑌚 ॥ (7)

𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌤𑌥𑌾 𑌕𑍌𑌰𑍍𑌮𑌂 𑌵𑌾𑌮𑌨𑌂𑌚 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌂𑌚 𑌦𑌶𑍈𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌲𑌕𑍍𑌷𑌾𑌣𑌿 𑌸𑌂𑌖𑍍𑌯𑌯𑌾 ॥ (8)

𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌮𑌹𑌿𑌮𑌾𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌶𑌿𑌵𑌸𑍍𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌯𑌾 𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍇𑌨𑌚 ॥ (9)

𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌶𑌿𑌵𑌮𑍇𑌤𑌾𑌨𑌿 𑌶𑌿𑌵𑍋𑌤𑍍𑌕𑌰𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌹𑌿 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌂 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑌥𑌾 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ (10)

நாரதீய புராணஞ்ச காருடம் வைஷ்ணவம் விது: ।
ப்ராஹ்மம் பாத்மம் ப்ரஹ்மணோ த்வே அக்நேராக்நேயமேககம் ॥ (11)
ஸவிதுர்ப்ரஹ்ம கைவர்தம் ஏவமஷ்டாதஶ ஸ்ம்ருதம் ॥ (11½)

சத்வாரி வைஷ்ணவாநீஶ விஷ்ணோஸ்ஸாம்ய புராணிசைவ ।
ப்ரஹ்மாதி த்யேயாயிகம் விஷ்ணும் ப்ரவதந்தி ஜகத்பதிம் ॥ (12½)

ப்ரஹ்ம விஷ்ணு மஹேஶாநாம் ஸாம்யம் ப்ரஹ்மே புராணகே ।
கநிஷ்டாமயிகம் தேவம் ப்ரஹ்மாணம் ஜகதாம் பதிம் ॥ (13½)

ப்ரவதந்தி திநாதீஶம் ப்ரஹ்ம விஷ்ணு ஶிவாத்மகம் ।
ப்ராதர்மத்யாஹ்ந ஸாயாஹ்ந ஸந்த்யேஷு ப்ரவீதிஹி ॥ (14½)

அக்நிம் வைஶ்வாநரம் ஸாக்ஷாதாத்மாநம் த்ரிகுணாத்மகம் ।
ஆக்நேயம் ப்ரஹ்ம கைவர்தம் ஸவிதா ஜகதீஶ்வர: ॥ (15½)

ஶிவாத்மாநா விஶேஷேண ப்ரதிபாத்யந்தே இஹ ।
கூடஸம்வ்யா புராணாநாம் சதுர்வர்க்கம் ப்ரகாஶக: ॥ (16½)

யதாஶாஸ்த்ரேஷு வேதேஷு விஶ்வாதிக உமாபதி: ।
புராணேஷு பரஸ்ஸாக்ஷாத் பதி: பாஶவிமோசக: ॥ (17½)

பரம் ப்ரஹ்ம பராயாம பரஞ்ஜ்யோதிரநாமயம் ।
மங்கலம் மங்கலாநாஞ்ச பாவநாநாஞ்ச பாவநம் ॥ (18½)


ஸர்வமங்கலயோவேத உதபஹ்ரு ஸ்ஸர்வமங்கல: ।
கூஷ்மாண்ட ஶிரோநித்ய ஸம்ஸ்தம் ப்ரவதந்திஹி ॥ (19½)

தத்வதேவ புராணாநி ஶிவம் ஸாம்பம் த்ர்யம்பகம் ।
ஸ்வதந்த்ரைக மஹேந்த்ரம் ப்ரவதந்தி நிரங்குஶம் ॥ (20½)

தத்த்வவேதம் முநிஶ்ரேஷ்டா: ஶைவம் ஸர்வார்த்ததம் விது: ।
ஸர்வவேதார்த்த ஸர்வஸ்வம் புக்திமுக்தி ஸுகாவஹம் ॥ (21½)

தஸ்மிந் காலஶ்ச ருத்ராக்ஷ ஸம்ஹிதாயாம் ப்ரகீர்திதம் ।
ஶ்ரீமத் பாராவத க்ஷேத்ர மாஹாத்ம்யம் ஶ்ருதிஸம்மதம் ॥ (22½)

ஶிவஶக்திக்ஷேத்ர ப்ரபவஸ்ய ஸுப்ரஹ்மண்யஸ்ய வைபவம் ।
ஸநத்குமாரம் ப்ருஷ்டம் பாராஶரீய ப்ரவீத் ॥ (23½)



திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் திருக்கோயிலின்
முன் காக்ஷி.

உ

𑌶𑍍𑌰𑍀 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀 𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑌭𑍍𑌯𑌤𑍇 ॥

ஸத்யகிரி மாஹாத்ம்யம்

என்னும்

திருப்பரங்குன்றம் ஸ்தல புராணம்.

𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

(𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑍇) 𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌭𑌗𑌵𑌨𑍍 𑌨𑌨𑍍𑌦𑌿𑌕𑍇𑌶𑌾𑌨 𑌶𑌿𑌵𑌭𑌕𑍍𑌤𑌿𑌪𑌰𑌾𑌯𑌣 ।
𑌕𑍁𑌮𑌾𑌰𑍇𑌣 𑌕𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑌪𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑌮𑌾𑌦𑍃𑌤𑌃 ॥ (1)

𑌕𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌥𑌲𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚 𑌗𑍁𑌹𑍇𑌨 𑌚 ।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌸𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑌰𑌾𑌤𑍍 ॥ (2)

𑌤𑍍𑌵𑌯𑌾 𑌨𑌾𑌵𑌿𑌦𑌿𑌤𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌷𑍁 𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌗𑍁𑌹𑌸𑍍𑌯 𑌚 ॥ (3)

𑌤𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑌪𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌧𑌾𑌮𑌨𑍇 ।
𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌕𑌾𑌰𑌾𑌯 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑍇𑌽𑌹𑌮𑌨𑌘 ॥ (4)

𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌶𑌿𑌷𑍍𑌯𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 𑌤𑍍𑌵𑌯𑌿 ।
𑌤𑌦𑍍𑌗𑍌𑌰𑌵𑍇𑌣 𑌪𑍍𑌰𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌕𑍃𑌪𑌾𑌂 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌵𑌾𑌰𑌿𑌧𑍇 ॥ (5)

𑌰𑌹𑌸𑍍𑌯𑌮𑌪𑌿 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌾𑌧𑌵𑍋 𑌲𑍋𑌕𑌰𑌕𑍍𑌷𑌕𑌾𑌃 ।
𑌕𑍁𑌮𑌾𑌰𑌤𑌪𑌸𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ॥ (6)

𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍇𑌵 𑌨𑌾𑌶𑌾𑌯 𑌲𑍋𑌕𑍋𑌪𑌕𑍃𑌤𑌿𑌕𑌾𑌮𑍍𑌯𑌯𑌾 ॥ (6½)

உ

சிவமயம்

தமிழ் உரை.

முதலாவது அத்யாயம்.

(உரை) ஸநத்குமாரமுனிவர் அருளுவதாவது :—

"ஷட்குண ஸம்பன்னராயும் சிறந்த சிவபக்தராயுமுள்ள நந்திகேஶ்வரரே! ஸர்வ ப்ராணிகளினுடைய ஹ்ருதய குகையின் கண்ணே வஸிப்பவரும், குமரர் எனப் பெயர் பெற்றவருமான ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யமூர்த்தியால் முன் ஓர் காலத்தில் எதைக் கருதி எவ்விடத்தில் எவ்வாறு மேன்மையான தபஸ் செய்யப்பட்டது? தாங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்களாகையால் ஆச்சர்யமாயுள்ள விருத்தாந்தங்களனைத்தையு மறிவீர்கள்; மூவுலகங்களினும் தங்களாலறியப்படாததொன்றுமில்லை; மேலும் தாங்கள் ஸுப்ரஹ்மண்ய மூர்த்திக்குச் சிஷ்யர்களாயிருக்கின்றீர்கள்; ஆகையால் தங்களைக் கேட்கின்றேன்," (என்று ஸநத்குமாரமுனிவர் நந்திகேஶ்வரரைப் பார்த்து).

"முனிவரே! முன் ஒரு காலத்திற் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினால் தங்களை நிமித்தமாகக்கொண்டு உலகத்தின் நன்மையைக் கருதி ரகஸ்யமாய் எல்லாம் கூறப்பட்டுள்ளன. தாங்கள் எப்படி ஸுப்ரஹ்மண்யமூர்த்தியின் பக்தியுள்ள சிஷ்யரோ, அதுபோல யானும் தங்களுக்குச் சிஷ்யன் அல்லவா! கருணாநிதியே! அந்தப் பெருமையினாற் கேட்கின்றேன்; கிருபை செய்யவேண்டும். உலகத்தை ரக்ஷிக்கின்றவர்களாகிய ஸாது ஜனங்கள் ரஹஸ்யமாகிய விஷயங்களையுங்கூட தமது சிஷ்யர்களுக் குபதேசிக்கின்றார்கள்! அல்லவா! ஆகையால் எனது பாபம் நிவர்த்தியாகும் பொருட்டும் உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டும் ஸுப்ரஹ்மண்ய பகவான் செய்த தபஸினுடைய விதியை க்ரமமாக உள்ளபடி சொல்லியருளல் வேண்டும்", என்று ப்ரார்த்தித்தனர்.

(𑌶𑍍𑌲𑍋) 𑌸𑍂𑌤 𑌉𑌵𑌾𑌚 ।

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌨𑌨𑍍𑌦𑍀 𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑌾𑌵𑍇𑌨 𑌭𑌾𑌵𑌿𑌤𑌃 ।
𑌯𑌦𑍁𑌵𑌾𑌚 𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌤𑌪𑌸𑍋 𑌵𑍍𑌰𑌤𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑍍 ॥ (7½)

𑌤𑌦𑌦𑍍𑌯 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨𑍈𑌮𑌿𑌶𑌾𑌰𑌣𑍍𑌯𑌵𑌾𑌸𑌿𑌨𑌃 ।
𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑍇𑌣 𑌕𑌥𑌾𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌿𑌨𑍀𑌮𑍍 ॥ (8½)
𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍋𑌪𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑍈𑌵𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑌿𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 ॥ (9)

𑌪𑍁𑌰𑌾 𑌦𑌕𑍍𑌷𑍋𑌽𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌰 𑌶𑍋𑌭𑌾𑌢𑍍𑌯𑍇 𑌨𑌾𑌨𑌾𑌮𑍁𑌨𑌿𑌗𑌣𑌾𑌵𑍃𑌤𑍇 ॥ (10)

𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌰𑌣 𑌪𑌕𑍍𑌷𑍀𑌣𑍇𑌷𑍁 𑌵𑌿𑌮𑌾𑌨𑍈𑌰𑍍𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍𑌸𑌮𑌯𑍇 𑌦𑍇𑌵𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌨𑌨𑍍𑌦𑌿𑌵𑌾𑌹𑌿𑌤𑌃 ॥ (11)

𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍍𑌯𑌾 𑌸𑌹𑌿𑌤𑌶𑍍𑌶𑌮𑍍𑌭𑍁𑌃 𑌕𑌥𑌾𑌞𑍍𑌚 𑌕𑌥𑌯𑌨𑍍𑌮𑌯𑌃 ॥ (11½)
𑌦𑌾𑌕𑍍𑌷𑌾𑌯𑌣𑍀 𑌕𑌥𑌾𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌕𑌾𑌰𑌿𑌣𑍀𑌮𑍍 ॥ (12)

𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 * 𑌮𑌹𑌾𑌭𑌕𑍍𑌤𑌿 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 ।
𑌇𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌦𑍇𑌵𑍇𑌶𑌮𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌯𑌾 ॥ (13)

(உ) ஸூதமுனிவர் அருளுவதாவது:—

நைமிஶாரண்ய வாஸிகளே! இவ்விதம் ஸநத்குமாரரால் கேள்க்கப்பட்டு உண்மையான பக்தியினால் பாவிக்கப்பட்ட நந்திகேஶ்வரர், அன்பினோடு ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய எந்தத் தபஸின் லக்ஷணங்களைக் கூறினரோ, அந்தப் பரிசுத்தமானதும் பாவங்களனைத்தையும் நாசஞ்செய்வதுமாகிய சரித்திரத்தை இப்பொழுது சுருக்கமாக உரைக்கின்றேன். (8½)

முனிவர்களே! ஸர்வ உலகங்களுக்கும் உபகாரமாகத் தெய்வத்தால் ஒரு சங்கதி தெரிவிக்கப்பட்டது; அதாவது, முன்னர்த்

* 𑌮𑌹𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌯𑍁𑌤𑌾 — 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍.

தேவர்களெல்லோராலும் வணங்கப்பெற்றதும், அநேக மகரிஷிக் கூட்டங்களாற் சூழப்பட்டதும், ஸர்வாலங்காரங்களினாலும் அழகு பொருந்தியதும், அப்ஸரஸ்களால் நிறைந்ததும், விமானங்களாற் காந்திபெற்றதுமாகிய கைலாஸ மலையின் கொடுமுடியில், ஒரு ஸமயத்தில் ஷட்குணைஶ்வர்ய ஸம்பன்னரும் விஷத்தைக் கண்டத்திற் தரித்தவருமான சிவபெருமான் பார்வதிஸமேதராய் எழுந்தருளியிருக்கையில், ரஹஸ்யமாய் ஒரு கதையை திருவாய் மலர்ந்தருள ஆரம்பித்தனர். தாக்ஷாயணீ தேவியானவள் மனதுக்கு மிகவும் ஆனந்தத்தைத் தருகிற அந்தக் கதையைக் கேள்வியுற்று பக்தியினால் மிகுந்த வணக்கமுடையவளாய், குருவாகிய தேவேசரை நமஸ்கரித்து ஆன்மஞானமடைய விருப்ப முற்றவளாய் பின் வருமாறு கேட்க ஆரம்பித்தாள். (13)

(உ-ம) ஸ்ரீ வாயவீயஸம்ஹிதாயாம் ॥

ஶிவஶிவ (1) ஷடாஶிவ ஸர்வஶிவ நமோஸ்து தே ।
ஸர்வஜ்ஞ ஸர்வஸம்ஹார காரகே ॥ (14)

---

(1) ஸர்வஜ்ஞதா த்ருப்திரநாதி போத:
ஸ்வதந்த்ரதா நித்யமலுப்தஶக்தி: ।
அநந்தஶக்திஶ்ச விபோர்விதிஜ்ஞா
ஷடாஹுரங்காநி மஹேஶ்வரஸ்ய ॥

ஸர்வஞ்ஞதை (முற்றறிவு), த்ருப்தி (வரம்பிலின்ப முடைமை), அநாதி போதம் (இயல்பாகவே பாசங்கள் நீங்கிநிற்றல்),ஸ்வதந்த்ரதை (தன்வய முடைமை), அலுப்த சக்தி (பேரருளுடைமை) அநந்த சக்தி (முடிவிலாற்ற லுடைமை), என்னும் ஆறு, (சக்திகள்) குணங்கள் சிவ பெருமானிடத்திற் பொருந்தியுள்ளன எனப் புராணம் கூறுவதால், சிவஸாம்யம் பெற்றவர்க்கு இக்குணங்களும் வெளிப்படும்.

𑌭𑌕𑍍𑌤𑌿𑌭𑌰𑍍𑌵𑌤𑌾𑌂 𑌶𑍇𑌷𑌿𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾 𑌶𑌾𑌂𑌭𑌵𑌾॥ (14½)
𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌨 (1) 𑌷𑌾𑌡𑍍𑌗𑍁𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑌵 𑌶𑌙𑍍𑌕𑌰 ।

𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌕𑌥𑌯 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌕𑍃𑌪𑌯𑌾𑌦𑍍𑌯 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌮𑌯𑌿॥ (15½)
𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌦𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌚𑌕𑍍𑌰𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥ (16)

𑌇𑌦𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌭𑌵𑌤𑌾 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌭𑍋 ।
𑌪𑍃𑌷𑍍𑌟𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌮𑌯𑌾 𑌨𑍈𑌵 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥ (17)

𑌉𑌪𑌦𑍇𑌶𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌚 𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑌦𑍀𑌶𑍍𑌵𑌰 ।
𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑍇𑌨 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌕𑌿𑌂𑌫𑌲𑌂 𑌤𑌵 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ॥ (18)

𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾𑌰𑌂 𑌕𑌥𑌯𑌸𑍍𑌵 𑌹𑌿 𑌮𑍇 ॥ (18½)
𑌇𑌤𑌿 𑌪𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍁 (2) 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥ (19)

𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌯 𑌚𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌶𑌰𑌣𑍍𑌯𑌃 𑌶𑌿𑌵𑌃 ।
𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑌥𑌾𑌵𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑍍𑌯𑌵𑍇𑌦𑌯𑌤𑍍 ॥ (20)

---

(1) 𑌷𑌡𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑍍𑌯—𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍.

(2) 𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌮𑌗𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌶𑌸𑌃 𑌶𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌯𑍋𑌶𑍍𑌚𑍈𑌵 𑌷𑌣𑍍𑌣𑌾𑌂 𑌭𑌗 𑌇𑌤𑍀𑌰𑌣𑌾 ॥

𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌚𑍈𑌵 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌾𑌗𑌤𑌿𑌂 𑌗𑌤𑌿𑌂 ।
𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌸 𑌵𑌾𑌚𑍍𑌯𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 ॥

ஸம்பூர்ணமான ஐஶ்வர்யம், வீர்யம், கீர்த்தி, ஸம்பத்து, ஞானம், வைராக்யம், இவ்வாறும் "பக" என்று சொல்லப்படுகின்றன. இவைகள் யாரிடத்தில் சேர்க்கையாயிருக்கின்றனவோ அவருக்கு "பகவான்" என்று பெயர்.

பூதங்களுடைய உற்பத்தி, நாசம், வரவு, போக்கு, வித்தை, அவித்தை, இவைகளை அறிந்தவராரோ அவர் "பகவான்" என்று சொல்லப்படுகிறார்.

[illegible] ।
[illegible] ॥ (21)

𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌷𑌡𑌕𑍍𑌷𑌰𑌵𑌿𑌧𑌿𑌂 𑌵𑌦 ।
𑌶𑍍𑌰𑌾𑌵𑌯 𑌪𑌰𑌮𑍇𑌶𑌾𑌨 [illegible] ॥ (22)

(உ) ஸ்ரீ பார்வதி தேவியார் அருளுவதாவது:—

"ஸமஸ்ததேவர்களாலும் வணங்கப்பெற்ற தேவாதிதேவரான மஹாதேவா! இப்பிறவிக் கடலினின்று கரையேற்றுவதாகிய தங்களுடைய பாதாரவிந்தங்களிலே அசைவற்றதும் பரிசுத்தமும் மங்களகரமுமாகிய பக்தியானது எப்பொழுதும் எனக்கு உண்டாகும்படி அருளுக. தங்களுக்கு அடியாள்மேற் க்ருபையிருப்பது மெய்யாயின், ப்ரணவத்தோடு கூடியதும் தங்களுக்கு உரியதுமாகிய ஆறெழுத்து மந்த்ரத்தினுடைய லக்ஷணங்களை இப்பொழுது எனக்குச் சொல்லியருளவேண்டும். ஸர்வாந்தர்யாமியான சங்கரா! பூவுலகில் ஸர்வஸித்திகளையும் அளிக்கத் தகுந்த இந்த மஹா மந்த்ரத்தினுடைய லக்ஷணமானது முன்னர்த் தங்களால் எனக்கு அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் அது என்னால் கேட்கப்படவே இல்லை; அவ்வாறு கேட்கப்படாமையின் காரணமும் எனக்குப் புலப்படவில்லை; ஈஶ்வரா! இந்த மந்த்ரத்தை உபதேசித்துக் கொள்வதற்கு இதுவே ஸமயம்; எவ்விதத்திலும் தங்களுக்கு நான் அடிமையல்லவா? இது ஸமயம் இந்த மந்த்ரத்தை ஶ்ரவணஞ் செய்வதற்கு எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறது; ஆகையால், இதுவே தருணம்" எனத்தெரிவித்து வேண்டிக் கொண்டாள். ($18\frac{1}{2}$)

இவ்வாறு தேவியினால் ப்ரார்த்திக்கப்படவே, ஸமஸ்த தேவநாயகரும், ஸமஸ்த லோக குருவானவரும் ஸர்வலோக ரக்ஷகருமான சிவபெருமான், புன்னகைசெய்து தேவியினிடத்திற் கருணைகூர்ந்து குமாரஸ்வாமி தன் (தேவியின்) மடிமீது வீற்றிருக்கும் பொழுது, வேதங்களின் ஸாரமானதும், மிகவும் மேன்மை பொருந்தியதும், ப்ரணவத்தோடு கூடியதுமாகிய இவ்வாறெழுத்து



கைலயங்கிரியில் குமரக்கடவுள்தேவியின் மடிமீதிருக்கும்போது சிவபிரான் உமைக்கு ப்ரணவத்தோடு கூடிய ஷடாக்ஷரத்தை உபதேசித்தல்.

[பக்கம் 6

மந்த்ரத்தின் லக்ஷணத்தை ரஹஸ்யமாய், உற்பத்தி முதல் முடிவுபர்யந்தம் வியாக்யானத்துடன் விஸ்தாரமாகத் திருவாய் மலர்ந்தருளினர். (22)

(𑌮𑍂) 𑌶𑍍𑌰𑍀 𑌶𑌿𑌵𑌃 𑌉𑌵𑌾𑌚 ॥

𑌶𑍃𑌣𑍁 𑌦𑍇𑌵𑌿 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌵𑍈𑌭𑌵𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌦𑍍𑌯𑌾 𑌸𑌞𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥ (23)

𑌸𑌪𑍍𑌤𑌕𑍋𑌟𑌿 𑌮𑌹𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑌾𑌂𑌶 𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 ।
𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌶𑍍𑌷𑌡𑌙𑍍𑌗 𑌚 𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑌾𑌃 ॥ (24)

𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾 𑌜𑍀𑌵𑌕𑍋𑌟𑌯𑌃 ।
𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿 𑌕𑌲𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌂𑌶 𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 ॥ (25)

𑌅𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌮𑌹𑌤𑍋𑌽𑌪𑌿 𑌮𑌹𑌤𑍍𑌤𑌰𑌃 ।
𑌅𑌨𑍇𑌕𑌕𑍋𑌟𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑍁𑌂 𑌨𑍈𑌵 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 ॥ (26)

𑌕𑌿𑌂 𑌬𑌹𑍂𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇 𑌚 𑌯𑌥𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 ।
𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌜𑌗𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚𑌰𑌾𑌚𑌰𑌂 𑌶𑌿𑌵𑍇 ॥ (27)

𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌚𑍈𑌵 𑌪𑌾𑌣𑌿𑌤𑌲𑍇 𑌯𑌥𑌾𑌮𑌲𑌕𑍀𑌫𑌲𑌮𑍍 ।
𑌵𑌿𑌦𑌿𑌤𑍇 𑌚𑍈𑌵 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌯𑍇 𑌮𑌨𑍌 ॥ (28)

* 𑌅𑌣𑌿𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌵𑌰𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌕𑌿𑌂𑌕𑌰𑌾𑌃 ।
𑌸𑌾𑌵𑌧𑌾𑌨𑌮𑌨𑌾 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌶𑍃𑌣𑍁 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑍈𑌭𑌵𑌮𑍍 ॥ (29)

𑌅𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌹𑍍𑌯𑍁𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌮𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌵𑌰𑍍𑌣𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰 𑌏𑌷𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑍇 ॥ (30)

𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍋 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌕𑌃 ।
𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌸𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌶𑍍𑌚 𑌹𑍍𑌯𑌾𑌥𑌰𑍍𑌵𑌣𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌕𑌃 ॥ (31)

---

* 𑌅𑌣𑌿𑌮𑌾, 𑌮𑌹𑌿𑌮𑌾, 𑌗𑌰𑌿𑌮𑌾, 𑌲𑌘𑌿𑌮𑌾, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌃, 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌮𑍍𑌯𑌂, 𑌈𑌶𑌿𑌤𑍍𑌵𑌂, 𑌵𑌶𑌿𑌤𑍍𑌵𑌂, 𑌚𑍇𑌤𑌿.

𑌨𑌾𑌦𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤 𑌮𑍋𑌂𑌕𑌾𑌰𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ।
𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌞𑍍𑌚 𑌸𑌮𑌾𑌯𑍋𑌗𑍋 𑌹𑍍𑌯𑌧𑍁𑌰𑍍𑌵 𑌨𑌿𑌗𑌮𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥ (32)

𑌅𑌕𑌾𑌰𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑍈𑌵𑌤𑍍𑌯 𑌮𑌕𑌾𑌰𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑍈𑌵𑌤𑌂 ।
𑌉𑌕𑌾𑌰𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌂 𑌨𑌾𑌦𑌂 𑌪𑌰𑌶𑌿𑌵𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ (33)

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌞𑍍𑌚𑍈𑌵 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌬𑍀𑌜𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍁𑌚𑍍𑌚𑌰𑍇𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌰𑍍𑌣𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑌾𑌨𑌤𑌃 ॥ (34)

𑌪𑌞𑍍𑌚𑌾𑌰𑍍𑌣𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌞𑍍𑌚 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌚𑍍𑌛𑍃𑌣𑍁 ।
𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑌯𑍁𑌤𑌂 𑌸𑌾𑌨𑍍𑌤𑌞𑍍𑌚 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ॥ (35)

𑌵𑌾𑌨𑍍𑌤𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑌯𑍁𑌤𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑍍𑌵𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑌯𑍁𑌤𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰𑌮𑌿𑌤𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ (36)

𑌅𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌯𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌨𑌾𑌯𑌕𑌃 ।
𑌸 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌗𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ॥ (37)

𑌅𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌕𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌨𑍇𑌨 𑌸𑌦𑍃𑌶𑍋 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋 𑌨 𑌭𑍂𑌤𑍋 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥ (38)

𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌞𑍍𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌨𑌾𑌯𑌕𑌃 𑌪𑌞𑍍𑌚𑌵𑌰𑍍𑌣𑌕𑌃 ।
𑌶𑌤𑌰𑍁𑌦𑍍𑌰𑍀𑌯𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑌾𑌠𑌿𑌤𑌃 ॥ (39)

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑍇𑌣 𑌗𑍁𑌰𑍁𑌣𑌾 𑌚𑍋𑌪𑌦𑍇𑌶𑌿𑌤𑌮𑍍 ।
𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌰𑌾𑌜𑍋 § 𑌮𑌮 𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍈 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍇 ॥ (40)

𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌾𑌦𑍍𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌂 𑌵𑌰𑍍𑌷𑌕𑍋𑌟𑌿𑌭𑌿𑌃 ।
𑌉𑌪𑌦𑌿𑌷𑍍𑌟𑌮𑌿𑌦𑌨𑍍𑌤𑍇𑌽𑌦𑍍𑌯 𑌶𑌿𑌵𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌧𑌕𑍇 ॥ (41)

---

§ 𑌮𑌯𑌾𑌪𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌹𑍇𑌤𑌵𑍇 — 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍.

கோப்யம் கார்ய ச ஶோஹாஷாகே கத்வா மந்த்ரஸ்து ஸித்த்யதி ।
மந்த்ரபீஜாதிகம் ஸத்ய ப்ரகாஶ நைந்த்வ ஸித்த்யதி ॥ (42)

கத்தம் ஹரதி காலேந கோபநீயம் ப்ரயத்நத: ।
அநேக ஜந்மஸம்ஸித்த்ய ப்ராப்தஸாத்ராந்தவர்திநாம் ॥ (43)

பஞ்சாக்ஷரஸ்ய மந்த்ரஸ்ய ஜபே புத்தி: ப்ரஜாயதே ॥ (43½)
ஜபம் கரோதீதி யதா யஸ்ய புத்தி: ப்ரஜாயதே ।
தஸ்யைவ ஸர்வ பாபாநி விலயம் யாந்தி நிஶ்சய: ॥ (44½)

நஸம்ஶயஸ்த்ர கர்தவ்ய ஸத்யமேதந்மயோச்யதே ॥ (45)
ஸமோஹாயந்த்யதமோத்வம்ஹி ஜநாநீம் புத்திர்த்ருஶீ ॥ (45½)

காமேவா வ்யயவா காமே ஶரீரஸ்ய ஶரீரிண: ।
ஜபித்வா முச்யதே மர்த்யஸ்ஸத்யா பவதிபந்தநாத் ॥ (46½)

பஞ்ச ஶ்ரேஷ்டா த்விஜா: ப்ரோக்தா யாதா ஶ்ரேஷ்டஸ்து காம்சநம் ।
ஶாஸ்த்ரம் ச மணிஶ்ரேஷ்ட மந்த்ர ஶ்ரேஷ்டமிதம் ஶிவே ॥ (47½)

நாதஸ்த்வ தாத்ரகோ தேவி பித்ருச்சைவ மாத்ரக: ।
த்வயா நவிதிதம் பஞ்சவர்ணம் மதாநீம்ச மயோபிதம் ॥ (48½)

ஶிவஶக்த்யாத்மகோ மந்த்ர ஸர்வபாப ப்ரணாஶந: ।
பஞ்சவர்ணஶ்ருதி ஸோதந ஸிந்நா பவதி கர்மணி ॥ (49½)

மோக்ஷாயைவ நைவ கர்மாணி காமயாநந்தேந மந்த்ரவித் ।
ஸவர்ணேந ஸமேநைவ நஸம்ஶிம் கஷ்டதே பய: ॥ (50½)

கஷ்டஸ்ய விநாஶாய நக்ஷத்ரேஷு ஶமாரோப்யதாம் ॥ (51)

யதா ஸரித்வராகங்கா ரத்நாநா மௌக்திகம் யதா ।
கிரணாம்ச யதா ஸோம: கஷ்டமேவ பதாஷ்டகாம் ॥ (52)

𑌜𑍀𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌾 𑌯𑌜𑍍𑌵𑌤𑍇𑌜𑌸𑌾𑌂 𑌹𑌾𑌕𑍍𑌷𑌰𑍋 𑌯𑌥𑌾 ।
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌂𑌶𑍍𑌚 𑌯𑌥𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍀 𑌯𑌥𑌾 ॥ (53)

𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑍇𑌦𑌵𑌿𑌤𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌯𑌥𑌾 ।
𑌤𑌥𑌾 𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑌾 𑌦𑍇𑌵𑌿 𑌶𑍍𑌰𑍀𑌕𑌣𑍍𑌠𑌂 𑌸𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌹𑍍𑌯𑌤𑌃 ॥ (54)

𑌅𑌭𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌰 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌜𑌪𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁 𑌦𑌿𑌨𑍇 𑌦𑌿𑌨𑍇 ।
𑌤𑍇𑌨 𑌮𑍇 𑌶𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑌤𑍍𑌯𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ (55)

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌭𑍋𑌜𑌯𑍇𑌤𑍍𑌸𑍍𑌯𑍁𑌪𑌾 𑌪𑌾𑌤𑌃 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑍍𑌯 𑌸𑌂𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑍌𑌭𑌾𑌗𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍌𑌖𑍍𑌯𑌦𑌮𑍍 ॥ (56)

𑌨𑌵𑍇𑌦𑌨𑌜𑌨𑍍𑌯𑌪𑍇𑌤 𑌸𑌞𑍍𑌚𑌿𑌤 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯𑍈𑌵 𑌶𑌾𑌨𑍍𑌤𑍇𑌤𑌃 ॥ (56½)

𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌂 𑌚 𑌪𑌯𑌨𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌕𑌣𑍍𑌠𑌾𑌯𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑌦𑌾𑌯𑌕𑌃 ।
𑌜𑍀𑌵𑌤𑍍𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌶𑍍𑌚𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 𑌨𑌾𑌮𑍇𑌨 𑌫𑌲𑌦𑌾𑌯𑌕𑌃 ॥ (57½)

𑌸𑍍𑌕𑌨𑍍𑌦 𑌏𑌵 𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦 𑌏𑌵 𑌪𑌰𑌾𑌗𑌤𑌿𑌃 ॥
𑌸𑍍𑌕𑌨𑍍𑌦 𑌏𑌵 𑌪𑌰𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦 𑌏𑌵 𑌪𑌰𑌂 𑌪𑌦𑌂 ॥ (58½)

𑌶𑌤𑍍𑌵 𑌪𑌰𑌶𑍍𑌶𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌕𑍇𑌵𑌲 ।
𑌕𑍇𑌵𑌲𑌤𑍍𑌪𑌰𑌮𑍀𑌵𑌂𑌚𑍇𑌤𑌿 𑌕𑍇𑌵𑌲𑌸𑍌𑌖𑍍𑌯𑌂 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 ॥ (59½)

𑌸𑍁𑌨𑍃𑌜𑌿𑌤𑌿 𑌕𑍇𑌵𑌲𑌤𑍍𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑍀𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌪𑌾𑌯𑌂𑌚 𑌕𑍇𑌵𑌲 ।
𑌪𑍃𑌤𑍍𑌤𑌿 𑌭𑍋𑌗𑍇 𑌬𑌹𑍁𑌦𑌾 𑌸𑌸𑍍𑌵 𑌬𑌦𑍍𑌧𑍍𑌯𑌨𑍍𑌤 𑌸𑌾𑌰𑌤𑌃 ॥ (60½)

𑌨𑌿𑌗𑍋𑌪𑍍𑌯 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌂 𑌪𑌤𑍍𑌤𑌿 𑌪𑌰𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌾𑌵𑌨𑍀 ।
𑌸𑌹𑌿𑌶𑍇𑌵𑌾𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌕𑌣𑍍𑌠𑌸𑍍𑌯 𑌜𑍀𑌵𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌤𑍁 𑌦𑍈𑌵𑌤𑌂 ॥ (61½)

𑌸𑌦𑌾𑌶𑍍𑌵 𑌜𑌗𑌤𑍀 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯𑍈𑌨 𑌵𑌿𑌨𑌿𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑍍𑌰𑍄𑌤𑍇𑌜𑌪𑌨𑍍𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑍀𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯𑍈𑌨 𑌸𑌵𑌨𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑌤𑍍𑌤𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑌃 ॥ (62½)

தஸ்ராத்ஹேஹ்ய ஸெநநம் ரோக்ஷாயெ-ட ஸாவயா நத: ।
ரோக்ஷாத்வரம் வஹெநாஸ்தி தஸ்ராந்நோக்ஷோ விஸிஷ்யதெ ॥ (63½)

(உரை) ஸாக்ஷாத் சிவபெருமான் அநுக்ரஹிக்கிறதாவது:—

ஓ தேவி! இம்மந்த்ரத்தினுடைய மகிமையைச் சொல்லுகின்றேன்; கேட்பாயாக. புண்ணிய விசேஷத்தினுல் உனக்கு இப்பொழுது இவ்வித புத்தி உண்டாயிருக்கிறது. ஏழு கோடி மஹாமந்த்ரங்களும், அங்க பதக்ரமங்களோடு கூடிய நான்கு வேதங்களும், எல்லா ஜீவராசிகளும், அறுபத்துநான்கு கலை ஞானங்களும், இம்மந்த்ரத்தினம்சத்தினின் றுண்டாயிருக்கின்றன; இம்மந்த்ரமானது அணுவுக்கணுவாகவும் மஹத்துக்கு மஹத்தாகவுமிருக்கின்றது. இம்மந்த்ரத்திற்கு அநேக கோடி வருஷம் பொருளுரைத்தாலும் சொல்லி முடியாது. ஆயினும் மங்களே! தெரிந்தவாறு உனக்கு உரைக்கின்றோம்; எல்லா வித்தைகளின் உருவாயும் மஹிமை உடையதாயுமுள்ள இம்மந்த்ரம் அறியப்பட்டதேயாயின், அக்ஞானத்தினுல் ஸத்யம் போற்றோன்றுகின்ற ஸ்தாவர ஜங்கமங்களாகிற இவ்வுலகமனைத்து முள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அணிமா முதலிய அஷ்டஸித்திகளும் வேலையாட்களைப்போல் ஊழியம் செய்யும்; ஆகையால் இம்மந்த்ரத்தின் மஹிமையை ஒரே மனதாயிருந்து கேட்பாயாக. (29)

இம்மந்த்ரமானது "அ"காம், "உ"காம், "ம"காம், என்ற மூன்று எழுத்துக்களால் உண்டாயிருக்கின்றது. முதலாவது எழுத்து "ருக்" வேதமும், இரண்டாவது எழுத்து "யஜுர்" வேதமும், மூன்ருவது எழுத்து "ஸாம" வேதமுமாக "ஓங்கார"ஞ் சொல்லப்படுகின்றது. நாதபிந்துக்களோடு கூடிய இந்த ஓங்காரத்தைப் "ப்ரணவம்" என்று சொல்லுகின்ருர்கள்; இந்த எழுத்துக்களுடைய சேர்க்கையானது "அதர்வண" வேதத்தினுல் சொல்லப்படுகின்றது. "அ"கரத்திற்கு "விஷ்ணுவை"த் தெய்வமாகவும், "உ"கரத்திற்கு "ருத்ர"ரைத் தெய்வமாகவும், "நாத"த்தைப் *"பரசிவ"மாகவும் சொல்லுகின்ருர்கள்; இந்த ப்ரணவமானது

---

* ஈண்டு பரசிவம் என்பது மகேஶ்வரரை உணர்த்தி நின்றது.

எல்லா மந்த்ரங்களுக்கும் காரணமாகச் சொல்லப்படுகின்றது; இந்த ப்ரணவத்தை ஐந்தெழுத்து மந்த்ரத்திற்கு முதலில் விதிப்படி சேர்த்துச்சொல்லவேண்டும். (34)

பஞ்சாக்ஷர மந்த்ரத்தினுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகின்றேன், கேள். தவர்க்கத்தின் கடைசியான "ந்" என்கின்ற எழுத்தோடு ஸ்வரம் என்றேற்பட்ட உயிரெழுத்தின் முதலாவதான அகரமுஞ் சேர்ந்துண்டான "ந"கரமும், பவர்க்கத்தின் அந்திய ஶப்தமான "ம்" என்கின்ற ஶப்தத்தை ப்ரதமஸ்வரமான அகரத்துடன் சேர்த்துவந்த "ம"கரமும், வாந்தமான சகரத்தை மத்ய ஸ்வரமான இகரத்துடன் சேர்த்துவந்த "சி" என்ற எழுத்தும், லகரத்திற்கடுத்த வகரத்தை ப்ரதம தீர்க்கஸ்வரமான ஆகாரத்துடன் சேர்த்துவந்த "வா" என்கிற எழுத்தும், மகரத்திற்கடுத்த யகரத்துடன் அகரஞ்சேர்ந்துண்டான "ய" என்கிற எழுத்துமாகிய இவ்வைந்து அக்ஷரங்களும் "பஞ்சாக்ஷரம்" என்று சொல்லப்படும். இம்மந்த்ரத்தினது உண்மைப்பொருளை மந்த்ரஸாதகனை எவன் அறிகின்றானோ, அவன் ஸமஸ்த உலகங்களுக்கும் ஈஶ்வரன் என்பது திண்ணம். இம்மந்த்ரத்தின் மஹிமை மற்றெந்த மந்த்ரத்திற்கு மேற்படாது; இதற்கு ஸமானமான மந்த்ரம் சென்ற காலத்திலுமில்லை; வருங்காலத்திலு முண்டாகமாட்டாது. ஆகையால் இது ஸமஸ்த மந்த்ரங்களுக்கும் மேலானது; ஏகாதச கோடி ருத்ரர்களையும் ஸம்ஸாரரோக நிவர்த்தகரான ருத்ரமூர்த்தியையும் பிரதிபாதிப்பதான ஸ்ரீருத்ரங்களினுள் ஒரு மந்த்ரமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. ஆதிகுருவான "தக்ஷிணாமூர்த்தி"யால் ஸமஸ்தசிஷ்யர்களுக்கும் உபதேசிக்கப்பட்டது; எக்காலும் மங்கள வடிவையுடைய பார்வதியே! மற்ற மந்த்ரங்களாகிய பிரஜைகளுக்கெல்லாம் இறைவனை ஒத்த இம்மந்த்ரமானது நமது ஸித்தியின் பொருட்டு யாவராலும் ஜபிக்கத் தகுந்தது. (40)

இம்மந்த்ரத்தின் மஹிமையை விரித்துரைக்க எவ்வளவு கோடி வருஷங்கள் சென்றாலும் போதாது; மங்களரூபியாயும் அடியவர்களுக்கு ஸமஸ்த அர்த்தங்களையும் ஸாதித்தருளுபவளாயும், மிருந்த பாக்யசாலியாயுமுள்ள பார்வதி தேவியே! இவ்வளவு

மஹிமை பொருந்திய இம்மந்த்ரமானது (இப்பொழுது) உனக்குபதேசிக்கப்பட்டது. இதனை ரகஸ்யமாய் வைத்து ரக்ஷித்துக் கொள்; ரகஸ்யமாக வைத்துக்கொண்டிருந்தாற்றான் மந்த்ரங்களுக்கு ஸித்தி உண்டாகும்; பிரகாசப்படுத்தினால் ஸித்தி ஏற்படமாட்டாது; மேலும் இது எல்லா மந்த்ரங்களுக்கும் மூலகாரணமானது. எவ்வளவு ப்ரயத்தனப்பட்டாவது இதனை மிக ரஹஸ்யமாக ரக்ஷித்து வைத்துக்கொள்ளவேண்டும். அப்படி ரக்ஷிக்குங்காற் சீக்கிரம் ஸித்தி ஆகாவிடினும் கொஞ்ச காலத்தில் ஸித்தி ஆகும்; ஶ்ருதி ஸ்ம்ருதிகளிற் கூறப்பட்டுள்ள கர்மங்களை அநேகஜன்மாக்களிற் ஸரிவர நடாத்திய புண்யவான்களுக்குத்தான் பஞ்சாக்ஷர ஜபத்திற் புத்தி ப்ரவர்த்திக்கும். இவ்வாறு பஞ்சாக்ஷரஜபம்செய்ய வேண்டுமென்று ஒரு மனிதனுக்கு புத்தி ஏற்பட்டமாத்திரத்திலேயே அவனுடைய ஸகல பாபங்களும் நிவாரணமாய் விடும் என்பது திண்ணம். இதில் ஸந்தேகம்வேண்டாம். நாம் கூறுவதெல்லாம் உத்தமமானவையே; அஹோதேவியே! இவ்விதம் பஞ்சாக்ஷர ஸ்வரூப விசாரணபுத்தி உனக்கேற்பட்டதால் நீயேதன்யர்களுள் முதன்மையானவள். $(46\frac{1}{2})$

* ஸாமான்யமான ஒரு மனிதன், உசிதகாலத்திலோ அல்லது (தீராதபக்ஷம்) அகாலத்திலோ, (ஸ்நானாதிகளாற்) பரிசுத்தமாகவோ அல்லது அசுத்தமாகவோ, இந்த பஞ்சாக்ஷரத்தை ஜபித்தால் ஸம்ஸாரபந்தத்தினின்று முடனே விடுபட்டு மோக்ஷத்தை அடைகின்றான். மங்களரூபியே! (பிராஹ்மண, க்ஷத்ரிய, வைசிய, சூத்ரர்களாகிய) நான்கு வர்ணிகளுள் பிராஹ்மணர்கள் எவ்வாறு சிறந்தவர்களோ, பஞ்சலோகங்களுக்குள் தங்கம் எவ்வாறு சிறந்ததோ, நவமணிகளுள் காருடமணி எவ்வாறு மேன்மையானதோ, அவ்வாறே மந்த்ரங்களுள் "பஞ்சாக்ஷரம்" சிறந்தது. தேவியே! இதிலேற்பட்ட "நாதம்" "பிந்து" என்பவைகளில் "நாதம்" உனது ஸ்வரூபம்; "பிந்து" நமது ஸ்வரூபம்; இவைகளெல்லாம், ஹே ஸ்வயம் ப்ரகாசே! முன்னர் உன்னாலறியப்படாமற் இப்போதெம்மா லறிவிக்கப்பட்டன. ஸமஸ்த பாபங்களையும் நிவர்த்தி செய்யக்கூடியதாயும் சிவசக்தி ஸ்வரூபமாயுமுள்ள இந்த பஞ்சா

---

* உசிதகாலத்திலேயே பரிசுத்தத்துடன் பஞ்சாக்ஷர ஜபம் செய்ய வேண்டியதென்று கொள்க.

க்ஷாமானது (உச்சாடன முதலிய) கர்மங்களில் இருபத்தைந்து (பேத) ப்ரகாரமாக விளங்குகின்றது. மோக்ஷத்தில் விருப்பமுடைய மாந்த்ரிகன் இந்த மந்த்ரத்தைக் கர்மங்களில் ப்ரயோகிக்கக்கூடாது. (உலக மரியாதையை-யறிந்த) எந்த வித்வானும் (எவ்வளவு சிலாக்ய மான) நிலத்தையும் தங்கக் கலப்பையினுல் உழுது பயிர் செய்ய மாட்டான், அல்லவா! அவ்வாறு செய்வானுயின் க்ருஷியின் (உழவின்) பலனை அடையாமலிருப்பதோடுங் கூட கலப்பையி லுள்ள தங்கத்தையுமிழப்பான். (கிடைக்கும் பலன்தேய்கிற தங்கத் திற்கீடாகாது). (51)

மேலும், இம்மந்த்ரமானது ஸர்வ நதிகளுள் கங்கையைப் போலவும், ரஸங்களுள் அம்ருதத்தைப்போலவும், மலைகளுள் மஹாமேருவைப்போலவும், நான்கு காற் ப்ராணிகளுள் (பசுக் களுள்) காராம்பசுவைப்போலவும், ருக்குகளுள் (மந்த்ரங்களுள்) காயத்ரியைப்போலவும், ஒளிகளுள் ஸூர்யனைப்போலவும், ம்ருகங் களுள் ஸிம்ஹத்தைப்போலவும், வாஹனங்களுள் யானையைப்போல வும், (தான) பாத்ரங்களுள் வேதத்தை அறிந்த உத்தமமான ப்ராஹ்மணனைப்போலவும் ஶ்ரேஷ்டமானது; தேவியே! உனது பாக்யவசத்தால் இம்மந்த்ரமானது இப்போதுனக் குபதேசிக்கப் பட்டது. (54)

தினந்தோறும் இந்த மந்த்ரத்தை ஆயிரத்தெட்டுமுறை ஜபம் செய்; அதினுல் நமக்களவற்ற ப்ரியமுண்டாகும்; இதில் ஸந்தேக மில்லை. நமது சரீரஸ்வரூபமாகிய இந்த மந்த்ரத்தை எவன் ஶ்ரத்தையோடு ஜபிக்கின்றுனே, அவன் தனது கோடி குலத்தின ரோடு நமது கைலாஸத்தில் வஸிக்கின்றுன் என்பது உறுதி; மோக்ஷத்தில் விருப்பமுள்ள (மோக்ஷார்த்தி) உத்தமபுருஷன் இதனை ஜபிப்பானுயின், பின்னர் பூமியில் ஜனிக்காமல் மோக்ஷத்தை அடைகின்றுன். இம்மந்த்ரம் பிரஹ்மா முதல் ஸ்தம்பப்புழு இறுதியாயுள்ள ஸமஸ்த ப்ராணிகளுக்கும் மோக்ஷத்தை அளிக்கும் சக்தியையுடையது; ஆகையால் "இதனைக் குருவிடம் உபதேசிக்கப் பெற்று ஜபிக்க வேண்டியது; இல்லாவிடின் பயன்படாது". ஏனெ னில் குருவானவர் பரப்ரஹ்ம ஸ்வரூபியாயும், மேலான கதியாயும்

(அடையக்கூடிய உயர்ந்த பதவியாயும்), சிறந்த வித்யாரூபியாயும், விசேஷமாயுள்ள தனரூபியாயும் விளங்குகின்றார். ஆகையால் குருவினிட முபதேசம் பெற்றுக்கொண்டு ஜபிக்க வேண்டும். மேன்மையாகிய இம்மந்த்ரத்தைச் சிலர் "பரப்ரஹ்ம" மென்றும், சிலர் "பரசிவ" மென்றும், சிலர் ஶ்ரேஷ்டமான "பரசைவ" மென்றும், சிலர் "ஆனந்த" மென்றும், மற்றோர் "மோக்ஷோபாய" மென்றும் தங்கள் தங்கள் புத்திக்கேற்ப பலவாறாகச் சொல்லுகின்றார்கள். (60½)

பார்வதியே! பரதத்வரூபமாகிய இந்த மந்த்ரத்தின் ஸ்வரூப நிச்சயத்தை ஒருவரும் அறியவேயில்லை; இந்த மந்த்ரத்துக்கு "ரிஷி"யும் "தேவதை"யும் "நாமே;" இந்தமந்த்ரத்தின் "சந்தஸ்" "ஜகதீ" எனப்படும்; இதற்கு "விநியோகம்" "மோக்ஷம்" அடைவதுதான். மோக்ஷமாகிய புருஷார்த்தத்தின் பொருட்டு ஜபிக்கப்படுமாயின் மற்றைய ஸித்திகள் தாமே கைகூடும். ஆகையால் மோக்ஷத்தின் பொருட்டு இம்மந்த்ரத்தை மிகவும் ஜாக்ரதையாய் ஜபிக்க வேண்டும். மோக்ஷத்திலும் மேலாகிய புருஷார்த்தம் இல்லையன்றோ? ஆதலினால், மோக்ஷமே இம்மந்த்ரத்தின் ப்ரயோஜனமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. (63½)

(𑌈-𑌶) 𑌸𑍂𑌤𑌃 ॥

𑌇𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑍍𑌯 𑌤𑌤𑍋 𑌦𑍇𑌵𑍋 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌶𑌿𑌵𑌸𑍍𑌵𑌿𑌤𑌾 ।
𑌜𑌗𑌾𑌦 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌂 ॥ (64½)

𑌕𑌾𑌰𑌣𑍋𑌽𑌪𑌿 𑌤𑌤𑌃 𑌕𑌸𑍍𑌯 𑌜𑌗𑌾𑌦 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌨𑍁𑌮𑍍 ।
𑌔𑌵𑌶𑍈𑌲𑌿𑌕 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍 𑌜𑌗𑌾𑌦 𑌸 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀𑌮𑍍 ॥ (65½)

𑌬𑍀𑌜𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌤𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌯𑌥𑌾 𑌶𑌾𑌖𑌾 𑌤𑌥𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂 ।
𑌤𑌥𑌾 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 ॥ (66½)

𑌸𑍇𑌤𑍁 𑌬𑍀𑌜𑌾𑌕𑍍𑌷𑌰𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌂 ।
𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍈𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌸𑍍𑌯𑌤𑌿 ॥ (67½)

ததா ப்ரஹ்ருஷ்டா ஸா தேவீ திவ்யஜ்ஞான ப்ரதம் மநும் ।
ஜஜாபைவ ச்ரேஷ்டம் தத் ஸக்த்யா பரமயா முதா ॥ (68½)
ஷடக்ஷரம் மஹாமந்த்ரம் ஸ்கந்தோ பாலோ ஜஜாப ஹ ॥ (69)

(உ) ஸூதமஹாமுனிவர் சொல்வதாவது:—

இவ்வாறு ஸ்வயம் ப்ரகாசரான பரமசிவன் திருவாய்மலர்ந்தருள, உமாதேவியார் மிகவும் ப்ரீதியோடு ஸமஸ்த விஷய ஞான ரூப ப்ரயோஜனத்தைத் தருவதாயும் ச்ரேஷ்டமாயுமுள்ள இந்த பஞ்சாக்ஷர மந்த்ரத்தை ஸாக்ஷாத் ஈச்வரனிடமிருந் துபதேசம் பெற்றுக்கொண்டாள். அது ஸமயம் தேவியின் மடிமீதமர்ந்திருந்த குமாரக்கடவுளும் அந்த உத்தமமான மந்த்ரத்தை க்ரஹித்துக் கொண்டார். ஆனாலவர் குழந்தைப் பருவத்தி லிருந்தமையால், இயற்கையாகவே குருவான பிதாவிடமிருந் துபதேசம் பெற்றோமென்ற கருத்தினோடு க்ரஹித்தாரில்லை. ஆயினும் அவரை அடைந்த அந்த பஞ்சாக்ஷர மந்த்ரமானது, வித்திலுள்ள கிளைகளோடு கூடிய வ்ருக்ஷம் போன்றும், ஜலத்தில் விடப்பட்ட எண்ணெய்த்துளி போன்றும், உத்தமமான பாத்ரத்திற் கொடுக்கப்பட்ட தானம் போன்றும், இயல்பிலே புத்திமானுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட சாஸ்த்ரம் போலவும், பலவிதங்களில் வ்ருத்தியடைந்தது. சிவபெருமானிடத் துபதேசம்பெற்ற காலந்தொடங்கி தேவியான பார்வதி திவ்ய ஞானத்தைக் கொடுக்கக்கூடிய அந்த பஞ்சாக்ஷர மந்த்ரத்தை விசேஷ பக்தியோடு ஈச்வரரால் அநுக்ரஹிக்கப்பட்டவாறு ஜபித்து வந்தாள். தேவியுடன் சிவபெருமான் உத்யானவனத்தைவிட்டுக் கைலாஸத்துள்ள அந்தப்புர மடைந்தார். (69)

(உ-க)

கதாசித் பர்வதே தேவீ வித்யாப்யாஸந தத்பரா ।
ப்ரஹ்மாணம் ஸமாஹூய நியோகம் க்ருதவாந் ப்ரபு: ॥ (70)

ஸஹாஸ்தே நாத்ய ஜாதோ ப்ரஹ்மா ஷடாஸ்ய ஸந்நிதௌ ।
உபாத்யாய ஸ்வரூபேண ப்ரணவம் ச்ரோதுவாந் பரம் ॥ (71)

(உ)

குமாரரது ஐந்தாவது வயதில் வித்யாப்யாஸத்தின்பொருட்டு பிரஹ்மாவை வரவழைத்து (குமாரருக்கு) வித்யாப்யாஸம் செய்விக்கும்படி ப்ரபு கட்டளையிட்டார். இவ்வாறு சிவபிரானுல் ஆஞ்ஞாபிக்கப்பட்ட ப்ரஹ்மதேவரும் கைலாஸத்திலேற்படுத்தப் பட்டிருக்கும் வித்யாசாலைக்குக் குமாரனையழைத்துச்சென்று, உபாத்யாய ஸ்தானத்தில் தாமிருந்துகொண்டு குமாரரைப் பார்த்து ப்ரணவத்தை உச்சரிதார். (71)

(மூ)

தஸ்மை தத்த்வா ப்ரணவம் பரமம் குமாராய பிநாகத்ருக் ।
ஸர்வாத்யம் ப்ரணவம் ப்ரோக்தம் ப்ரஹ்மணா ச ஸமீரிதம் ॥ (72)

பஞ்சாஸ்யாஸ்யஸ்ய ஸ்தாணோ: ஶ்ருதிஶிரோமணிம் தம் விது: ।
யஸ்ய ஜ்ஞாநம் பரம் புண்யம் பவாரம் முக்திமஹோததி ॥ (73)

யஸ்யாப்ரவிஜ்ஞாநே வித்யாப்யாஸேந கிம் பலம் ।
பவத்பிரத்ர வக்தவ்யம் பூர்வமேவார்தமாஶு ச ॥ (74)

(உ)

அதனைக் கேட்டுப் புத்திமானுகிய குமாரரும் ப்ரஹ்மதேவர் சொன்னதைத் தம் வாக்கினுல் உச்சரித்துவிட்டு (அவரைப் பார்த்து) "இப்ரணவத்தின் பொருளை தாங்கள் முதலில் சொல்லி விட்டுப் பின்னர் இதின் வர்ணத்தையும், வர்ணத்தின் பொருளையுஞ் சொல்லியருளவேண்டும். ஏனெனில், அர்த்தக்ஞானமில்லாது வித்யாப்யாஸம்செய்வதில் ப்ரயோஜனம் யாது? ஆகையாற் குருவாகிய தாங்கள் ஆதரவுடன் இந்த ப்ரணவத்தின் பொருளைக் கூறவேண்டு"மென்று கேட்டார். (74)

(மூ)

குமாரேணைவமுக்தஸ்து ஸாத்வஸம் வீக்ஷ்ய தம் குஹம் ।
மத்வா தேவ ஸமீபம் ச தூஷ்ணீமேவ வ்யவஸ்தித: ॥ (75)

(உ)

இவ்வாறு குமாரக்கடவுளால் வேண்டிக்கொள்ளப்பட்ட ப்ரஹ்மதேவன் வியப்போடு அவருடைய முகத்தைச் சற்று பார்த்துவிட்டு, பரமசிவனுடைய ஸமீபத்தை யடைந்து மௌனமாகவே நின்று விட்டார். (75)

(ஸ-ம்).

தேவோऽபி தத³பி⁴ப்ராயம் ஜ்ஞாத்வா விஸ்மய ஸம்யுத: ।
குமாரஞ்ச ஸமாஹூய ஸிம்ஹாஸந ஸமாஶ்ரித: ॥ (76)
ப்ரணவார்த²ம் வத³ஸ்வேதி போ³த⁴யாமாஸ தம் ஸுதம் ॥ (76½)

ஜ்ஞாத்வாயதோ³ வக்தவ்யம் கிமேதம் விப்ரஸம்ஸதி ।
தூஷ்ணீம் பட²ஸ்வ கு³ருணா படி²தம் ஸஹபா³லகை: ॥ (77½)
இத்யுக்தே து மஹாதே³வே ப்ராஹ ஶம்பு⁴ம் கு³ஹஸ்ஸ்வயம் ॥ (78)

(உ)

சிவபெருமானும் இங்கிதத்தாற் ப்ரஹ்மதேவரது கருத்தை யறிந்துகொண்டுக் ஆச்சர்யப்பட்டுக் குமாரரை வரவழைத்து ஸிம்ஹாஸனத்திலிருந்துகொண்டே அவரைப் பார்த்து ப்ரணவார்த்தத்தைச் சொல்லும்படி வினவினர். சற்று தாமதித்ததும், “உனக்குத் தெரியுமானாற் சொல்லலாம். யாது காரணத்தை உத்தேசித்துப் பாசாங்கு செய்கிறாய்? குருவினாற் சொல்லிவைக்கப்பட்ட பாடத்தைக் கூடச்சேர்ந்த பாலர்களோடு மௌனமாய்ப் படிப்பாயாக” என்று ஆஞ்ஞாபித்தருளினர். இவ்வாறு ஸ்வயம் ப்ரகாசரான மகாதேவன் கூறுங்கால் அவரை (ஈசனை) நோக்கி குஹஸ்வாமி (பின் வருமாறு) சொல்லலுற்றார். (78)

(ஸ-ம்) ஸ்ரீ ஸ்கந்த³: உவாச ॥

ஶம்போ⁴ தே³வ மஹாதே³வ ஸர்வஜ்ஞ தே³வ நமோऽஸ்து தே ।
உக்தாயம் ப்ரணவஜ்ஞாய பரம் வக்தும் ந ஶக்யதே ॥ (79)

அப்³தி⁴ந்தே³வ ஸ்தி²தா ப்³ரஹ்மா ஸர்வ ஶாஸ்த்ரார்த² ஸம்பத³ம் ।
ஸந்த்ரிய தஸ்ஸ்த்ர தி³திவாந்த்ர விஷ்ரதே ॥ (80)

[illegible]
[illegible] (81)
[illegible] (81½)

(உ) ஸ்ரீ குஹஸ்வாமி அருளுவதாவது:—

"ஸமஸ்த தேவர்களாலும் வணங்கப்பெற்ற ஶம்போ! மஹாதேவா! ப்ரஹ்மனால் முன் சொல்லிக் கொடுக்கப்பட்ட ப்ரணவத்தின் பொருளை யறிந்து கொள்ளாமல் மேற்சொல்ல முடியுமா? ஸ்தாவர ஜங்கம ரூபமாயுள்ள ஸமஸ்த உலகங்களு மிந்த ப்ரணவத்திலேதான் வஸிக்கின்றன; "ஸத்யம்" என்று சொல்லப்பட்ட "ப்ரஹ்ம"மும் இதிற்றான் நியதமாயிருக்கின்றது; இதனை விட்டு வேறொன்று மில்லை. ப்ரபோ! பரிபூர்ணா! ப்ரணவத்தின் பொருளை நான் சொல்லிக் கேட்பதில் தங்களுக்கு ப்ரிய மிருக்குமாயின் உயர்ந்த ஆஸனத்தி லமர்ந்துகொண்டு கேட்கக்கூடாது; கை கூப்பித் தலை வணங்கிக் கேட்பீர்களாகி லாதரவாய்ச் சொல்லுகின்றேன்", என்றார்.

(ஊ) ஸூத: ॥

[illegible]
[illegible] (82½)
[illegible] (83)

[illegible]
[illegible] (84)

[illegible]
[illegible] (85)

[illegible]
[illegible] (86)
[illegible] (86½)

(உ) ஸூதமஹாமுனிவர் சொல்லுவதாவது:—

முருகாது கம்பீரமாயுள்ள யிம்மொழிகளைச் (சிவபெருமான்) செவியுற்று முன்னர் நிகழ்ந்த வ்ருத்தாந்தங்களையும் ஞானதிருஷ்டியினு லறிந்துகொண்டு சற்று புன்னகை செய்து, குமாரரை நோக்கி ஸ்ரீ ஶங்கரர் கம்பீரமான வாக்கினுல் மறுமொழி யருள ஆரம்பித்தார். "குழந்தாய்! நமது துடையாகிற இந்த உயர்ந்த ஆஸனத்தின்மே லமர்ந்துகொண்டு ஸமஸ்த வேதப்பொருளின் தொகுப்பாயிருக்கின்ற ப்ரணவப் பொருளை விரித்துரைப்பாயாக" வென்றருளினர். ஸகல உலகங்களுக்குங் குருவாகிய பரமசிவனிவ்வாறு திருவாய்மலர்ந்தருளியதும், நாணலிற் திருவவதாரஞ் செய்த முருகபிரான் தமது தந்தையாராகிய சிவபெருமானது மடிமீதேறிச் சிறுபிள்ளைத் தன்மையினுல் ஸர்வ லோகேசராகிய மஹேஶ்வரரைப் பார்த்துத் தகப்பனுரென்னும் பாவனையுடன் ப்ரணவத்தின் பொருளைத் தேவ வருஷத்தில் ஒரு வருஷகாலம் மூச்சு விடாம லுரைத்தனர். அவ்வளவு காலமுரைத்துங்கூட ப்ரணவத்தின் பொருளை நிச்சயிப்பதில் முடிவடையவில்லை. (86½)

(உ-ம)

[illegible]
[illegible] (87½)

[illegible]
[illegible] (88½)

[illegible]
[illegible] (89½)

[illegible]
[illegible] (90½)

[illegible]
[illegible] (91½)



ஸ்ரீ குமாரஸ்வாமி ஸாக்ஷாத் பரமசிவன் மடிமீதமர்ந்து ப்ரணவப் பொருளுரைத்தல். [பக்கம் 20

ஸநவம் விதாய ஹ்ருதயே குமார பரீக்ஷணே ।
ஸ்வஹஸ்தேந க்ருஹீத்வா தம் ஸம்வேஶ்ய க்ரோடேநைவ ॥ (92½)

போதயாமாஸ பூதேஶ: ப்ரணவார்த்தம் ஸதத்வகம் ।
रामेशमारभ्य तथा पर्वतं मलयं परम् ।
सर्वक्षेत्राणि संसेव्य पुनः सत्यगिरीश्वरम् ॥ (90)

पर्वतं तीर्थयात्रां च प्राप्य हर्षितमानसः ।
विधाय सह भोगैश्च तीर्थयात्रोत्सवं ततः ॥ (91)
सत्यसन्धो हरिश्चन्द्रः शिवं सम्पूजयत्तदा ॥ (91½)

(உ)

மஹாதாதாவும் மஹாதீர புருஷனுமான அந்த ராஜ ஶ்ரேஷ்டன், தன் மனோரதம் (கோரிக்கை) பூர்த்தி செய்யப்பட்டவனுய் தீர்த்தயாத்திரையில் ஆவல் கொண்டு அந்த திருப்பரங்குன்றத்தை விட்டுப்புறப்பட்டார். வித்வான்களான ப்ராஹ்மணர்களோடு புறப்பட்ட அந்த மஹாராஜன் ராமேஶ்வரம் முதல் மலைய பர்வதம் வரையுமுள்ள க்ஷேத்ரங்களுக்குச் சென்று ஆங்காங்கு தீர்த்தாடனம் ஸ்வாமி தர்சனம் முதலியவைகளைச் செய்து முடித்துக் கொண்டு, மறுபடியும் திருப்பரங்குன்றத்தை அடைந்து முருகப்

பிரானையும் அம்பிகையுடன் ஸத்யேச்வரரையும் தரிசித்து நமஸ்கரித்து விட்டுப் பின் தமது சொந்த நகரமாகிய பரிசுத்தமான அயோத்யாபுரியை அடைந்து, சூர்ய சந்த்ரர்கள் உள்ளவரையில் தமது கீர்த்தியை பூமி முழுதும் (எல்லா உலகங்களிலும்) பரவச் செய்து நிலை நிறுத்தி, ஸத்ய ஸந்தரான ஹரிச்சந்த்ர மஹாராஜன், நெடுங்காலம் ராஜ்ய பரிபாலநம் செய்து வந்தார். (91½)

(மூ)

ഏതാദൃശസ്യ ക്ഷേത്രസ്യ മഹിമാ കേന വര്ണ്യതേ ।
തഥാപി വക്ഷ്യേ യുഷ്മാകം സംഗ്രഹേണ മുനീശ്വരാഃ ॥ (92½)
തത്രൈവ ഹി പ്രശംസന്തി മാഘസ്നാനം മഹര്ഷയഃ ॥ (93)

ഗുഹപുഷ്കരിണീതീര്ഥേ സത്യതീര്ഥേऽഥവാ ദ്വിജാഃ ।
ഗംഗാകുണ്ഡേऽഥവാ മാഘേ ത്രിരാത്രം വാ സകൃന്നരഃ ॥ (94)

(1) ഇനോദയേ തു യഃ സ്നാതി തസ്യ പുണ്യം മഹാത്മനഃ ।
വക്തും ശക്തഃ സ്വയം സാക്ഷാത് ഷണ്മുഖോ നാന്യ ഏവ ഹി ॥ (95)

(உ)

ஹே மஹரிஷிகளே! இப்பேர்ப்பட்ட இந்த க்ஷேத்ரத்தினுடைய மகிமையை யாராலுரைக்க முடியும். ஒருவராலேயும் முடியாது. ஆயினும் நான் உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். மஹரிஷிகளெல்லாம் இந்த க்ஷேத்ரத்தில் மாகஸ்நாநம் செய்கிறது மிக புண்யப்ரதமென்று கொண்டாடுகிறார்கள். மாக மாஸத்தில் இங்கேயுள்ள குஹபுஷ்கரிணியாகிய சரவணப்பொய்கையிலாவது கங்கா குண்டத்திலாவது, மூன்று நாள் அல்லது ஒரு தடவையாவது, ஸூர்ய உதயத்தில் எவன் ஒருவன் ஸ்நாநம் செய்கிறானே, அந்த மகாத்மாவினுடைய புண்யத்தைச் சொல்ல ஸாக்ஷாத் ஷண்முகநாதன்தான் ஸமர்த்தரே யன்றி மற்றொருவருமிலர். (95)

---

(1) ഭാനൂദയേ തു—പാഠാന്തരം.

(மூ)

शृङ्गस्य पूर्वदिग्भागे बाणमात्रप्रमाणके ।
क्षीरकुण्डं महातीर्थं प्रसिद्धं भुवनत्रये ॥ (96)
तत्र स्नानं मनुष्याणां सर्वपापविनाशनम् । (96½)

(உ)

மலையின் கீழ்பாகத்தில் ஒரு வில்லடி தூரத்தில், மூன்று உலகங்களிலும் ப்ரஸித்திபெற்ற "க்ஷீரகுண்டம்" என்னும் ஒரு மகா தீர்த்த மிருக்கிறது. அதில் ஸ்நாநம் செய்யும் மனுஷ்யர்களுடைய ஸகல பாபங்களும் நாசமடைந்து விடும். (96½)

(மூ)

शृङ्गस्य दक्षिणे (1) पार्श्वे कुण्डाकारेण वर्तते ।
कार्तिकेयाज्ञया याता साक्षाद्गङ्गा सुरापगा ॥ (97½)
[illegible] भक्तवर्याय कुशदर्भादि चिह्नितैः ॥ (98)

तत्र पातालगङ्गायां कार्तिके सोमवासरे ।
सूर्याय स्वस्ति मन्त्रेण स्नात्वा सङ्कल्प्य पूर्वकम् ॥ (99)

वस्त्रान्न स्वर्णदानानि दत्त्वा शक्त्यनुसारतः ।
यः कुमारं गुहं साक्षात् शिवशक्त्यात्मकं नरः ॥ (100)
संप्राप्नोत्यखिलान् भोगानन्ते कैवल्यमाप्नुयात् (100½)

(உ)

மலையின் தென்பாகத்தில் தேவநதியான ஆகாச கங்கையானது, கார்த்திகேயனுடைய ஆக்ஞையினால், ஒரு பக்த சிரேஷ்டனது வேண்டுகோளின்படி, குசம் தர்ப்பை முதலான அடையாளங்களுடன் ஸாக்ஷாத்தாகத்தோன்றி ஒரு குண்டாகாரமாயிருக்கின்றது. அந்த பாதாள கங்கையில் கார்த்திகை மாஸம் ஸோம வாரத்தன்று ஸ்ங்கல்பம் செய்துகொண்டு "ஸூர்யாய" என்னும

(1) भागे—पाठान्तरम्.

வேதமந்த்ரத்தை உச்சரித்துக் கொண்டு ஸ்நாநம் செய்து, தன் சக்திக்கியன்றபடி வஸ்த்ரம் ஸ்வர்ணம் அன்னம் முதலிய தானங்களைச் செய்து ஸாக்ஷாத் சிவ சக்திஸ்வரூபியாயும் (ஹ்ருதய) குஹையில் வஸிக்கிறவராயும், விளங்கும் குமாரஸ்வாமியை எவன் தரிசனம் செய்கின்றானோ அவன், இவ்வுலகில் ஸகல போகங்களையும் அநுபவித்து முடிவில் மோக்ஷஸாம்ராஜ்யத்தையும் அடைகின்றான். (100½)

(ஶ்லோ)

கார்த்திக்யாம் ஸோமவாரே து ப்ரதிபத்தாவபி ஶுக்லக: ।
பாதாலகங்காஸலிலே ய: ஸ்நாத்வா குஹம் ப்ரபஶ்யதி ॥ (101½)

கரோதி தீபதானம் ச தஸ்ய புண்யம் வதாம்யஹம் ।
அகம்யாகமநாத் பாபாத் அபக்ஷ்யஸ்ய ச பக்ஷணாத் ॥ (102½)
அகார்யகரணாத் தஸ்மாத் முச்யதே நாத்ர ஸம்ஶய: ॥ (103)

(உ)

க்ருத்திகா ஸோமவாரத்தன்று எவன் ஒரு தடவையாவது பாதாள கங்கா தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்துவிட்டு குஹஸ்வாமியை தரிசனம் செய்து தீபதானமும் செய்கின்றானோ, அவன் ஜாதிகெட்டவனாக இருந்தாலும் அவனுக்கேற்படும் புண்ய விசேஷத்தைக் கூறுகின்றேன்; சேர்க்கை செய்ய யோக்யமில்லாத ஸ்த்ரீகளிடம் போகம் செய்ததாலுண்டாகும் பாபத்தினின்றும் புஜிக்கக்கூடாத வஸ்துவை புஜித்ததாலுண்டாகும் பாபத்தினின்றும் இன்னும் அநேகமான அகார்யங்களினாலுண்டாகும் பாபங்களினின்றும் விடுபடுகின்றான். இது விஷயத்தில் ஸம்சயமே இல்லை. (103)

(ஶ்லோ)

கார்த்திக்யாம் ஸோமவாரே யா நாரீ பக்த்யா விஶேஷத: ।
ஸ்நாதி பாதாலகங்காயாம் கரோதி குஹதர்ஶநம் ॥ (104)

தஸ்யா ஜந்மஸஹஸ்ரோத்தம் பாபம் நஶ்யதி ஸர்வத: ।
ஸதீ ஸௌபாக்யஸம்ஹிதம் பாதிவ்ரத்யம் ச லபேத் ॥ (105)

(உ)

மேலும் க்ருத்திகா ஸோமவாரத்தில் எந்த ஸ்த்ரீயானவள் விசேஷ பக்தியோடும் பாதாள கங்கையில் ஸ்நாநம் செய்து குஹ ஸ்வாமியை தரிசனம் செய்கின்றாளோ அவள், புத்ர பௌத்ராதிகளோடு கூடிய தீர்க்கமாங்கல்யத்தையும் ஸர்வ பாக்யங்களோடு கூடிய த்ருடமான பதிவ்ரதா தர்மத்தையும் அடைகிறாள். (105)

(மூலம்)

கார்த்திக்யாம் க்ருத்திகாயோகே ஸ்வாமிபுஷ்கரிணீஜலே ।
ஸ்நாத்வா ஷட்க்ருத்திகா ஸேவேத ஸ்வாமிநாதஸ்ய தர்ஶநம் ॥ (106)

ய: கரோதி ஸக்ருத்பக்த்யா நாரீ வா புருஷோऽथவா ।
இஷ்டார்த்தஸித்திம் ஸகலாம் லபதே நாத்ர ஸம்ஶய: ॥ (107)

(உ)

கார்த்திகை மாஸத்தில் க்ருத்திகா நக்ஷத்திரத்தன்று ஒரு ஸ்த்ரீயேனும் புருஷனேனும் பக்தியுடன் ஸ்வாமி புஷ்கரிணீ தீர்த்தத்தில் ஒருதரமாவது ஸ்நாநம்செய்து ஷடாக்ஷரமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு ஸ்வாமிநாதரை தரிசனம் செய்வாராகில் அவர்கள் இஷ்டஸித்திகளை எல்லாம் அடைவார்கள். இதில் ஸம்சயமே இல்லை.(107)

(மூலம்)

ப்ரதிமாஸம் க்ருத்திகாயாம் உபவாஸபராயண: ।
(1) வ்ரதம் கரோதி யோ பக்த்யா ஸர்வாபீஷ்டமவாப்நுயாத் ॥(108)

(உ)

ப்ரதிமாஸம் கார்த்திகையன்று உபவாஸபரனயிருந்துகொண்டு பக்தியுடன் வ்ரதத்தை அநுஷ்டிப்பவர் ஸர்வாபீஷ்டங்களையும் அடைகின்றார். (108)

(மூலம்)

கும்பராஶிகதே ஸூர்யே யதா ஸூர்யோதயே ஸம்ஸ்திதே ।
தஸ்மிந்து மாத்யாஹ்நிக ஸ்நாநம் க்ஷீரகுண்டே விஶிஷ்யதே ॥ (109)

---

(1) வ்ரதம் கரோதி விதிவத் — பாடாந்தரம் ॥

க்ஷீரப்ரியஸ்ய தேவஸ்ய ஸத்யாத்ரே ஶிவாக்ருதே: ।
தர்ஶே தர்ஶே ஸதாகத்ய காமதேநுஶ்ஶிவாஜ்ஞயா ॥ (110)
தாராபிஷேகம் குருதே ஸ்வக்ஷீரைஶ்ச ஸுதாமயை: ।
தந்நிர்மால்யம் பர்வதாக்ரே குண்டாகாரேண திஷ்டதி ॥ (111)
தத்குண்டே ஸர்வஸ்நாநம் கங்காஸ்நாநாதிகம் பவேத் ॥ (111½)

(உ)

மாசிமாஸத்தில் ஸூர்யன் கும்பராசியில் வருங்காலத்தில் ஸூர்ய சந்த்ரர்கள் ஒன்றுசேரும் காலமாகிய அமாவாஸை யன்று, க்ஷீரகுண்டத்தில் மாத்யாஹ்நிகஸ்நாநம் செய்வது ரொம்ப விசேஷமானது. ப்ரதி அமாவாஸைதோறும் காமதேனுவானவள் சிவாக்ஞையினுலே ஸத்யாசலத்திற்கு வந்து அமிர்தமயமான தன் பாலால், பாலபிஷேகத்தில் ப்ரியமுள்ளவரான ஸத்யாத்ரி சிகரவடிவாயுள்ள ஸத்யேஶ்வர மூர்த்திக்கு, தாராபிஷேகம் செய்கின்றுள். அப்பொழுது அந்த நிர்மால்யமானது மலேக்குக் கிழ்பக்கத்தில் ஒரு குண்டாகாரமாக (குளமாக)த் தங்குகிறது. ஆகையால் அந்த க்ஷீரகுண்டத்தில் ஸ்நானமானது கங்காஸ்நானத்தைக் காட்டிலும் விசேஷமானது. (111½)

(க்ஷீ-ம்)

க்ஷீரகுண்டதடே ஸ்தித்வா யத்கிஞ்சித் தாநமாசரேத் ।
தந்மேருஸமதாம் யாதி பர்வதஸ்ய ப்ரபாவத: ॥ (112½)

கோதாநம் பூமிதாநஞ்ச வஸ்த்ரம் கம்பலமேவ ச ।
யோ ததாதி ஸத்பாத்ரே ஸ ஸம்ராட் பவதி த்ருவம் ॥ (113½)

(உ)

அந்த க்ஷீரகுண்டக்கரையிலிருந்து ஒரு அணுமாத்திரம் தானம் செய்தாலும் அந்த பராசல க்ஷேத்ரத்தினுடைய மகிமையினல் அது மகாமேருவுக்கு ஸமானமாகிறது. அந்த தீர்த்தக்கரையில் கோதானம் பூதானம் வஸ்த்ரதானம் கம்பளதானம், இத்யாதிதானங்களை எவன் ஸத்பாத்திரத்தில் செய்கின்ருனே அவன் சக்ரவர்த்தியாக ஆகின்ருன். அது நிச்சயம். (113½)

(மூ-ம்)

धूपपात्रं दीपपात्रं नैवेद्यानां च भाजनम् ।
अभिषेकजलाधारं चैव पटं कलशमेव च ॥ (114½)

स्नपनाद्यं परशस्य ग्राहस्य पारोत्तमः ।
छत्रचामरभृङ्गारदर्पणव्यजनानि च ॥ (115½)

सूक्ष्माणि विचित्राणि दिव्यान्याभरणानि च ।
घण्टां तु जवनिकांश्चैव चित्रवर्णैस्समुज्ज्वलान् ॥ (116½)

शुक्लवर्णैः शोणवर्णैः हरिद्रावर्णैश्चैव च ।
पीताम्बरं सर्ववर्णं वस्त्रेऽन्यत् समुज्ज्वलम् ॥ (117½)

यानि यानि च वस्तूनि शिवप्रीतिकराणि च ।
सुब्रह्मण्याय देवाय सत्याद्रीशाय शम्भवे ॥ (118½)

यो ददाति नरो भक्त्या न्यायार्जितधनेन च ।
यथाशक्त्या च स्वर्लोके सप्त वर्षाणि वर्तते ॥ (119½)

सोऽपि सर्वानरीन् जित्वा सपुत्रस्सबान्धवः ।
देहान्ते शिव सारूप्यं ब्रह्मादीनां च दुर्लभम् ॥ (120½)
दिव्यभोगसमायुक्तो मोदते नात्र संशयः ॥ (121)

(உ)

ஸத்யாசலேஶ்வர மூர்த்திக்கும் ஸுப்ரஹ்மண்ய பரமாத்மாவுக்கும் உபயோகப்படுத்தும்படியாக தூபக்கால், தீபக்கால், நைவேத்யங்கள் எடுக்கப்பாத்ரம், அபிஷேகம் செய்யக் கலசம், உபசாரத்திற்காகக்குடை வெண்சாமரம், காளஞ்சி கண்ணாடி விசிறி முதலான ஸாமான்கள், அநேகவிதங்களான வெண்பட்டுகள், திவ்யமான ஆபரணங்கள், நல்ல நாதத்தோடுகூடிய கண்டாமணி, அநேகவர்ணங்களால் அழகு பொருந்திய திரைச்சீலைகள் இதுகளையும், வெண்மை நிறம் காவிநிறமுதலிய பலவித வர்ணங்களால் ஜ்வலித்துக்கொண்டிருக்

கும் பீதாம்பரத்தையும், சிவ ஸுப்ரஹ்மண்ய ப்ரீதிகரமான எல்லா வஸ்துக்களையும், ஸுகாரரைாகிய ஸத்யாசலேஶ்வரரையும் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியையும் உத்தேசித்து (தான்) நியாயமாய் ஸம்பாதித்தத்ரவ்யத்தினலே சக்திக்குத் தக்கபடி சேகரித்து பக்தியோடு கொடுக்கும் ஒருவன், இப்பூலோகத்தில் புத்ரபாக்யம் பெற்று பசு முதலிய ஸகல ஸம்பத்துக்களையும் அடைந்து, ஸகல சத்ருக்களையும் (1) (அந்த: சத்ருக்கள்—பஹிர் சத்ருக்கள் இவர்களையும்) ஜயித்து, ஸர்வைஶ்வர்யங்களையும் திவ்ய போகங்களையும் அடைந்தனுபவித்து. தேகாந்தத்தில் ப்ரஹ்மாதி தேவர்களுக்கும் கிடைப்பதற்கரியதாகிய சிவஸாரூப்யத்தை அடைகின்றான். இதில் ஸம்சயமேயில்லை. (121)

(ஶ்லோ)

[Grantha verse, illegible in transcription] ।

[Grantha verse, illegible in transcription] ॥ (122)

[Grantha verse, illegible in transcription] ।

[Grantha verse, illegible in transcription] ॥ (123)

[Grantha verse, illegible in transcription] (123½)

(உ)

ஹே மகரிஷிகளே! இந்த்ரன் முதலான திக்பாலர்களும், ப்ரஹ்ம நிஷ்டர்களான மஹரிஷிகளும், புண்யவான்களாகிய ஹரிச்சந்த்ரன்முதலான ராஜரிஷிகளும், ப்ரஹ்மதேவரும், ஸநகாதிகளும், ஸூர்ய சந்த்ரர்களும, திருப்பரங்குன்றத்தில் ஸச்சிதாநந்தவிலக்ஷணனாகிய ஸத்யாசலேஶ்வர மூர்த்தியையும் ஸ்கந்த ஸ்வாமியையும் பூஜைசெய்து தங்கள் தபோபலத்தினல்முக்தியடைந்தார்கள். (123½)

(ஶ்லோ)

[Grantha verse, illegible in transcription] ।

[Grantha verse, illegible in transcription] ॥ (124½)

---

(1) காமக்ரோதாதி சத்ருக்கள் இவைகளை ஜயிப்பதாவது இந்திரிய நிக்ரகம் செய்தல்.

ஶரீராந்தேऽத்ர ஸர்வேஷாம் ப்ராணிநாம் ஸத்யநாயகஃ ।
ஸாக்ஷாச்ச்ரீ தக்ஷிணே கர்ணே தாரகம் பஞ்சவர்ணகம் ॥ (125½)
வ்யாசஷ்டே வாம வேதாந்த நிர்ணீதம் ஶிவாத்மகம் ॥ (126)

(உ)

இந்த க்ஷேத்ரமானது சுற்றி நான்கு பக்கங்களிலும் ஐந்து குரோசம் (கூப்பிடுதூரம்) விஸ்தீர்ணத்திற்கு மஹா பாதகங்களையும் நாசம் செய்கிறதாக இருக்கிறது. இது ப்ரஹ்மப்ரளய காலத்திலும் நாசமடைகிறதில்லை. இந்த க்ஷேத்ரத்திலுள்ள எல்லாப்ராணிகளுக்கும் மரணகாலத்தில் ஸத்யாசலேஶ்வரமூர்த்தியானவர், ஸர்வவேதாந்தங்களில் நிச்சயம் செய்யப்பட்டதும் சிவசக்தி ஸ்வரூபமாயுள்ளதும் ஐந்தெழுத்தையுடையதுமாகிய தாரகமந்த்ரத்தை, வலது காதில் தாமே உபதேசம் செய்கின்றார். (126)

(மூ)

அந்யமேகம் ரஹஸ்யந்தே வக்ஷ்யே விப்ரஸத்தம ॥ (126½)

(உ)

"ஹே ப்ரஹ்ம குமார! ஸநத்குமார மஹரிஷே! இன்னும் உமக்கு ஒரு ரஹஸ்யம் சொல்கின்றேன், கேளும்" என்று நந்திகேஶ்வரர் சொல்லுகிறார்.

(மூ) நந்திகேஶ: ॥

புராகஸ்த்ய வசஶ்ஶ்ருத்வா ராமோ ராஜீவலோசந: ।
ஸீதாம் ஜநகஜாம் ப்ராப்த ஸத்யாத்ரீஶ ப்ரஸாதத: ॥ (127½)

(உ) நந்திகேசர்:—

முன்காலத்தில் தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீ ராமபிரான் அகஸ்த்ய மகரிஷியின் வார்த்தையைக் கேட்டு ஸத்யாசலேஶ்வர மூர்த்தியினுடைய அநுக்ரஹத்தினாலே (சத்ருவினாலபகரிக்கப்பட்ட) ஜநகராஜகுமாரியாகிய தன் பத்னி ஸீதாதேவியை யடைந்தார். (127½)

(ஶ்லோ) ஶ்ரீராம: ॥

கேநோபாயேந ப்ரஹ்மர்ஷே ப்ராப்ஸ்யாமி ஜநகாத்மஜாம் ॥ (128)

தஸ்ய தத் வசநம் ஶ்ருத்வா ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ॥ (128½)

(உ) ஸ்ரீ ராமர் கேட்கிறார்:—

ஹே ப்ரஹ்மரிஷே! எந்த உபாயத்தினுல் (ராவணனுலகபரிக்கப் பட்ட) ஸீதையை நான் திரும்பி அடைவேன் என்று (அகஸ்த்ய மகாமுனிவரை ஸ்ரீராமன்) கேட்க, மகா பராக்ரம சாலியாகிய அந்த ராமபிரானுடைய வார்த்தையைக் கேட்க அகஸ்த்யர் சொல் கிருர். (128½)

(ஶ்லோ) அகஸ்த்ய: ॥

ஸத்யாசலோ மஹாபாக பவித்ர: புண்யவர்த்தந: ।

அஸ்தி ஶைலோ மஹோத்துங்க: ஸர்வ ப்ரஹ்மாதி ஸேவித: ॥ (129½)

பூஜயந்தி மஹாத்மாந: ஸதாம் தேவமவ்யயம் ।

ஸாநுஜ: ஶீக்ரம் தத்க்ஷேத்ரம் ஶீக்ரம் வ்ரஜ ஸமாதரா ॥ (130½)

(உ) அகஸ்த்ய மாமுனிவர் சொல்லுவது:—

"மகா பாக்யசாலியான ஹே ராமசந்த்ரா! ரொம்பவும் உயர்ந்ததும் மலை அருவிகளோடு கூடினதும் ஸர்வ புண்ய பலனைத் தருவதும் மிக்க மஹிமைவாய்ந்ததுமாகிய ஸத்யாசலமென்னும் ஒரு க்ஷேத்ரமிருக்கின்றது. அங்கு எழுந்தருளியிருக்கும் நித்யஸ்வ ரூபியாகிய ஸுப்ரஹ்மண்ய பரமாத்மாவை நான்முகன் முதலான தேவர்கள் எப்பொழுதும் பூஜை செய்துகொண்டிருக்கின்ருர்கள் நீரும் இப்பொழுதே இங்கிருந்து உமது தம்பியோடுகூட சீக்ரமாக அந்த க்ஷேத்ரத்திற்குச் செல்லும்" என உரைத்தனர். (130½)

(ஶ்லோ)

ஶ்ராவிதஸ்த்வகஸ்த்யேந ஸத்யாத்ரிம் ஶீக்ரமாகத: ॥ (131)

தத்ர த்வா மஹாதீர்த்தே ஸ்நாத்வா ஸஹ ஸீதயா ।

ஸ்நாத்வா ராகவ ஶ்ரேஷ்ட: ஶீக்ரமப்யாகத: ஸஹாநுஜ: ॥ (132)

ப்ரதக்ஷிணமதோ க்ருத்வா ஸ்வயம் ப்ரவிவேஶ ஹ ।
தத்ராபஶ்யத்தாஶரதிः ஸ்கந்தம் விஶ்வாத்மகம் விபும் ॥ (133)
க்ருத்வா ப்ரணாமம் பத்த்வா ஸ்தோத்ரம் ஸமுபசக்ரமே ॥ (133½)

(உ)

ராஜ ஶ்ரேஷ்டராகிய அந்த ராமரும் அகஸ்த்ய மகரிஷியினுடைய வார்த்தையைக்கேட்டு சீக்ரமாகத் திருப்பரங்குன்றம் போய்ச் சேர்ந்து, தம்பியோடு மஹா புண்ய தீர்த்தமாகிய ஸ்வாமி புஷ்கரிணி (சரவணைப்பொய்கை)யில் ஸ்நாநம் செய்து கிரிப்ரதக்ஷிணம் செய்து கோவிலுக்குள் போனார். தர்மஸ்வரூபியாயுள்ள தாசரதியானவர்: (தசரகுமாரன்), எங்கும்நிறைந்தவரும் உலக வடிவாயுள்ளவருமான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை அங்கு தரிசனம் செய்துவிட்டு ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தார். (133½)

(மூ) ராமः ॥

தேவதேவ க்ருபாராஶே ஸமவநு ஶிவ நந்தந ।
ரக்ஷ மாம் காருண்யாம்போதே ப்ரபந்நார்தி விநாஶந ॥ (134½)

ஸ்ரீமத் ஸத்யகிரீஶ்வராத்மஜவிபோ ஸ்ரீஸ்வாமிநாத ப்ரபோ ।
ஸாகேதம் ப்ரவிஹாய காநநமஹம் ஸம்ப்ராப்தவாந் பித்ராஜ்ஞயா ॥ (135½)

ஸீதாலக்ஷ்மண ஸம்யுதஸ்ஸவஸந் ஸீதா நஷ்டா மம ।
ஸோऽஹம் ஶரணாகதः கருணயா தேஹ்யத்ய ஸீதாம் மம ॥ (136½)

(உ) ஸ்ரீராமர் ப்ரார்த்தனை:—

தேவாதிதேவா! கருணாமூர்த்தே! ஷாட்குண்ய பரிபூர்ணா! க்ருபாஸமுத்ரமே! சரணமடைந்தவர்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் ப்ரபோ! ஹே சிவஸுப்ரஹ்மண்யமூர்த்தே! என்னை ரக்ஷித்தருளவேண்டுமென்று ஸ்தோத்ரம் செய்து, சக்ரவர்த்தி திருமகனாகிய ராமபிரான், "ஹே ப்ரபோ! ஸத்யகிரீஶ்வர குமாரா! ஹே ஸ்வாமிநாதா! ஜெகந்நாதா! நான் பிதாவின் ஆக்ஞைப்படி அயோத்திமாநகரைவிட்டு ஸீதா லக்ஷ்மணர் ஸஹிதமாய்க் காட்டை அடைந்து வஸித்துக்கொண்டிருந்தேன். அங்கு ஸீதை காணாமல்

போய்விட்டாள். ப்ரபோ! நான் தங்களைச் சரணமடைந்தேன். க்ருபை கூர்ந்து எனக்கு இப்பொழுது ஸீதையைக் கொடுத்தருள வேண்டும்'' என ப்ரார்த்தித்தார். (136½)

(ஶ்லோ)

இதி ஸ்துத்வா குஹம் ராமஸ்ஸ தஸ்யாக்ரே விநயாந்வித: ।
குமாரோऽபி ஸஹஸா தஸ்ய ப்ரஸாதஞ் சகார து ப்ரபு: ॥ (137½)

(உ)

இவ்விதம் குஹஸ்வாமியை ஸ்தோத்ரம் செய்துவிட்டு ராம பிரான் எதிரில்நிற்க, முருகபிரானும் சக்ரவர்த்தி திருமகனாகிய ராம மூர்த்திக்குச் சீக்ரமாகவே அநுக்கிரகம் செய்தார். (137½)

(ஶ்லோ)

ராமோऽபி தந்நமஸ்க்ருத்ய ராவணாதீந் நிஶாசராந் ।
ஹத்வா ஸம்யங் மஹாபாக ஸ்ஸீதயா ஸஹ ஆயோத்யாம் ப்ராவிஶத் ॥ (138½)

(உ)

ஸ்ரீராமரும் ஸ்கந்தஸ்வாமியை மறுபடியும் நமஸ்காரம் செய்துவிட்டு, பிறகு ராவணாதி ராக்ஷஸர்களை யுத்தத்தில் ஹதம் செய்து மஹா பாக்யவானாய், ஸீதாஸமேதராய் அயோத்யாபுரியை அடைந்தார். (138½)

(ஶ்லோ) ஸூத: ॥

தஸ்மாதத: க்ஷேத்ரஸத்ருஶம் நாஸ்தி நாஸ்தி ஜகத்த்ரயே ।
அதோऽயம் ந்யாயதோ யஸ்ய ஸேவ்யம் ஸதா நஸம்ஶய: ॥ (139½)
ஸத்யாவஶ்யஸ்ய மாஹாத்ம்யம் ஶ்ரவணாத் படணாத் த்விஜா: ॥ (140)

ஶ்ராவிதேத ஸகலம் புண்யம் நஷ்டநாஶி நஷ்டநா ।
ஸநத்குமார: ஶ்ரீகாந்தா ஶிவயோகீ மஹாமதி: ॥ (141)

ஸந்தோஷம் பரமம் ப்ராப்ய புநஶ்ச ஶ்ரவணோத்ஸுக: ।
ஹ்ருஷ்டா பரமஸாநந்தா ஶாஸ்த்ரஸ்ய ப்ரஷ்ண பராயண: ॥ (142)

𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑌂 𑌮𑍁𑌨𑍇 ।
𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌥𑌲𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌗𑍁𑌹𑌸𑍍𑌯 𑌚𑌰𑌿𑌤𑌂 𑌮𑌹𑌤𑍍 ॥ (143)

(உ) ஸூதர் சொல்லுகின்றார்:—

"ஆகையால் இந்த க்ஷேத்ரத்திற்கு ஸமானமான க்ஷேத்ரம் மூன்று உலகங்களிலுமில்லவேயில்லை. ஹே மகரிஷிகளே! இந்த ஸத்யாசல மாஹாத்ம்யத்தை கேட்டதினாலும் படித்ததினாலும் நீங்களும் நானும் மிகவும் புண்யசாலிகள்தான்; ஸம்சயமில்லை. இது ரொம்ப ஆச்சரியம். மகா புத்திசாலியும் சிவயோகியுமான ஸநத்குமார மஹரிஷி, முந்தி லோகாநந்தகராகிய நந்திகேஶ்வரரிடமிருந்து இந்த க்ஷேத்ர மாஹாத்ம்யம் எல்லாவற்றையும் கேள்வியுற்று மிக ப்ரீதியுடையவராகி பரமாநந்தத்தை அடைந்து, மறுபடியும் இந்தக் கதையைக் கேட்க ஆவலுடையவராய் பக்தியால் பரவசமாய், தன் குருவாகிய ஸாக்ஷாத் சிவ ஸ்வரூபியான நந்திதேவரைப் பார்த்து இந்த க்ஷேத்ர மாகாத்ம்யத்தையும் முருகபிரானது மகத்தான சரித்திரத்தையும் பின்னும் சொல்லி அருளுமாறு வேண்டிக் கொண்டார். (143)

(மூ)

𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌦𑌂 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌂
𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑍇𑌵 𑌚 ।
𑌪𑌠𑍇𑌤𑍍 𑌸𑌕𑍃𑌦𑍍𑌵𑌾 𑌸𑌕𑌲𑍇𑌷𑍍𑌟 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾
𑌦𑍍𑌗𑍁𑌹𑌸𑍍𑌯𑍈𑌵 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌂 ॥ (144)

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌵𑍇 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑌾𑌣𑍇
𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌮𑌹𑌾𑌶𑌿𑌵𑌕𑍇 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌣𑍇
𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇 𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

(உ)

ஆகையால் மகா அத்புதமான இந்த ஸத்யகிரி (திருப்பரங்குன்ற) மாகாத்ம்யத்தையும் தீர்த்தங்களின் மகிமையையும் எவனொருவன் ஒருதரமேனும் கேட்கின்றானோ அல்லது படிக்கின்

ருனே அவன் ஸகல மனோபீஷ்டங்களையும் அடைந்து ஈஶ்வரானுக்ரஹத்தால் மோக்ஷத்தையும் அடைகின்றான். (144)

ஆறுவது அத்யாயம்
முற்றிற்று.

𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

(𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌕𑌾𑌨𑍍𑌦𑍇) 𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 ॥

𑌶𑌿𑌲𑌾𑌦𑌪𑍁𑌤𑍍𑌰 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌕𑌰𑍁𑌣𑌾𑌨𑌿𑌧𑍇 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌭𑌵𑌤𑌾 𑌗𑌙𑍍𑌗𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑍍 ॥ (1)

𑌸𑍋𑌽𑌤𑍍𑌰 𑌕𑍋 𑌭𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌯𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌜𑌨𑌃 ।
𑌕𑌸𑍍𑌮𑍈 𑌵𑌿𑌧𑌿𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌸𑍁𑌭𑌕𑍍𑌤𑌃 𑌕𑍋 𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌿 ॥ (2)

𑌸 𑌚 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑍇 𑌸𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑍇 𑌸𑍁𑌰𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑍇 ।
𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑍇 𑌪𑌰𑌾𑌤𑍀𑌤𑍇 𑌕𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌕𑌰𑍋𑌤𑍍 𑌸𑍁𑌧𑍀𑌃 ॥ (3)
𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌮𑍍 ॥ (3½)

ஏழாவது அத்யாயம்.

(உரை) ஸநத்குமாரர் சொல்லுகிறார்:—

"ஷட்குண ஸம்பன்னரே! ஸகலமும் அறிந்தவரே! கருணைக் கடலே! சிலாதமஹரிஷியின் புத்ரனாகிய ஹே நந்திகேஶ்வரா! சரவணபவனுடைய ஆக்ஞையினாலே ஒரு பக்தனுக்காக மகா பரிசுத்தமான கங்காதீர்த்தமானது இந்தமலையினுச்சியில் தோன்றியிருக்கின்றதென்று தங்களால் முன்னால் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வுலகத்தில் மஹானாகிய அந்த பக்தன் யார்? நல்லபுத்திமானாகிய அவன், தேவர்களால் பூஜிக்கப்பட்டவரும் மஹா பாக்கியசாலியும் பராபரப்பொருளும் பராத்பரருமாகிய அந்த ஸுப்ரஹ்மண்யமூர்த்தியினிடத்தில் எவ்விதமான பக்தியைச்செய்து அவரைத் த்ருப்தி

செய்வித்தான். இப்பொழுது இதுகளெல்லாவற்றையும் விஸ்தாரமாய்ச்சொல்ல தாங்கள் தான் தகுந்தவர்கள்'', எனத் தெரிவித்துக் கொண்டார். (3¾)

(மூலம்)

ஏவம் ஸ்துதஸ்ததா நந்தீ ஸர்வதேவநமஸ்க்ருத: ।
ஸர்வஶக்த்யா மஹிம்நா ச ஸாக்ஷாச்சங்கரஸந்நிப: ॥ (4½)
ப்ராஹ கம்பீரயா வாசா க்ருபயா முநிஸத்தமம் ॥ (5)

(உ)

இந்த ப்ரகாரம் ஸநத்குமாரரால் ப்ரார்த்திக்கப்பட்டபொழுது, ஸமஸ்த தேவர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரும் ஸர்வசக்தியினாலும் மஹிமையினாலும் ஸாக்ஷாத் பரமசிவனுக்கு ஸமான மானவருமான நந்திகேஶ்வரர், கருணையோடு கம்பீரமான வாக்கினால் அந்த முனிவராகிய ஸநத்குமாரரைப் பார்த்துச் சொல்லுகின்றார். (5)

(மூலம்) நந்திகேஶ்வர: ॥

ஆதஶாந்த ஸ்யெ வர்ண்யெ வராஹாக்யஸ்ய ஸம்ஜ்ஞகே ।
கஶ்சிதாஸீத் ஸர்வதேவாக்ரணீ நந்தீர இதி விஶ்ருத: ॥ (6)

ப்ரக்யாதஸ் ஸர்வதேஶேஷு ஸர்வவித்யாவிஶாரத: ।
ஸம்யக்ஷு விஜித் ப்ரவர: கவீநாமக்ரணீர்மதே ॥ (7)

ஸதஸ்த்வாத் ப்ரத்யஹம் ஸத்யகிரிம் ஸம்ப்ராப்ய பக்தித: ।
காவேரவத்ரிநீ தீர்த்தே வத்ரகூரா ஶோபிதே ॥ (8)

ஸக்ருந்நிமஜ்ஜதாம் ஸத்யஸாரூப்யப்ரதே ஶுபே ।
ஸ்நாத்வா ஸம்ப்ரீயாநேந நித்யகர்ம விதாய ச ॥ (9)

க்ருத்வா து தர்ஶநம் தேவதேவஸ்ய காருண்யநிதே: ।
ஸுப்ரஹ்மண்யஸ்ய கிரிஜாநந்தநஸ்ய மஹாத்மந: ॥ (10)
ப்ரத்யாதிஸ நந்தகீர்த்தி வித்யா ஶாலேந்த்ராவ் மஹாதேஜஸ்வீ ॥ (10½)

(உ) நந்திகேஶ்வரர் சொல்கிறார்:—

ஹே ஸநத்குமார மஹரிஷே! முன் காலத்தில் ஹாலாஸ்ய மென்று பெயருடைய பரிசுத்தமான த்வாதசாந்த க்ஷேத்ரத்தில், மகா புத்திசாலியும் யோகீஶ்வரரும் எல்லா தேசங்களிலும் க்யாதி பெற்றவரும் எல்லா வித்தைகளிலும் ஸாமர்த்யமுடையவரும் சங்கவித்வான்களுக்குள் முதன்மையானவரும் கவிஶிரேஷ்டருமான நக்கீரர் என்று ப்ரஸித்திபெற்ற ஒரு வித்வானிருந்தார். அவர் தினந்தோறும் அந்த ஹாலாஸ்ய க்ஷேத்ரத்திலிருந்து திருப்பரங் குன்றத்திற்கு வந்து, தாமரஸபுஷ்பம் செங்காந்தல் புஷ்பங்களால் நிறைந்து அழகு பொருந்தியதும், ஒருதரம் ஸ்நாநம் செய்தவர் களுக்கும் ஸ்கந்த ஸாரூப்யத்தைக்கொடுக்கும் புண்யதீர்த்தமுமான ஸ்வாமி புஷ்கரிணி என்ற சரவணப்பொய்கையில் பக்தியோடு விதிப்படி ஸ்நாநம் செய்து நித்யாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, பார்வதீ நந்தனனும் தேவதேவனும் கருணாநிதியும் மஹாத்மாவுமாகிய ஸுப்ரஹ்மண்யமூர்த்தியை தரிசனம் செய்யா மல், வித்தையினால் பூஜிக்கத்தகுந்தவராயிருந்தாலும் விசேஷமான மாத்ஸரிய (த்வேஷ) முடையவரான அந்த நக்கீரகவி, மதுரைக்குத் திரும்பிவிடுவார். (10½)

(மூ)

தஸ்யாஹங்காரமாலோக்ய த்ருஷ்ட்வா ஸ்கந்தோ கணாந் ஸ்வகாந் ।
உக்ர ப்ரப்ருதிகாந் காம்ஶ்சித் ப்ராஹ பாவகஸம்பவ: ॥ (11½).

(உ)

அதனால் அக்னிகுமாரராகிய ஸத்யாசலபதி - ஸுப்ரஹ் மண்ய மூர்த்தியானவர், அந்த கவியினுடைய அகங்காரத்தைப் பார்த்து, தமது பூதகணங்களாகிய உக்ரன் (அண்டாபரணன்) முதலிய சிலரை நோக்கி ஆஜ்ஞாபித்தார். (11½)

(மூ)

[illegible] ।
ஶிவ... காசிதா ஸுரா: ॥ (12½)

விஷ்ணுப்ரஹ்மமுகாஶ்ச ஸ்கந்தாத்யா தேவதா[illegible]கா: ।
இதி மத்வா ததோ நைவ ஶிவோऽஹமிதி ஸம்ஸ்மரந் ॥ (13½)
ஸ்திதம் நக்கீரகம் தத்த்வ[illegible] ப்ரோக்தவாந் [illegible] ॥ (14)

(உ)

ஸாக்ஷாத் பரமசிவனே அடிக்கிழங்கு (விருக்ஷத்தின் வித்து); ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரன் ஸ்கந்தன் முதலான தேவர்கள் அந்தக் கிழங்கி(வித்தி)லிருந்து (பரமசிவனிடத்திலிருந்து) உண்டான முளை தளிர் கொம்பு கிளைகளாம்; (மூலப்பொருளாகிற பரமசிவனை பக்தி செய்யும் நமக்கு மற்ற கொம்புகிளைகளாகிற தேவாதிகள் நிகரில்லை;) அதினால் அந்த ஸாக்ஷாத் பரமசிவனே நாம் என்று நினைத்துக் கொண்டு கர்வத்தை அடைந்திருக்கும் நக்கீரரைக் குறித்து தத்வங்களின் கரையைக்கண்ட குஹஸ்வாமி (தம்முடைய) பூதகணங்களைப் பார்த்து உத்தரவு செய்தார். (14)

(ஶ்லோ) ஶ்ரீஸ்கந்த: ॥

ஹே பூதபா: ப்ரதிதிநம் மதுராநகர்யா:
மூட[illegible] கீரகவிரத்ர [illegible] ப்ரஸித்தே ।
க்ஷேத்ரே குமாரஸரஸி ஸ்புடபங்கஜாட்யே
ஸம்ஸ்நாய [illegible] நகரோதி [illegible] ॥ (15)

தஸ்மாதிமம் [illegible]
பத்த்வா த்ருடம் த்ருடதரைர் [illegible] பாஶை: ।
[illegible] குஹரே விநிவேஶ்ய தஸ்ய
த்வாரம் பிதாய ச ஜவேந நிவர்த்[illegible] ॥ (16)

(உ) ஶ்ரீ ஸ்கந்தஸ்வாமி ஆக்ஞை:—

"ஹே பூதகணாதிபர்களே! மூடனாகிய நக்கீரகவியானவன், மதுரைமாநகரிலிருந்து ப்ரஸித்தமான இந்த நமது க்ஷேத்ரத்திற்கு தினந்தோறும் வந்து, மலர்ந்த தாமரை புஷ்பங்களால் நிறைந்ததும் பரிசுத்தமானதுமான குமாரஸரவில் (சரவணப்பொய்கையில்) ஸ்நாநம் செய்தும் நம்மை தரிசனம் செய்யாமல் போகிறான்,

ஆகையால் துரஹங்காரமாகிய மலையிலேறியிருக்கும் (மமதை யடைந்திருக்கும்) இவனை மிக உறுதியான பாசக்கயிறுகளால் பலமாய் இருக்கிக்கட்டி, நம்முடைய பர்வதத்தின் முன்பாகத்தி லிருக்கிற குஹையில் அவனைத்தள்ளி அந்த குஹையின் வாசலை நன்றாய் அடைத்து சீக்ரமாய்த் திரும்பிவாருங்கள்" எனறு ஆக்ஞா பித்தனர். (16)

(ஸ-மூ) ஶைலாதிः ॥

ஸர்வே ஸ்கந்த ஶாஸநேநோக்ர ஸேநாத்யா பூத நாயகாः ।
யத்ர திஷ்டதி நத்கீரோ ஜபத்யாந பராயணः ॥ (17)

ஸரோவராக்ய தடம் ஸ்வாமி பவித்ரம் பரிபாவநம் ।
தபோஹதாஶ் ச ஶக்தாஸ்தே ஜபகாலே வ்யாஹதாः ॥ (18)

(உ) நந்திகேஶ்வரர் சொல்லுகிறார் :—


இவ்விதமாக குஹஸ்வாமியினால் ஆக்ஞாபிக்கப்பட்டவர்களா கிய உக்ரஸேநன் முதலிய பூதநாயகர்கள் ஜபத்யான பராயணரா கிய நக்கீரகவியானவர் எந்த இடத்திலிருக்கின்றாரோ அந்த பரி சுத்தமான சரவணப்பொய்கைக்கரையை யடைந்தும் அவருடைய தபோமகிமையினால் அந்தக் கவிஶ்ரேஷ்டரைப் பிடிப்பதற்கு சக்தி யற்றவர்களாயினர். (18)

(ஸ-மூ)

காம்ஶித்க்ருத்யா ஸ்வாபயேந வக்த்ரேண கணநாயகாः ।
ஏகைகம் விஶ்வஸ்ய க்ருஹீத்வா ஸ்வாஸேநோஹ்ந் ॥ (19)

ஹித்வா த்வியா ஸம்ஶயம் ச கிஞ்சித்தத்ர ஜநாத்திகே ।
ப்ரக்ஷிப்யாஸ்ய தஸ்யாஸ்யம் த்வேஜோஹந்ந்த்ரநிஸ்ஸ்தத் ॥ (20)

ஶ்ரீநாயகே தந்த்ய ஸர்வ ஸ்தோக்ஷேத்ரி ஸம்வாநா ।
க்ஷேத்ரம் விஹகம் ப்ராஷ்டு ஸ்யாதக்ஷேத்ரி ஜீவநே ॥ (21)



நக்கீரர் சரவணப்பொய்கையில் நீராடி கிரிவலம்வந்து முருகக்கடவுளைத் தரிசியாது சென்றமைக்குச் சிக்ஷிக்கப்பட்டுப்பின் குமாரஸ்வாமியைத் துதித்து அநுக்ரஹம் பெறல். [பக்கம் 153

தேந மாயா விஹங்கேந க்ருதம் த்ருஷ்ட்வா ததா முநி: ।
ஜீவஹிம்ஸாத்மகம் கஷ்டம் காருண்யாத் து:ஷ்ட சேஷ்டித: ॥ (22)

ஜபத்யாநாதிகம் ஸர்வம் ஸமாப்யாத்யாய ஸத்வரம் ।
மோசநாயதது மீநஸ்ய (1) பாவநஸ்ய ஹ்யுபாயயௌ ॥ (23)

க்ஷணம் ப்ரதீக்ஷ்ய தத்ரைவ ஸமயே கணநாயகா: ।
த்வரிதம் க்ருஹீத்வா நக்கீரம் பத்த்வா பாசைர் த்ருடம் ததா ॥ (24)

ஸந்நிவேஶ்ய குஹாந்தஸ்து மஹாந்த்ர ப்ருஹதா ததா ।
த்வாரம் பிதாய ஸர்வத்ர ஹஸ்த்யா ஶிவகிங்கரா: ॥ (25)

ஸைந்யாயிவ ஸர்வாணாம் தேஷாம் நிகடம் ப்ராப்ய ஹர்ஷிதா: ।
தஸ்மை நிவேதயாமாஸு: ப்ரஹ்வ ஶிவ ஸந்நிதௌ ॥ (26)

(உ)

அந்த பூதநாயகர்கள் பின் உபாயத்தினுலொரு வேலைசெய்தார்கள். அரச மரத்தினுடைய மனோஹரமான ஒரு இலையையெடுத்து இரண்டாகக்கிழித்து அதை மறுபடி ஒன்று சேர்த்து அங்கு ஜலத்தோரத்தில் போட்டார்கள். அதிலொரு பாதி பக்ஷியாயும் மற்றொரு பாதி மீனுயு மாச்சுது. ஹே ஸநத்குமார மஹரிஷே! அந்த பக்ஷியானது அந்த மீனை மூக்கினுல் கொத்திக் கரையிலிழுத்தது. அப்படியிழுக்கும் பக்ஷியை அந்த மீனுனது பயத்தினுல் ஜலத்திலிழுத்தது. அப்பொழுது நக்கீரகவியானவர் அந்த மாயா பக்ஷியினுல் செய்யப்பட்ட ஜீவஹிம்ஸாரூபமான கஷ்டத்தைப் பார்க்கப் பொறுக்காதவராய் ஜபத்யானம் முதலான எல்லா க்ரியைகளையும் சீக்ரமாகச் செய்துமுடித்துக்கொண்டு எழுந்திருந்து மீனைக் காப்பாற்றுவதற்காக ஜலக்கரையைச் சார்ந்த தருணத்தில், ஸமயம் பார்த்திருந்த கணநாயகர்கள் வேகமாயோடிவந்து நக்கீரரைப்பிடித்து பாசக்கயிறுகளால் பலமாகக்கட்டி மலையிலுள்ள குஹையில் கொண்டுவந்தடைத்து அந்த குஹாத்வாரத்தை பெரிய

(1) பாவநஸ்ய---ஜலஸ்ய.

பாராங்கற்களினால் மூடி, ஹே மஹரிஷிகளே! தேவஸேநாபதியான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியின் திருஸந்நிதானத்தை அடைந்து நடந்த வ்ருத்தாந்தங்களை பூதநாயகர்கள் பரமசிவ குமாரராகிய ஸ்வாமிநாத மஹாப்ரபுவினிடத்தில் ஸந்தோஷத்துடன் தெரிவித்துக்கொண்டார்கள். (26)

(ஸ)

நக்கீரஸ்ய மொதூாஹ காராகெஹ ஷ்டிதாநுவஹூ ।
த்யக்தாநஸ்ய தீநஸ்ய தஷா ஸாதூயபூவஜீபூதஃ ॥ (27)

வராதஃவரம் வராதீஶம் வரஸாநந்ட ஷாயகம் ।
வரஶம்ஹு வராஶக்தி ஸஸிஜ நவிஜாக்ருதிம் ॥ (28)

ப்ரஹ்மம் ப்ரஹ்ம ஹரீஷீகேஶ ப்ரஸ்வாநாம் ஜிவஸகஸாம் ।
கநாஷ்ருதம் குஹம் ஸாக்ஷாத் வரஸாதாந ஸேவ்யபம் ॥ (29)

ஹத்ஸ்ரா வரயோயபக்தோ ஜீவாராத் ஸதம்ஜிதஃ ।
ஹூதெவ நூராநாவிலெய நபூலெவ்ய தொஷபாஸவ ஸதஃகவிஃ ॥ (30)

(உ)

பிறகு மலையின் முன்பாகத்தில் பந்தேகாணவிலடைபட்டிருக்கிற நக்கிரகவியானவர், கர்வமடங்கி த்வேஷபுத்தியைவிட்டு மிகவும் தீனராய், பராபரமூர்த்தியும் பரங்குன்ற நாயகரும் பரமானந்தத்தைத் தருகிறவரும் பார்வதீ பரமேஶ்வரருடைய ஸங்கத்தினால் ஞான வடிவாய் அவதரித்த மூர்த்தியும், ப்ரஹ்மா விஷ்ணு முதலான தேவர்களுக்கு ப்ரபுவும், ஆதியந்த மற்றவரும் குறைவில்லாதவரும் அழிவற்றவரும் பரமாத்மஸ்வரூபியுமான ஸாக்ஷாத் குஹஸ்வாமியை, அந்தக்கவிசிரேஷ்டர் தினந்தோறும் சோர்வடையாதவிசேஷபக்தியுடன், புதிது புதிதான பலவித அநேக ஸ்தோத்ரங்களால் இரவும் பகலும் ஸ்துதித்து ஸந்தோஷமுண்டாகும்படி செய்தார். (30)

𑌕𑍃𑌤𑌨𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌤𑍂𑌯𑌮𑌾𑌨𑌃 𑌪𑌰𑌿𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌪𑍍𑌰𑌮𑌥𑍈𑌰𑌮𑌰𑍇𑌶𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 ।
𑌵𑌿𑌭𑍇𑌦𑌯𑌨𑍍 𑌶𑍈𑌲𑌮𑌾𑌶𑍁 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌵𑌿𑌵𑌰𑌦𑍍𑌵𑌾𑌰𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂
𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 ॥ (31)

𑌕𑍃𑌤𑌂 𑌪𑌾𑌶𑌜𑌾𑌲𑍇𑌨 𑌬𑌦𑍍𑌧𑌂 𑌦𑍀𑌨𑌮𑌾𑌨𑌸𑌮𑍍 ।
𑌮𑍋𑌚𑌯𑌾𑌮𑌾𑌸 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌂 𑌸𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃 ॥ (32)

𑌉𑌦𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌾𑌯𑍁𑌤𑌾𑌭𑌸𑍍𑌯 𑌸𑌮𑌾𑌰𑍂𑌢𑌸𑍍𑌯 𑌬𑌰𑍍𑌹𑌿𑌣𑌮𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑍈𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑍈𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌚𑌾𑌰𑌣𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑍈𑌃 ॥ (33)

𑌸𑍍𑌤𑍂𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌃 𑌗𑍁𑌹𑌸𑍍𑌯 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌨𑌃 ।
𑌪𑌤𑌿𑌤𑍍𑌵𑌾 𑌦𑌣𑍍𑌡𑌵𑌦𑍍𑌭𑍂𑌮𑍌 𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑍇 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ॥ (34)

𑌶𑌿𑌰𑌸𑍍𑌯𑌞𑍍𑌜𑌲𑌿𑌮𑌾𑌧𑌾𑌯 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌮𑍍𑌰𑌃 𑌕𑌵𑌿𑌰𑍍𑌵𑌰𑌃 ।
𑌪𑍁𑌰𑌃𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌧𑍀𑌶𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 ॥ (35)
𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑍌𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌕𑍁𑌮𑌾𑌰𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌗𑌦𑍍𑌗𑌦𑌯𑌾 𑌗𑌿𑌰𑌾 ॥ (35½)

(உ)

பிறகு அந்தக்கவியினுடைய ஸ்தோத்ரங்களால் ப்ரார்த்திக்கப் பட்டு ஸந்தோஷமடைந்தவரும் ப்ரமதகணங்களாலும் இந்த்ரன் முதலான தேவர்களாலும் வந்தனம் செய்யப்பட்டவருமாகிய குமாரஸ்வாமியானவர், தன் கையிலிருக்கும் சக்த்யாயுதத்தினால் அந்த குஹாத்வாரத்தில் அடைத்திருக்கும் கல்லை சீக்ரமாக உடைத்துத்தள்ளி, பாசக்கயற்றினால் கட்டப்பட்டு ரொம்பதீன மான மனமுடையவராகிய அந்த நக்கீரகவியின் கட்டையும் அவிழ்த்து விட்டு அவருக்கு நேரில் ப்ரஸந்நமானர். அப்போது அந்த நக்கீரகவியானவர், கோடிஸூர்யோதய ப்ரகாசம் போல ப்ரகாசித்துக்கொண்டிருப்பவரும் மயில் வாகனத்திலாரோகணித் திருப்பவரும், தேவர்களாலும் கந்தர்வர்களாலும் ஸித்தசாரண கின்னரர்களாலும் முனீஶ்வரர்களாலும் ஸ்தோத்ரம்செய்யப்பட்ட வரும், பரமாத்மஸ்வரூபியுமாகிய அந்த குஹஸ்வாமியினுடைய அழகுபொருந்திய பாதாரவிந்த மூலத்தில் தண்டம்போல் ஸாஷ் டாங்க நமஸ்காரம் செய்து, மனமடங்கினவராய்த் தன்னிருகை

களையும் சிரமேல் கூப்பி, பக்தியினால் வணங்கின சரீரத்தையுடைய வராய்த் தன் முன்னால் ப்ரத்யக்ஷராய்த்தோன்றி நிற்கும் தேவாதி தேவேஶ்வரனும் மஹாப்ரபுவும் ஸகல ஜகத்திற்கும் கர்த்தாவும் மஹாஸேநனுமாகிய ஸுப்ரஹ்மண்யமூர்த்தியை, பக்திமேலிட்டு தழதழத்த வாக்கினால் ஸ்தோத்ரம்செய்கிறார். (35½)

𑌨𑌕𑍀𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌵𑌚𑌃 ॥

(𑌉𑌵𑌾𑌚) 𑌨𑌕𑍀𑌰𑌃 ॥

𑌤𑌵 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌵𑌿𑌹𑍀𑌨𑍋 𑌹𑍃𑌦𑌯𑌿𑌨𑌾
𑌭𑌵𑌤𑍍 𑌪𑌾𑌦𑌾𑌮𑍍 𑌭𑍋𑌜𑌂 𑌭𑌵𑌭𑌯𑌹𑌰𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌶𑌰𑌣𑌮𑍍 ।
𑌕𑍃𑌤 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌰𑍀𑌶 𑌪𑍍𑌰𑌮𑌯𑌗𑌣𑌨𑌾 𑌯𑌾𑌤𑍁𑌜𑌵𑌿𑌭𑍋
𑌗𑍁𑌹𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌦𑍀𑌨𑍇 𑌵𑌿𑌤𑌨𑍁 𑌮𑌯𑌿 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑌨𑌿𑌶𑌮𑍍 ॥ (36½)

𑌕𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌷𑍍𑌠𑍇𑌨 𑌮𑌹𑌹𑍍𑌯𑍂𑌦𑌯𑌾 𑌜𑍈𑌕 𑌨𑌿𑌰𑌯𑌂
𑌸𑌕𑍃𑌦𑍍𑌵𑌾 𑌨𑌤𑍍𑌯𑌾𑌤𑌂 𑌪𑌦𑌕𑌮𑌲𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌤𑌵𑌯𑍋 ।
𑌦𑌯𑌾𑌵𑌿 𑌶𑍍𑌰𑍀𑌸𑌂𑌯𑌿𑌷𑍍𑌯 𑌨𑌿𑌰𑌯 𑌜𑍇𑌪𑍇𑌶 𑌵𑌾𑌰𑌦
𑌗𑍁𑌹𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌦𑍀𑌨𑍇 𑌵𑌿𑌤𑌨𑍁 𑌮𑌯𑌿 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑌨𑌿𑌶𑌮𑍍 ॥ (37½)

𑌰𑌣𑍇 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌕𑌲𑌦𑌿𑌤𑌿𑌜𑌾𑌨𑍍 𑌤𑌾𑌰𑌕𑌮𑍁𑌖𑌾𑌨𑍍
𑌹𑌰𑌿𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌸𑍁𑌰𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂 𑌭𑍁𑌵𑌿 𑌨𑍃𑌣𑌾𑌮𑍍 ।
𑌮𑍁𑌦𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣 𑌶𑍍𑌰𑍀𑌶𑌿𑌵𑌶𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑌾𑌯 𑌤𑍍𑌵𑌮𑌸𑌿𑌕𑌮𑍍
𑌗𑍁𑌹𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌦𑍀𑌨𑍇 𑌵𑌿𑌤𑌨𑍁 𑌮𑌯𑌿 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑌨𑌿𑌶𑌮𑍍 ॥ (38½)

𑌭𑌵𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌪𑍍𑌯𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑌿𑌕𑌰𑌮𑍂𑌲𑌾𑌯 𑌭𑌵𑌿𑌤𑌮𑍍
𑌨𑌿𑌰𑍂𑌹𑍍𑌯 𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌰𑌂 𑌕𑌮𑌲𑌜𑌮𑌶𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑌪𑌿 ।
𑌪𑍍𑌰𑌵𑌾𑌣𑌸𑍍𑌸𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌧𑌰𑌵𑌤𑍇 𑌜𑍇𑌷𑍍𑌠𑌿𑌕 𑌶𑌰𑍋
𑌗𑍁𑌹𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌦𑍀𑌨𑍇 𑌵𑌿𑌤𑌨𑍁 𑌮𑌯𑌿 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑌨𑌿𑌶𑌮𑍍 ॥ (39½)

𑌶𑌰𑌦𑍍𑌰𑌾𑌕𑌾𑌜𑍍𑌜𑍈𑌵𑌾𑌤𑍃𑌕 𑌵𑌿𑌜𑌯 𑌷𑌡𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰 𑌵𑌿𑌲𑌸𑌤𑍍
𑌦𑍍𑌵𑌿𑌷𑌡𑍍𑌬𑌾𑌹𑍋 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑌿𑌦𑌲𑌿𑌤 𑌮𑌹𑌾𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚 𑌶𑌿𑌵𑌸𑍂𑌨𑍋 ।

𑌹𑍃𑌦𑌬𑍍𑌜𑌸𑍍𑌥 𑌶𑍍𑌰𑍀 𑌹𑌰𑌿𑌕𑍁𑌮𑌾𑌰𑌶𑌿𑌵𑌪𑌤𑍇 𑌸𑌕𑌲 𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂
𑌗𑍁𑌹𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌦𑍀𑌨𑍇 𑌵𑌿𑌤𑌨𑍁 𑌮𑌯𑌿 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌂 𑌅𑌨𑌿𑌶𑌮𑍍 ॥ (40½)

𑌅𑌹𑌾𑌰𑍍𑌦𑌂 𑌶𑍌𑌶𑍌𑌜𑍍𑌯𑌂 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌨𑌿𑌜 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌿𑌵𑌿𑌷𑌤𑍇
𑌗𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌅𑌪𑌯𑌤𑍇 𑌅𑌨𑍀𑌨𑌾𑌂 𑌹𑌿𑌤𑌤𑌾𑌂 ।
𑌵𑌸𑌾𑌰𑌾𑌤𑍇𑌃 𑌕𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌰𑌣𑍇 𑌬𑌹𑍁 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌲𑌯𑌪𑌤𑍇
𑌗𑍁𑌹𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌦𑍀𑌨𑍇 𑌵𑌿𑌤𑌨𑍁 𑌮𑌯𑌿 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌂 𑌅𑌨𑌿𑌶𑌮𑍍 ॥ (41½)

(உ) குஹஸ்வாமியை நக்கீரகவி ஸ்தோத்திரம் செய்கிறார்:—

அழகு பொருந்தியவரான ஹே ஸத்யாசல நாயகா! ஹே ஜகன்னாதா! தங்கள் மூர்த்தியின் தரிசனமே செய்யாதவனாகிய நான், ஜனனமரண பயத்தை நாசம் செய்கிறதான தங்களுடைய பாதாரவிந்தங்களை இப்பொழுது சரணமடைகின்றேன். ஆகையால், மகாவ்யாபகரான ஹே ஸ்கந்த மூர்த்தே! பரமசிவ குமாரா! ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (36½)

திருச்செந்தூரில் வஸிக்கும் செந்திலாண்டவா! தேவேந்த்ரனுக்கு வரம் கொடுத்தருளிய பாலஸுப்ரமண்யப்ரபோ! முருகேசா! அகஸ்த்யர் முதலான மஹரிஷிகளினுடைய நிர்மலமான ஹ்ருதய கமலத்திலேயே எப்பொழுதும் வஸிக்கிறதான தங்களுடைய இரண்டு பாதாரவிந்தங்களும் என்னால் ஒரு தரம்கூட த்யானம் செய்யப்படவில்லை. அப்படியிருந்தாலும், ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்ய வேண்டும். (37½)

அழகிய சிவகிரிநாதா! பழனியாண்டவா! ஹே தண்டபாணே. தாரகன் முதலான எல்லா அரக்கர்களையும் யுத்தத்தில் சக்த்யாயுதத்தினால் ஸம்ஹாரம் செய்து, விஷ்ணு ப்ரஹ்மேந்த்ரன் முதலான தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் பூலோகத்தில் மனுஷ்யர்களுக்கும் பூர்ணமான ஸந்தோஷத்தைச் செய்து வைத்தவராகிய முருகேசா! ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (38½)

ஸ்ரீபார்வதிதேவியின் ஆனந்தத்திற்கு ஸாகரமாய் விளங்கும் குமாரா! ஸ்வாமி மலைக்கதிபதியான ஹே ஸ்வாமிநாதா! ஸமஸ்த வேதங்களுடைய மூலார்த்தமாகிய ப்ரணவத்தின் பொருளை நன்குரைக்கச் சக்தியற்றவரான ப்ரஹ்மதேவரைக் கண்டித்து, ஸ்வயமாகவே கைலாஸபதிக்கு உபதேசம் செய்த தேசிககுரோ! ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (39½)

சரத்கால பூர்ணசந்த்ரமண்டலம் போல நிர்மலமான ஆறு முகங்களாலும் அழகுபொருந்திய பன்னிரண்டு கைகளாலும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஷண்முகனாதா! ஹல்லக கிரியாகிய திருத்தணிக்கதிபதியான பாலஸுப்ரமண்யமூர்த்தே! பெரும் மலையாய் விளங்கின க்ரௌஞ்சாஸுரனை சக்த்யாயுதத்தினால் கொன்ற சக்திதரா! ஞானிகளினுடைய ஹ்ருதய கமலங்களில் வஸிக்கும் ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (40½)

பெரிதாகிய மயிலின்மீது ஆரோகணித்திருக்கும் சிகிவாகனா! தங்களை பஜிக்கின்றவர்களான ஸமஸ்த தேவகணங்களுக்கும் மஹரிஷிகளுக்கும் அடியார்களுக்கும் அபயமளித்து வேண்டிய வரத்தைக் கொடுத்தருளும் ஹே ப்ரபோ! குன்றுதோறாடும் குமரேசா! தேவேந்த்ர குமாரியாகிய தேவஸேனை அம்மையின் அழகியமணவாளா! ஹே குஹஸ்வாமின்! தீனனாகிய என்னிடத்தில் எப்பொழுதும் க்ருபை செய்யவேண்டும். (41½)

(இவ்விதம் ஆறு படை வீட்டினிற்கதிபதியான முருகேசனை நக்கீரகவி துதித்தனர்).

(𑌸𑌮)

𑌏𑌵𑌂 𑌸𑍍𑌤𑍁𑌤𑍋 𑌮𑌹𑌾𑌸𑍇𑌨𑍋 𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌤𑌦𑌾 ।
𑌕𑍃𑌪𑌯𑌾 𑌪𑌰𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪 𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥ (42½)

(உ)

இந்த ப்ரகாரம் நக்கீரமுனிவரால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டபொழுது ஸ்ரீ ஸுப்ரமண்ய மூர்த்தியானவர் ரொம்பவும் ஸந்தோ

ஷமடைந்து கருணையோடு அம்முனிவரைப் பார்த்து திருவாய் மலர்ந்தருளிகின்றார். (42½)

(ஶ்லோ) ஸ்கந்த: ॥

த்வத்க்ருதேந ஸ்தவேநாஹம் ஸந்துஷ்டோஸ்மி மஹாமுநே ।
வரயாபிமதம் வித்வந் மத்தோவர மநுத்தமம் ॥ (43½)

த்வயா க்ருதமிமம் மந்நே ஸ்தவமேஶேஷஸித்தி ப்ரதம்
பவேத் ப்ரீதிகரம் மம ப்ரியகரம்ஹி யஸ்ஸாதரம் ।
விமுக்த து:கிதஸ்ஸதா விவிதஸம்பத் ஸம்பத்ய தே
ஸமேத்ய பதமுத்தமம் ஸமவாப்ய ஸர்வோத்தமம் ॥ (44½)

இத்யாத்ருதேந மஹதா ஸ்கந்தேந ஹிதோ முநிஸ்ததா ।
ப்ரார்த்தயாமாஸ தேவேஶம் வரம் வரகவீஶ்வர: ॥ (45½)

(உ) ஸ்கந்த மூர்த்தி அருள்கின்றார்:—

"ஹே மகாமுனே! வித்வானே! நீ செய்த ஸ்தோத்ரத்தினல் நாம் சந்தோஷமடைந்தோம். ஆகையால் உனக்கு இஷ்டமான படி உத்தமமான வரனே நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஹே நக்கீரமுனே! ஸகலவிதமான ஸித்திகளையும்கொடுக்கத்தகுந்ததும் நமக்கு ரொம்பவும் ப்ரியமுள்ளதுமான உம்மால் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை எவன் தினந்தோறும் ஆதரவுடன் படிக்கிறானே அவன், ஸகலமான கஷ்டங்களிலிருந்தும் விடுபட்டு, ஸகல ஸம்பத்துக்களையுமடைந்து, பின் ஸர்வோத்தமமான என் பதத்தையும் அடைகின்றான்"; என்று மஹானகிய அக்னிகுமாரனலே அநுக்ரஹம் செய்யப்பட்ட அந்த வரகவிஶ்ரேஷ்டரானவர், அப்பொழுது தேவநாயகராகிய ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை வரம் கோறிப்ரார்த்திக்கின்றார். (45½)

(ஶ்லோ)

ஹரஸூநு தேவதேவேஶ கோமார கருணாநிதே ।
யோக்ருதாம: க்ஷந்தவ்யம் யதத்ஸர்வம் ஹர தா ப்ரபோ ॥ (46½)

த்வதீய சரணாம்போஜே ஸம்ஸாரார்ணவ தாரகே ।
ஸதோத்ஸவ ஸ்தோத்ரபாவேன பக்திம் தேஹி த்ருடாம் மம ॥ (47½)

(உ)

"ஷாட்குண்ய பரிபூர்ணராகிய தேவநாயகா! கருணாநிதே ப்ரபோ குமாரஸ்வாமின்! நான் செய்த அபராத (குற்ற)ங்களை யெல்லாம் மன்னித்தருளி, ஸம்ஸாரஸாகரத்தினின்றும்கரையேற்றக் கூடியதான தங்கள் சரண கமலங்களில் ஸ்திரமான (த்ருடமான) பக்தியை எனக்குத்தந்தருள வேண்டும்", எனப்ப்ரார்த்தித்தார். (47½)

(மூ-ம்)

இதி ஸம்ப்ரார்த்தித ஸ்கந்த: சக்திபாணி: க்ருபாநிதி: ।
பக்திம் ப்ரதாய ஸுத்ருடாம் தஸ்மை பூயோऽப்யுவாச தம் ॥ (48½)
அந்யத் கிஞ்சிதீப்ஸிதம் தத்தாமி மஹாமுநே ॥ (49)

(உ)

இவ்விதம் ப்ரார்த்திக்கப்பட்ட ஸ்கந்த பரமாத்மாவானவர், க்ருபாஸாகரமூர்த்தியான சக்திதரர், அந்த நக்கீரகவிக்கு அவ்விதமே விசேஷ த்ருடமான பக்தியை அநுக்ரஹித்து, மறுபடியும் அவரைப்பார்த்துச் சொல்லுகின்றார். "ஹே மஹாமுனே! இன்னும் எதை இஷ்டப்படுகின்றாயோ அந்த வரத்தையும் கேள், தருகின்றோம்". என்று அருளினர். (49)

(மூ-ம்)

ஏவம் ப்ருவதி ஷண்முகே மஹாநக்கீர ஸத்கவி: ।
புந: ஸம்ப்ரார்த்தயாமாஸ ஸ்வேஷ்ட ஸித்தி ப்ரதம் ப்ரபும் ॥ (50)

(உ)

இவ்விதம் ஷண்முகநாதன் திருவாய் மலர்ந்தருளலும் மகானுகிய நக்கீரகவி இஷ்ட ஸித்தியைத்தந்தருளும் முருகபிரானைப் பார்த்துத் தனக்கிஷ்டமான வரத்தைக் குறித்து மறுபடியும் ப்ரார்த்திக்கின்றார். (50)

(மூ-ம்) நக்கீர: ॥

தேவ தேவ க்ருபாஸிந்தோ பக்தாபீஷ்ட வரப்ரத ।
மமாஸ்யாம் ஸ்தோத்ரவாணீம் த்வத் ப்ரஸாதம் குரு ப்ரபோ ॥ (51)

(உ) நக்கீரர் ப்ரார்த்திக்கின்றார்:—

“தேவாதிதேவ! கருணையே வடிவாய்க்கொண்டு பக்தர்களுக்கு வசப்பட்டு அநுக்ரஹிக்கும் ப்ரபோ! பராபரப்பொருளே! ஷண்முகநாதா! கங்காஸ்நானஞ் செய்ய ஆசைகொண்டிருக்கின்றேன்; அநுக்ரஹிக்க வேண்டும்;” எனப்ரார்த்தித்தார். (51)

(மூ-ம்)

ஸர்வமஹர்ஷிபிஸ்துதோ தேவோ தேவஸேநா பதிர் குஹ: ।
வாசா மதுரயா ப்ராஹ த்ருஷ்டிம் த்ருஷ்டிமதேஷு ஸங்கத: ॥ (52)

அஸ்மிந்நேவ மஹாசைலே ஸர்வஜ்ஞாநஸ்வரூபகே ।
தர்சயிஷ்யாமி யோகீந்த்ர ஸாக்ஷாத் கங்காம் ஸ்வாம் பாவநீம் ॥ (53)
தவாபி ஸர்வ யோகாநாயாஸத: ஸ்ரீ போகமோக்ஷதாம் ॥ 53½

(உ)

இவ்வாறு நக்கீரரால் ப்ரார்த்திக்கப்படவே, மஹரிஷிகளால் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட குஹஸ்வாமி, தேவஸேநாபதி, ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியானவர், மதுரமான வார்த்தையால் அவரை (நக்கீரரை)ப்பார்த்துச் சொல்லுகின்றார். “ஹே யோகீந்த்ர! ஸர்வ ஞான ஸ்வரூபமாய் விளங்கும் உத்தமமான இந்தபர்வதத்தின் சிகரத்திலேயே, உனக்கும் இன்னும் மற்றெல்லோர்க்கும் முயற்சியில்லாமலே ஸேவிக்கப்படும் பொருட்டு, போகமோக்ஷங்களைத் தரத்தகுந்ததும் மகாபரிசுத்தமானதுமான கங்காதீர்த்தத்தை ப்ரத்யக்ஷமாகத் தருவிக்கிறேன்” என்று சொல்லி அருளினர். (53½)

(மூ-ம்)

இத்யுக்த்வா காங்கேயோ கங்காம் பாதாள வாஹிநீம் ।
ஸாம்பஸ்ய தேவதேவஸ்ய ஸ்ரீசக்தே: ஸத்யாத்ரிவாஸிந: ॥ (54½)
ஜநகஸ்யாத்ர தக்ஷிணே ப்ரதக்ஷிண பார்ச்வத: ॥ (55)

(உ)

கங்கா புத்ரனாகிய குஹஸ்வாமி யானவர், பாதாளவாகினியான கங்கையை அழகுபொருந்திய பராசலரூபியும் தேவதேவருமான

ஸாம்ப மூர்த்திக்கு அந்தர்வாகினி ரூபமாய் எப்பொழுதும் ப்ரதக்ஷிணம் செய்கிறவளாக இந்த இடத்திற்கு வரவேண்டுமென்று நினைத்தார். (55)

(ஊ-ஆ)

ததைவஸா மஹாபாகா கங்கா லோகைகபாவநீ ।
ஆதாரஶக்தேஶ்ச ஹரே: ப்ருஷ்டத: கூர்மாக்ருதே: ॥ (56)

உத்க்ருத்ய விவராத் ராஜ ஶ்ரேஷ்டாவநீ ஸத்வரம் ।
ஶ்ருங்கமத்யே தக்ஷிணத ஸ்ஸத்யாத்ரேர் நிஷேவிதா ॥ (57)

தத்ரத்யைர்விதை ஸஹஸ்ரீ கதம்பக ஸமுஜ்வலா ।
ஸமேதநாநா வர்ணாய மீநஜாதி விராஜிதா ॥ (58)

ஸாஷ்டோபாசைவ கங்கேவ கிந்நரைர் ருஷிஸங்கதா ।
வராஹபுர நாதஸ்ய ஶிவஸ்ய வராத் உந: ॥ (59)

ஸோமஸ்ய காரணாஸிம்ஹோ ஜடாமண்டல மண்டநா ।
ஸமஸ்த மஹாஸேநம் ஶிவ ஶக்த்யாத்மகம் மஹத் ॥ (60)

க்ருதாஞ்ஜலிர் உபஸ்தாய ஸ்துத்யாசைவ தபஸ்விநீ ।
ஸர்வப்ரஹண்ய மஹாபாஹோ ஸர்வாராதி நிஷூதந ॥ (61)
ஹேதநாகேந ஸம்சைவ ஸர்வஸ்யாஜ ப்ரபோ ॥ (61½)

(உ)

அப்பொழுதே, மகாபாக்யசாலியாய் உலகங்களைப் பரிசுத்தம் செய்கிறவளான அந்த கங்காதேவியானவள், பூமிக்குக்கீழே யிருக்கிற ஆதாரசக்திக்கும் ஆதிகூர்ம மூர்த்திக்கும் பக்கத்திலிருக்கிற த்வாரத்திலிருந்து வெளிப்பட்டு, உன்னதமானதும் ஶ்ரேஷ்டமானதுமான ஸத்யபர்வதத்தின் உச்சியின்நடுவில் தென் பாகமாக சீக்ரமாய்த் தோன்றினாள். ஸமஸ்த (அறுபத்தாறுகோடி) தீர்த்தங்களாலும் ஸேவிக்கப்பட்டவளும், அநேக வர்ணங்களையுடைய தான மீன் கூட்டங்கள் தன்னிடத்திலிருப்பதால் கதம்ப

புஷ்பத்தின் காந்தியை ஒத்தவளும், ஆரவாரத்துடன் ஆகாயம் வரையும் உயர்ந்தெழும்புகின்ற அலைகளாகிய மாலையோடு விளங்குகிறவளும், தேவகந்தர்வ கின்னரர்களால் ஸ்தோத்ரம் செய்யப்படுவதால் பெருமை பெற்றவளும், பராசலேஶ்வரரும் பரமாத்மாவும் கருணாநிதியும் உமாதேவியாரோடு கூடினவருமாகிய பரமசிவனுடை ஜடாமண்டலத்திற்கு அலங்காரமாயிருப்பவளுமாகிய அந்த தேவநதியான கங்காதேவியானவள் சீக்ரமாய் வந்து, சிவசக்திஸ்வரூபியும் மஹாஸேநருமாகிய குஹமூர்த்தியைப் பார்த்து, ப்ரீதியோடு கை குவித்தவளாகச் சொல்லுகின்ருள். "தேவசத்ருக்களான அஸுரர்களைக் கொல்லும் மகாபலசாலியான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தே! ப்ரஹ்மதேவரை விலங்கிலிட்ட குமாரப்ரபோ! யாதுகாரணம் பற்றி என்னை நினைத்தீர்கள்? அதனைச் சொல்லியருள வேண்டு"மெனக் கேட்டுக் கொண்டாள். (61½)

(ஊ-ஶ) ஸ்கந்த: ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (62½)

(உ) ஸ்கந்தஸ்வாமி திருவாய் மலர்ந்தருளுகின்ருர்:—

"தேவலோகத்தில் ப்ரவஹிக்கின்ற கங்காதேவியே! நமது பக்த சிரோன்மணியான நக்கீரன் என்னும் மகான் உனது தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய விரும்புகின்ருன்; அதற்காகவும், இன்னும் உனது தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யும் இதர ஜனங்களுடைய பாபங்களைப் போக்கடித்து எல்லாருடைய மனோபீஷ்டங்களையும் நிறைவேற்றிக் கொடுப்பதற்காகவும், நமது ஆக்ஞையின்படி, ஹே மங்களே! இந்த ஸத்யாசலத்தின் கொடுமுடியில் எப்பொழுதும் நீ வஸித்துக் கொண்டிருப்பாயாக", வென்று ஸ்கந்தமூர்த்தி கங்காதேவிக்கு ஆக்ஞாபித்தருளினர். (62½)

(மூ) 𑌶𑍈𑌲𑌾𑌦𑌿𑌃 ॥

𑌸𑌨𑍍𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌕𑍁𑌮𑌾𑌰𑍇𑌣 𑌗𑌂𑌗𑌾 𑌪𑌾𑌤𑌾𑌲 𑌵𑌾𑌹𑌿𑌨𑍀 ।
𑌤𑌦𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌧𑍃𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌭𑍁𑌵𑌾 ॥ (63½)

𑌤𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾 𑌕𑍁𑌣𑍍𑌡𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌵𑌸𑌤𑌿 𑌪𑍍𑌰𑍀𑌤𑍍𑌯𑌾 𑌤𑍀𑌰𑍍𑌥𑍈𑌃 𑌕𑍋𑌟𑌿 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 ॥ (64½)

𑌤𑌦𑌾 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌾 𑌸𑌂𑌹𑍃𑌷𑍍𑌟𑌾 𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌸𑍍𑌥𑌾 𑌸𑌕𑌲 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ।
𑌵𑌵𑍃𑌷𑍁𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌿 𑌜𑌗𑍁𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌾𑌃 ॥ (65½)

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌶𑍈𑌵 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑌾𑌣𑍇
𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾 𑌉𑌪𑌰𑌿𑌭𑌾𑌗𑍇 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰 𑌵𑌰𑍍𑌣𑌨𑍇
𑌸𑌤𑍍𑌯𑌗𑌿𑌰𑌿 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑍇 𑌸𑌪𑍍𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

(உ) நந்திகேஶ்வரர் சொல்கிறார்:—

இவ்வாறு குமாரஸ்வாமியால் ஆக்ஞாபிக்கப்பட்ட பாதாள வாகினியான கங்காதேவியானவள், அந்த ப்ரபுவின் ஆக்ஞையை சிரஸால் வஹித்துக்கொண்டு, ப்ரஹ்மாவினால் வணங்கப்பட்டவளாய் ஸர்வ தீர்த்தங்களுடனும் சேர்ந்தவளாய்க் கொண்டு, அதுமுதல் ப்ரீதியுடன் குண்டரூபமாய் இந்த ஸத்யாசலத்தில் வஸித்து வருகின்றாள். அதில் ஒருதரம் ஸ்நானம் செய்தால் கோடி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த பலனுண்டு. இந்த ஸம்பவம் யேற்பட்ட ஸமயத்தில் ஸகலமான தேவர்களும் ஆகாயத்திலிருந்து மிகுந்த ஸந்தோஷத்தோடு புஷ்பமாரி பொழிந்தார்கள். கந்தர்வர்களும் கின்னரர்களும் கானம் செய்தார்கள். (65½)

ஏழாவது அத்யாயம்

முற்றிற்று.

அஷ்டமோऽத்யாய:

(8-ஆம்) நந்திகேஶ்வர: ॥

அத ஸ்கந்தோ மஹாபாஹுர் தேவதா வாஹிநீ பதி: ।
கங்கா ஸ்நாநாய நக்கீர மநுக்ருஹ்ய மஹாயஶா: ॥ (1)

ஸ்தூயமாநோ நாரதாத்யைர் தேவ கந்தர்வ கிந்நரை: ।
யோகிபி ஸ்ஸநகாத்யைஶ்ச ஸ்வகணைஶ்ச ஸமாகதா: ॥ (2)

ஸ்வவாஹநா ச்சிகிவரா தவருஹ்ய ஸ்வயம் ஜவாத் ।
தத்ர கங்காம் ஸசி ஸ்நாத்வா லோகாநுக்ரஹ தத்பர: ॥ (3)

க்ஷிப்ரம் ஸமாஸாத்ய விப்ரவர்ணம் ப்ராஹ்மணதேஜஸா ।
ப்ரார்த்யா ஸமீஹிதம் ஸம்யக் க்ருத்வா ஶைவீம் ஷடக்ஷரீம் ॥ (4)

ஶிவ ஶக்த்யாத்மிகாம் வித்யாம் ஸர்வஜ்ஞாம் ஸர்வநந்திநீம் ।
ஸ்வாத்மேந மநநம் க்ருத்வா தீக்ஷிதஸ்ய ஹ்ருதவாந் ॥ (5)

வீரபாஹுர் மஹாநந்த்யா நிஜ்த்ராம் ஸ்நாந தத்த்வராந் ।
அநுக்ருஹ்யாவ மாஹாத்ம்யம் மந்த்ரமிஷ்டமஹ: ॥ (6)

எட்டாவது அத்யாயம்.

(உரை) நந்திகேஶ்வரர் சொல்லுகிறார்:—

பிறகு மகாபல பராக்கிரமசாலியும் தேவஸேனாபதியும் மிகக் கீர்த்தி பெற்றவருமான ஸ்கந்த மூர்த்தியானவர், நக்கீரரை கங்கா ஸ்நாநம் செய்யும்படி அநுக்கிரஹம் செய்து, நாரதாதி மஹரிஷிகளாலும் ஸநகாதியோகீந்த்ரர்களாலும் தேவகந்தர்வ கின்னரர்களாலும் ஸ்துதிக்கப்பட்டவராய்த் தமது கணங்களால் சூழப்பட்டு, தமது வாகனமாகிய மயில்மேலிருந்து, உலகத்திற்கநுக்ரஹம் செய்யும் விஷயத்தில் ப்ரியமுடையவரான குஹஸ்வாமி சீக்ரமாக

இறங்கி, அந்த கங்கா தீர்த்தத்தில் விதிப்படி முன்னால் தாம் ஸ்நானம் செய்து கரைசேர்ந்து, ஶ்வேத பஸ்மாவை (ஜாபாலோபநிஷத்தில் சொல்லியபடி உத்தூளனம் அவகுண்டனம் த்ருபுண்ட்ரம் முதலாக விபூதியை) தரித்துக்கொண்டு, சிவசக்தி ஸ்வரூபமாயும் ஜனனமரணத்தை நாசம் செய்கிறதாயும் சிவஸம்பந்தமாயுமுள்ள தான ஷடக்ஷரமந்த்ரத்தை தம் மனதால் ஜபித்து, பிறகு கங்கா ஸ்நானத்தில் ப்ரியமுள்ளவர்களாயிருக்கிற தேவர்களையும் ரிஷிகளையும் வீரபாகு முதலான பூதகணநாயகர்களையும் மற்றவர்களையும் ஸ்நானம் செய்யும்படி உத்தரவு கொடுத்துவிட்டு, குமாரக்கடவுள் அந்தர்த்தானமாயினர் (மறைந்தார்). (6)

(ஸ-ம்)

𑌨𑌕𑍍𑌕𑍀𑌰𑌸𑍍𑌸𑌹𑌸𑌾 𑌚𑍈𑌵 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌾𑌰𑌦𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ।
[illegible] 𑌸𑌹𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 [illegible] ॥ (7)
[illegible] 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑍍𑌤 [illegible] 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌤𑌃 ॥ (7½)

(உ)


பிறகு நக்கீரகவியானவர் தேவர்களோடும் நாரதாதி மஹரிஷிகளோடும் பூதகணங்களோடும் யோகிவரர்களோடும் கூட அந்த கங்கா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அநேக ஜன்மங்களில் செய்த புண்யவசத்தாலும் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ப்ரஸாதத்தினாலும் தன் மனோதரம் பூர்த்தி செய்யப்பட்டவராக ஆனார். (7½)

(ஸ-ம்)

𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌕𑍇𑌯 [illegible] ।
[illegible] ॥ (8½)

𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑍈𑌤𑌦𑍍𑌋𑌷𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 [illegible] 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌦𑌯𑌃 ।
[illegible] 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌾𑌸 𑌶𑌕𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌶𑌰𑌾𑌃 ॥ (9½)

[illegible] ।
𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍋 𑌵𑌾𑌮𑌦𑍇𑌵𑌶𑍍𑌚 [illegible] ॥ (10½)



குஹஸ்வாமி நக்கீரகவியின் பொருட்டு மலையின் உச்சியில் பாதாள
கங்கையைத் தருவிக்க, அதில் முருகக்கடவுளும், நக்கீரர் வீரபாகு
முதலிய தேவர்கள், முனிவர்களும் நீராடல். ·[பக்கம் 166

ஸஹஸ்ராக்நிஹோத்ராஶ்ச ஸர்வே தத்ர ஸமாயயு: ।
வர்ணிநஶ்ச வநஸ்தாஶ்ச யதயோ ப்ரஹ்மவாதிந: ॥ (11½)

ஸ்வாஶ்ரமாசாரநிஷ்டாஶ்ச க்ருஹா ப்ரஹ்ம ஸம்நிஷ்டிதா: ।
க்ஷத்ரியா ராஜர்ஷயஶ்சைவ முசுகுந்தாதயஸ்ததா ॥ (12½)

நிர்கத்ய ஸங்கஶோ வேகாத் முதா பரம யாயயு: ।
பராஶரம் ஸமேத்ய பரமாநந்த நிர்பரா: ॥ (13½)
த்ருஷ்ட்வா விஸ்மயமாபந்நா: குமாராஜ்ஞாம் ஸமாகதா: ॥ (14)

(உ)

பராசல க்ஷேத்ரத்தில் கார்த்திகை மாஸம் ஸோமவாரத்தன்று ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியினுடைய ஆக்ஞையினால் கங்காதீர்த்தமானது ப்ரத்யக்ஷமாய்த் தோன்றி வந்ததென்று கேள்விப்பட்டதும், அந்தந்த தேசத்திலுள்ள ப்ராஹ்மணாதி ஸர்வஜனங்களும், தங்கள் தங்கள் பத்நிகள், அக்னிஹோத்ரங்கள், பசு புத்ர பந்துக்கள் முதலானவர்கள் ஸகிதமாய், வஸிஷ்டர், அத்ரி, வ்யாஸர், சக்தி, பராசரர், காலவர், சந்தனு, அகஸ்த்யர், வாமதேவர், விஷ்ணுவ்ருத்தர், மகாதேஜஸ்ஸுடைய மார்க்கண்டேயர், ரைப்யர், முதலான் மஹரிஷிகளும், தங்கள் தங்களுடைய ஆஶ்ரமத்திற்குரிய தர்மங்களை த்தவராமல் ஒழுங்காயனுஷ்டிப்பதில் ஶ்ரத்தையுடையவர்களாகிய ப்ரஹ்மசாரி, வானப்ரஸ்தன், ப்ரஹ்மவாதிகள், ஸன்யாஸிகளும், யக்ஞம் முதலான கர்மானுஷ்டான விஷயத்தில் சிறந்தவர்களாகிய முசுகுந்தாதி ராஜ ரிஷிகளும், மஹாஸந்தோஷமுடையவர்களாகி, கூட்டம் கூட்டமாய்ப்புறப்பட்டுதிருப்பரங்குன்றம் வந்து சேர்ந்து, அங்கு குமாரமூர்த்தியின் ஆக்ஞையைப் பார்த்து மிகவும் ஆச்சர்யமடைந்தவர்களாய் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்கள். (14)

(உ-ரு)

காங்கம் பவித்ரஸலிலம் பாவநம் ஸர்வநந்தயா ।
த்ருஷ்ட்வாऽऽஶு தேவ பாவநம் தாவத்யய ஹர்ஷம் யயு: ॥ (15)

கதிஶீதஜ ரோஶ்வபூம் வவபூதொவஸி ஸம்ஷ்ழிதழ் ।
ஸவெபூ ஸம்ஹ்-ஙப ஸம்ஹ்ருஷா ஸ்நாத்வா தலெதெ்ரவ வாஸஶெ॥ (16)

ஶ்ரூஜயா வரயா ஜெவர்நு ரோ-நீநு வி தர மணாநுஷயா ।
ஸந்தவ்ய-ரா-ந ஸ்நாவண-ராதி தா-நா நிவ யயாவஜ்ழ ॥ (17)

ஈத்வா ப்ரதக்ஷிணீக்ருத்ய கிரிம்வ கிரிஶாத்மஜ ।
கிரிஜா நத நம் ஸ்தம் கிராநிமரே ர-ஙவயா ॥ (18)

ஸம்ஸ்தூத்ய ஸவபூத்ரிதஸ வாஹிநீஶ ரேரிஜஜ ।
ஸம்ஹாவா நிபூயம் ஸ்வம் ஸ்வம் க்ருதார்யபூர ஜெ்மா வயந்த்வி ॥ (19)

(உ)

ரொம்பவும் பரிசுத்தமானதும் தோஷமற்று நிர்மலமாயுள்ளதும் உலகத்தை சுத்தம் செய்வதும் தரிசித்த மாத்திரத்தில் பாபங்களைப் போக்கடிப்பதும், தன்னாலும் பிறராலும் தெய்வாதீனத்தினாலும் ஏற்படக்கூடிய துன்பங்களை நிவிர்த்தி செய்வதுமாயுள்ள ஶ்ரேஷ்டமான அந்த கங்காதீர்த்தமானது, மிகக் குளிர்ச்சியுள்ளதாய் பர்வதத்தின்மேலே அவதரித்திருப்பதைக்கண்டு ஆச்சர்யமுற்று எல்லோரும் சேர்ந்து அந்த ஸோமவாரத்திலேயே அந்த கங்காதீர்த்தத்தில் பரமஸந்தோஷத்துடன் ஸ்நாநம் செய்து, தேவ ரிஷி பித்ருக்களுக்கு மிகுந்த ஶ்ரத்தையுடன் தர்ப்பணம் செய்து, தங்கள் தங்கள் சக்திக்குத்தக்கபடி அன்னதானம் ஸுவர்னதானம் முதலான தானங்களையும் கொடுத்து, பரமசிவஸ்வரூபமான அந்த பர்வதத்தையும், கிரீசராகிய சிவபெருமானின் திருக்குமாரரும் சத்ருஸம்ஹார மூர்த்தியும் தேவஸேநாபதியும் பார்வதீ தேவியாருக்கு ஆனந்தத்தை விளைவிக்கும் மூர்த்தியுமான ஸ்கந்தஸ்வாமியையும் ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்து, வேதவாக்யங்களால் ஸ்தோத்திரமும் செய்துவிட்டு, தங்கள் ஜன்மம் ஸாபல்யமாயிற்றென்று எண்ணிக்கொண்டு, தங்கள் தங்களுடைய ஸ்தானத்தை அடைந்தார்கள். (19)

(ஸூத) ஸூத꞉ ॥

இத்தம் ஶைலாதினா ப்ரோக்தா கங்கா தீர்தஸ்ய ஸம்பவ꞉ ।
வாத்ஸல்யம் ச குமாரஸ்ய பக்திமத்ஸு யதைவ வை ॥ (20)

ஸநத்குமாரோ யோகீந்த்ர꞉ ஸந்தோஷ பயஸாந்நிதௌ ।
நிமக்நஸ் ஸஜிஜ்ஞாஸுர் நத்வா ப்ரஶ்ரவண[illegible] ॥ (21)
பப்ரச்ச நந்திநம் ஶாந்தம் சந்த்ரார்த்தக்ருத ஶேகரம் ॥ (21½)

பவந்தி பஹு புண்யாநி ஸ்தாநாநி விவிதாநி ச ।
ஶாம்பவாநி ச திவ்யாநி வைஷ்ணவாநி பஹூநி ச ॥ (22½)

ஶ்ருதீரிதாநி வஸதாம் ஸர்வது꞉க ஹாரணீச ।
தேஷாம் முக்யதமம் க்ஷேத்ரம் வத தத்வவிதாம் வர ॥ (23½)

(உ) ஸூதமுனிவர் சொல்கிறார் :—

ஹே சௌனகாதி மஹரிஷிகளே! இந்தப்ரகாரம் நந்திகேசரால் சொல்லப்பட்ட கங்காதீர்த்தத்தின் உற்பத்தியையும், சொல்ப பக்தியுடைய ஜனங்களிடத்திலுங்கூட குமாரமூர்த்திக்கு யேற்படும் விஶ்வாஸத்தையும் கேள்விப்பட்ட ஸநத்குமார யோகீந்த்ரர், ஸந்தோஷஸாகரத்தில் மூழ்கினவராகி, இன்னும் கேட்கவேணுமென்ற ஆசையினுலே, பொருமையை யுடையவரும் அர்த்த சந்த்ரனை சிரஸில் தரித்தவருமான நந்திகேஶ்வரரைப் பார்த்து இருகை கூப்பி தண்டனிட்டு, "ஹே நந்திகேஶ்வரமூர்த்தே! வெகு புண்யங்களைத் தருகிறதுகளும், வேதங்களால் சொல்லப்பட்டதுகளும், அங்கங்கே வஸிக்கிறவர்களுடைய ஸர்வதுக்கங்களையும் நிவாரணம் செய்கிறதுகளும், வெகுஶ்ரேஷ்டமானதுகளுமான பல சிவக்ஷேத்ரங்களும் விஷ்ணு க்ஷேத்ரங்களுமான அநேக க்ஷேத்ரங்களிருக்கின்றன. தத்வங்களை யறிந்தவர்களுள் மேலானவரே! அந்த க்ஷேத்ரங்களுக்குள் ரொம்பவும் முக்யமான ஒரு க்ஷேத்ரத்தைக் குறித்துச் சொல்லவேண்டும்," என்று கேட்டுக்கொண்டார். (23½)

(உ-அ) ஶைலாதி³꞉ ॥

[illegible] நாரதோ நாம ஸந்முநி꞉ ।
[illegible] ஸர்வ ஸ்ரஷ்டாரம் ஸம்ப்ரணம்ய ச ॥ (24½)
ஸம்ப்ராஹ ஸர்வ ஸந்தே³ஹ ச்சே²த³நாய முநீஶ்வர꞉ ॥ (25)

தாத [illegible] மஹாபா⁴க³ விஜ்ஞப்திம் மம ஸாம்ப்ரதம் ।
க்ஷேத்ராணி ஸர்வ லோகேஷு ப³ஹூநி புண்யப்ரதா³நி ச ॥ (26)

ஸந்தி [illegible] தி³வ்யாநி தீர்தா²நி விவிதா⁴நி ச ।
தபோவநாநி ஸர்வாணி [illegible] ச ॥ (27)

[illegible] ।
[illegible] மயா த்³ருஷ்டாநி ஸர்வஶ꞉ ॥ (28)

தஸ்ய தஸ்ய ச மாஹாத்ம்யம் [illegible] ।
[illegible] ॥ (29)

[illegible] ।
[illegible] ॥ (30)

[illegible] ।
[illegible] ॥ (31)

[illegible] ।
[illegible] ॥ (32)

(உ) நந்திகேஶ்வரர் சொல்கின்றார்:—

முன்னொரு காலத்தில் தேவரிஷியும் த்ருகாலஞானியும் கம்பீர புத்திமானுமான நாரதமஹரிஷியானவர், ஸ்ருஷ்டிகர்த்தராகிய நான்முகக்கடவுளை யடைந்து வணங்கி நின்று, எல்லாஸந்தேகங்களும் நிவர்த்தியாகவேண்டி ஒருவார்த்தை சொல்லுகிறார். "மகா பாக்யசாலியான நல்லவ்ரதமுடைய பிதாவே! என்விக்ஞாபனத்தை

கேட்டருளவேண்டும். ஸர்வ லோகங்களிலும் வெகுபுண்யத்தைத் தரத்தகுந்ததுகளும், அதிரஹஸ்யமானதுகளும், தரிசனம் செய்த மாத்திரத்தில் ஸகல ஸித்திகளையும் மோக்ஷஸாம்ராஜ்யத்தையும் கொடுக்கத்தகுந்ததுகளும், அதிஶ்ரேஷ்டமானதுகளுமான, ஸர்வ க்ஷேத்ரங்களும் அநேகவிதங்களான தீர்த்தங்களும், தபோவனங்களும், உன்னதமான மலைகளும், ஆகிய இவைகளெல்லாம், எங்கும் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு வருகிற என்னால் நேரில் தரிசனம் செய்யப்பட்டதுகள். அந்தந்த க்ஷேத்ரத்தினுடைய மகிமையானது, ஶ்ருதி ஸ்ம்ருதி புராணங்களில் மனஸுக்கும் வாக்குக்கும் எட்டாததாகவும் மிகப்பரிசுத்த முள்ளதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஹே பத்மாஸனு! அவைகளில் எதுஉத்தமமான க்ஷேத்ரமென்று நிச்சயிக்கத் தெரியாமல் மயங்குகின்றேன். ஆகையினுல், பகவானே! இந்தக்ஷேத்ர முதலானதுகளில் தர்மமார்க்கம் தவருமல் வஸிக்கின்றவர்களுக்குஇஹலோக பரலோகபலன்களைக்கொடுக்கத் தகுந்ததும், நேரே மோக்ஷத்தைத்தரத் தகுந்ததும், ஸர்வோத்தமமானதும், ஸர்வவேதார்த்தங்களாலும் நிச்சயம் செய்யப்பட்டதுமான ஓர்ஸ்தானத்தை தெரிந்து இப்பொழுது எனக்குச் சொல்ல வேணும்; ஸர்வதேவர்களுக்கும் உத்தமராகிய பிதாவே! இந்த மூன்று உலகங்களிலும் தங்களாலறியப்படாதது ஒன்றுமில்லையல்லவா!'' எனப்ரார்த்தித்தார். (32)

(ஶ்லோ)

ഏവം പൃഷ്ടവതി ബ്രഹ്മസൂനൗ നഭസാം ഹംസിസേവ്യ സംസേവ്യഃ ബ്രഹ്മ
ബ്രഹ്മാസനായ ഗണാകാരഃ ക്ഷീരോദധിഃ പ്രോക്തഃ ബ്രഹ്മാണോ
വിഹഗഃ ।

ക്ഷേത്രാണാം പരമം പവിത്രമമലം പ്രോവാച ശേഷാദ്രിയേ
ശ്രുത്വാ പ്രതിവാദിതം നിവസതാ മോക്ഷൈക്യം ഭക്തിപ്രദം ॥
(33)

(உ)

இவ்வாறு நாரத முனிவரால் கேள்கப்பட்டபொழுது, எண்ணிறந்த தேவகணங்களால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டவரும் வேத ஸமூகங்களுக்கு இருப்பிடமாகச் சொல்லப்பட்டவரும்,

மூலப்பொருளும் ஸர்வ வ்யாபகரும், தாமரைப் பூவிலுதித்தவரு மான ப்ரஹ்மதேவரானவர், க்ஷேத்ரங்களுள் உத்தமமானதும் புண்யமானதும், பரிசுத்தமானதும், வேதவேதாந்தங்களால் வெளியிடப்பட்டதும், வஸிப்பவர்களுக்கு மோக்ஷத்தைத் தரத் தகுந்ததுமான க்ஷேத்ரத்தை ஆலோஜித்து நிச்சம் செய்து கொண்டு, தேவரிஷிக்குச் சொல்லுகின்றார். (33)

(𑌮𑍂𑌲𑌂) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 ॥

